194

# VALLI

OR

# MURUGAN THIRUMANAM

10 JAN 1923

O-, 2MD1, V
N22
67730

...DURAISWAMI AIYANGAR.

# வள்ளி அல்லது முருகன் திருமணம்

ESC. NAL

894·8112
3113

Everymans Press, Madras.

# வள்ளி

அல்லது

# முருகன் திருமணம்

10 JAN 1923

ஒரு தமிழ் நாடகம்

பா. ஸ்ரீ. துரைஸ்வாமி ஐயங்கார்

இயற்றியது.

சென்னை.

1922.

காபிரைட் பெற்றது]

[விலை அணா 12.

67730

COPYRIGHT

First Edition 1915. Second Edition 1922

O-, 2MD1,V
N22

# முகவுரை

## முதற் பதிப்பு

இந்நாடகத்தை வெளியிடுவதனுல் புதியன புகுதலாகிய புகழொன்றும் நான் விரும்பினே னில்லை. நாடக நூல் களுக்கும் நடர்களுக்கும் தொன்று தொட்டு ஏற்பட்டிருக் கும் தாழ்வை ஒருவாறு நீக்கக் கருதி, நாடக நூல்வல்லார் பலர் மற்றப் பாஷைகளிலும் நூல்களிலும் இலைமறை காய் மறைபோல் நிறைந்துள்ளவைகளை எடுத்து அமைத்து நவீன நாடகங்கள் பல வெளிப்படுத்தி யிருக்கின்றன ராயினும், அவைகள் நாடகத் தொழிலாளரால் பெரும்பாலும் நடிக்கப் பெறுவதில்லை யென்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். அதற்குக் காரணம் அவைகளின் கதைப்போக்கு பாட்டிக் கதையைப்போல் விளக்கமுற்றிராமையோ அல்லது அவை கள் எழுதப்பெற்ற மனோபாவ நாடகங்களைப்போல் கூறி யது கூறல், மற்றொன்று விரித்தல், புன்மொழி புணர்த்தல் முதலிய லட்சணங்களுக்கு இடந்தாராமையோ தெரியவில்லை. ஆகவே, நோய்தீர்க்கும் ஸஞ்சீவியாயிருந்தாலும் அது சற்றே கைத்திருக்குமாயின் நோயாளிகள் அதை உட்கொள்ள வெறுப்பாராதலால், கட்டிபூசித் தீற்றுதல் என்னும் கொள் கையை மேற்கொண்டு, நாடகத் தொழிலாளர் பலரும் நடித்துக்காட்டும் கதையொன்றை எடுத்துக்கொண்டு அவர் கள் வழியிற் செல்வான்போல் சென்று, அதில் என்னுலி யன்ற திருத்தங்களைச் செய்து இந்நாடகத்தை வெளியிட் டேன். அதைக் கருதியே ஸ்வயமாக எழுதி யமைக்கக் கூடிய சில விடங்களில் நாடகத் தொழிலாளர் பெரும்பாலும் கையாளும் பாடல்களை உபயோகித்திருக்கின்றேன்.

இது நிற்க. தமிழ்க்கடவுளாகிய முருகக்கடவுள் விரும்பியது களவியலாதலாலும், அதற்காகப் பூண்டது வேடரூபமாதலாலும், கொண்ட கோலத்துக்கேற்ப ஸுப்ரமண்யர் வள்ளியிடம் சென்று தன் காதலை யுரைத்த களத்தைச் சற்றே வெளிப்படையாய் எழுதியிருக்கின்றேன்.

இந்நாடகத்தை எழுதுங்காலத்து எனக்குத் தமது ஆற்றலையும் அறிவையும் உதவிய சென்னைப் பெண்கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர் கா. நமசிவாய முதலியாருக்கு நான் மிகவும் கடமைப்பட்டிருக்கின்றேன்.

## இரண்டாம் பதிப்பு.

இந்நாடகம் முதலில் வெளிவந்தபின்னர் இதைப்பெரும்பாலும் தழுவி வேறுசிலர் இயற்றிய வள்ளி நாடகங்கள் வெளிவந்திருந்தபோதிலும், முன்னரே இதை நன்குமதித்த அறிவாளர் அநேகர் மீண்டு மிதைப் பதிப்பிக்குமாறு வேண்டினராதலின் இவ்விரண்டாம் பதிப்பை வெளியிடலானேன். இப்பதிப்பில் பாமரஜனங்களுக்கு எளிதில் விளங்காதிருந்த சில பாடல்களைக் களைந்து புதிதாகச் சில பாட்டுக்களையும் சிந்துகளையும் சேர்த்திருக்கின்றேன்.

சென்னை,<br>1922ஸு<br>ஜுலைமீ 24உ

பா. ஸ்ரீ. து.

## நாடக பாத்திரங்கள்

| | | |
|---|---|---|
| நம்பிராஜன். | .... | மலைநாட்டரசன். |
| நல்லறநம்பி. | .... | நம்பிராஜன் மந்திரி. |
| கிள்ளிவளவன். | .... | நம்பிராஜன் புதல்வன். |
| இளந்திரையன். | .... | ஷை |
| நலங்கிள்ளி. | .... | ஷை |
| ஸுப்ரமண்யர். | .... | குறிஞ்சி நிலக் கடவுள். |
| நாரதர். | .... | தேவ முனிவர். |
| வள்ளி. | .... | நம்பிராஜன் வரமகள். |
| மாலினி. | .... | வள்ளியின் சேடி. |

ஒரு விகட ஸேவகன்.

---

## கதை நிகழும் இடம்

---

வள்ளிமலையும், தணிகாசலமும்.

10 JAN 1923

# வள்ளி அல்லது முருகன் திருமணம்

காப்பு.

சீர்க்குஞ் சிறந்த கவினுக்கு மிக்க தெரிவையைக்கார்
தேக்குஞ் சிகரத் தொருமலை நாட்டுத் தினைப்புனத்திற்
கோக்குஞ் சரமுற வோரிரு கைகளாற் கொண்டணைத்துக்
காக்குஞ் சரவணன் தன்மணம் கூறிடக் காப்பவனே.

## அங்கம் 1.

---

### களம் 1.

இடம். நம்பிராஜன் அரண்மனை.

ப்ரவேசம். நம்பிராஜன், நல்லறநம்பி, கிள்ளிவளவன், இளந்திரையன், நலங்கிள்ளி, ஸேவகன் முதலாயினோர்.

நம்பிராஜன். மந்திரீ! ஈச்வர ஸங்கல்பம் இவ்வாறு இருக்குமென்று அறியாமற் போனேன். நெடுநாளாய் நான் மகப்பேறு இல்லாமல் அரிய தவம்புரிந்து புத்ரசிகாமணிகள் எழுவரை அடையப்பெற்றும், அவ்வளவோடு திருப்தி யடையாமல் மேன்மேலும் சிவபெருமானை நோக்கித் தவம்புரிந்து ஒரு பெண்குழந்தையைத் தெய்வீகமாய்ப் பெற்றேன். அவ்வளவு அரிதாகக்கிடைத்த குழந்தையின் மணக்கோலம் கண்டு மகிழும் பாக்யம் இதுவரையில் எனக்குக் கிடைக்காமற்போயிற்றே?

தெய்வம் என்னை இவ்வாறு சோதிக்கவேண்டுமென்று எத்தனை நாளாய் எண்ணியிருந்ததோ தெரியவில்லை.

நல்லறநம்பி. அரசே! இதற்கா இவ்வளவு வருந்துகின்றீர்? எப்பொழுது பெண்ணென்று பிறந்தாளோ அப்பொழுதே அவளுக்குக் கணவனும் பிறந்திருப்பா னல்லவா? காலம் வந்தால் எவனேனும் ஒருவன் தானாகவந்து மணம் புரிந்துசெல்வான். நம்முடைய ப்ரயத்னத்தில் என்ன இருக்கின்றது.

அடுத்து முயன்றாலும் ஆகுநா ளன்றி
எடுத்த கருமங்கள் ஆகா—தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்க ளெல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா

என்பது தாம் அறியாததன்றே?

நம்பிராஜன். மந்திரீ! நாம் இவ்வளவு முயன்றும் முடியாத கார்யம் என்றேனும் முயற்சியின்றி முடியுமா?

ஸேவகன். இருப்பதைக்கொண்டு திருப்தியடையாமல்இல்லாததை நினைத்து ஈச்வரனைநோக்கிக் குறையிரந்து வருந்துவோர் கதி இதுதான். நான் அப்பொழுதே சொன்னேன்: பெண்ணும் வேண்டாம் புண்ணும் வேண்டாம் என்று. கேட்டீரா?—உம், ஏழைச்சொல் அம்பலம் ஏறுமா?—ஆனால், மஹாராஜா, ஒரு ஸங்கதி: மந்திரி சொன்ன யோசனை நல்ல யோசனை. ஏனெனில் என்னளவில் அது அநுபவ ஸித்தாந்தம்.

நம்பிராஜன். மடையனைப்போல் உளறாதே. வீண்வார்த்தை பேச இதுதானா ஸமயம்?

ஸேவகன். பேஷ்! நல்ல யுக்தி! மடையர் புத்திசாலிகளை வாயடக்க வேண்டுமானால் இப்படிச் சொன்னாற் போதும். மஹாராஜா! இதில் வீண்வார்த்தை யென்ன? எனக்கு ஒரு பெண் இருந்தாள்,—ஆனால் அவள் விவாஹத்துக்காக நான் இவ்வளவு ச்ரமமெடுத்துக்கொள்ளவில்லை,—மரம் பழுத்தால் வௌவாலை வாவென்றழைப்பானேன் என்று வெறுமையிருந்தேன். பருவம் வந்தது, எவனோ ஒருவன் வந்தான். கண்ணடித்தான், கையைப் பிடித்தான், கல்யாணத்தை முடித்தான்.

நம்பிராஜன். போதும், வாயை மூடு.

கிள்ளிவளவன். அண்ணா! நமது வள்ளியை அடுத்த மலைநாட்டு அரசனுக்கு ஏன் மணம்செய்து கொடுக்கக் கூடாது?

நம்பிராஜன். மைந்தா, நமது வள்ளியை ஒரு ஸாமான்ய குறக்குலப் பெண்ணென்று மதித்தாயா? அவளுடைய அழகுக்கும், உயர்குணத்துக்கும், கல்வித்திறத்துக்கும் ஏற்றவனா, நீ சொன்ன மலைநாட்டு அரசன்?

வருத்திவன விலங்கினையே கொன்றுதிரி
வேடனைத்தன் மனமுவந்து
திருத்தியநன் மணமாலை சூட்டிடுமோ
வள்ளியெனும் தெய்வப் பெண்ணாள்
அருத்தியுடன் மணந்தாலும் அவ்விருவர்
மணந்தானிவ் வவனி மீது
பொருத்தமுறு மோமானைப் புலிவாயில்
தள்ளுவதே போலு மன்றோ?

வள்ளி அவனுக்கு மாலையிடத்தான் ஸம்மதிப்பாளா?

ஒருவேளை என்வார்த்தைக்குக் குறுக்கு சொல்லாமல் அவனுக்கு மாலையிட்டாலும் அவ்விருவர் விவாஹம் பொருத்தமுடையதாகத்தான் இருக்குமா?

இளந்திரையன். பிதா! வள்ளியின் விவாஹத்தைப்பற்றி இவ்வளவு அவஸரப்படுவானேன்? ஸரியான வரன் கிடைக்கும்போது யோசித்தாற்போகின்றது.

நம்பிராஜன். குமாரா! மணம் செய்துவைக்க வகையறியாதவன் மகளுக்குத் தவம்செய்வானேன் என்று நமது குலத்தோரெல்லாம் நம்மைத் தூற்றுவாரல்லவா? அன்றியும் வயதானபெண்ணை வீட்டில் வைத்துக்கொண்டிருப்பது தகுதியல்ல.

நலங்கிள்ளி. அண்ணா! நாம் வள்ளியை நமது குலாசாரப்படி தினைப்புனங்காக்க நியமிக்காத குற்றத்தினால் இவ்வளவு மனக்கவலையும் நேர்ந்திருக்கும். அதனால் நாம் நமது குலதெய்வத்தை அவமதித்தவர்கள் ஆகிறோம்.

நம்பிராஜன். மந்திரீ! அதற்கு ஏற்பாடுகள் செய்யவே நான் உங்களை இங்கு வரவழைத்தேன். ஆனால், யார் விஷயமாய் உங்களை வரவழைத்தேனோ அவளுடைய நிலைமையை நினைத்து எனக்கு உண்டான வருத்தத்தில் வந்த கார்யத்தை மறந்தேன்.—[ஸேவகனிடம்] அடே! நீ சென்று குழந்தை வள்ளியை நான் அழைத்ததாகச் சொல். [ஸேவகன் போகின்றான்.] மந்திரீ! நமது தினைப்புனத்தில் அமைத்திருக்கும் பரண் முதலியவை சிதையாமல் நன்றாயிருக்கின்றனவா?

நல்லறநம்பி. குழந்தை யௌவன பருவத்தை யடைந்தபோதே வழக்கப்படி அவளை அத்தொழிலுக்கு நியமிப்பீர்க

ளென்று எண்ணி அதற்கு வேண்டிய சீர்திருத்தங்களை யெல்லாம் செய்திருக்கின்றேன்.

ப்ரவேசம். ஸேவகன்.

நம்பிராஜன். எங்கே, குழந்தை வள்ளி?

ஸேவகன். ஸ்த்ரீயல்லவா, ராஜஸபைக்குத் தகுந்த அலங்காரங்கள் செய்துகொண்டு வருவதாகக் கூறினுள்.

நம்பிராஜன். அழைத்த காரணத்தை நீ அவளுக்குச் சொன்னுயா?

ஸேவகன். சொன்னேன்,—

ப்ரவேசம். வள்ளியும் மாலினியும்.

நம்பிராஜன். குழந்தாய்! வந்தனையா, இப்படிவா.

வள்ளி. பிதா! நமஸ்காரம். என்னை வரவழைத்த விசேஷமென்ன?

நம்பிராஜன். வள்ளீ! வேறென்றுமில்லை: உன்னை நமது குலாசாரப்படி தினைப்புனங்காக்க நியமிக்க வேண்டுமென்றெண்ணி உன் அபிப்ராயத்தைக் கேட்க விரும்பி இங்கு வரவழைத்தேன். உன் அபிப்ராயமென்ன?

வள்ளி. அப்பொழுதே சேடியினிடம் சொல்லியனுப்பினேனே.—ஏண்டி, நீ சொல்லவில்லையா?

மாலினி. அப்பொழுதே ஸேவகனிடம் சொல்லியனுப்பி விட்டேனே?

நம்பிராஜன். ஆனுலும், உன்வாயாற் கேட்டு மகிழ விரும்புகின்றேன்.

வள்ளி. பிதா! தாம் என்னைக் கேட்கவும் வேண்டுமோ? "வள்ளீ, இவ்வாறு செய்" என்று ஆக்ஞையிட உமக்கு ஸ்வதந்தரமில்லையா? பிதா, நம்முடைய குலா சாரம் அது வாயின் நான் அதற்குக் குறுக்கு சொல்லப் போகின்றேனா?

நம்பிராஜன். ஆனால், உனக்கு அது ஸம்மதந்தானே?

வள்ளி. பிதா! ஸர்வஸம்மதம். இவ்வளவுதானே? நான் போய் வரட்டுமா?

நம்பிராஜன். அப்படியே.

வள்ளி. பிதா! தினைப்புனத்தில் நான் மட்டும் தனித்திருக்க வேண்டுமா, கூட யாரேனும் இருக்கலாமா?

நம்பிராஜன். உன் சேடிகள் இருக்கலாம். இன்னம் யாரைக் கேட்டாலும் அனுப்புகின்றேன்.

வள்ளி. பிதா! அதோ நிற்கும் ஸேவகனையும் என்னுடன் அனுப்பவேண்டும்.

நம்பிராஜன். அவச்யம் அழைத்துக்கொண்டு போ.

வள்ளி. ஏண்டா, புறப்படலாமோ இல்லையோ?

ஸேவகன். ஆஹா, உடனே புறப்படலாம். யோகங்கூட நன்று யிருக்கின்றது.

வள்ளி. அதென்ன அப்படிப்பட்ட நல்ல யோகம்?

ஸேவகன். மாண யோகம்.

வள்ளி. பார்த்தீரா, பிதா? எப்பொழுது பார்த்தாலும் இவன் இப்படித்தான் பரிஹாஸம் செய்கிறான்.

நம்பிராஜன். அடே, குழந்தையை நல்ல யோகத்தில் அனுப்ப வேண்டுமென்று நான் நினைத்திருக்க அபசகுனம்போல் புறப்படும்போது மரண யோகமென்று கூறுகின்றாயே?

ஸேவகன். இல்லை, நாம் போகிற கார்யத்துக்கு யோகம் அப்படித்தான் இருக்கவேண்டும்.

வள்ளி. எப்படித்தான் இருக்கவேண்டும்?

ஸேவகன். நல்ல மரண யோகமாய்.

வள்ளி. ஏன்?

ஸேவகன். நாமிப்பொழுது போகிறது எவ்விடத்திற்கு?

வள்ளி. தினைப்புனத்துக்கு.

ஸேவகன். எதற்காக?

நம்பிராஜன். கவணெறிந்து பட்சிகளை யோட்ட.

ஸேவகன். பட்சிகளை எப்படி ஓட்டுவது?

வள்ளி. ஏண்டா, கல்லெறிந்தால் ஓடிப் போகின்றது!

ஸேவகன். அதுதான் இல்லை. நாம் கல்லாலடித்து வெருட்டினாலும் பட்சிகள் மீண்டும் வந்து பயிரை அழிக்கும். ஏதேனும் ஒரு பட்சியைக் கவணெறிந்து கொன்றாலன்றி அவை ஓடிப்போகா. அப்படி ஒன்றைக் கொல்லவேண்டுமானால் அப்பொழுது அதற்கு மரண யோகமாகத்தானே இருக்கவேண்டும்?

வள்ளி. அதற்காகவா சொன்னாய்?

ஸேவகன். ஆமாம். நாம் போவோமா?

வள்ளி. பிதா, நான் போய் வரட்டுமா?

நம்பிராஜன். இதோ, கவண்கல்: இதை மறந்து விடாதே.

வள்ளி. ஸோதரர்காள்! நான் போய் வருகின்றேன்.

கிள்ளிவளவன். குழந்தாய்! போய்வா. நாங்கள் அடிக்கடி தினைப்புனத்துக்கு வந்து உன்னைப் பார்த்துக்கொண்டு போகின்றோம். நீ ஒன்றுக்கும் பயப்படவேண்டாம்.

வள்ளி. நீங்கள் எனக்கு ஸகல வித்தைகளையும் கற்பித்திருக்கும்போது எனக்கென்ன பயம்?

நம்பிராஜன். குழந்தாய், ஆனால் ஒன்று. எதற்குப் பயப்படாமற் போனாலும் யானையைக் கண்டால் மட்டும் சற்றுப் பயபக்தியோடு நடந்து கொள். ஏனெனில் அது நமது குலதெய்வமாகிய முருகக் கடவுளின் மூத்தோனுக்கு ஸமானம்.

வள்ளி. பிதா, அப்படியே ஆகட்டும்.

ஸேவகன். ஆனால், நானும் அண்ணுசாமிக்குமட்டும் பயப்படவேண்டும் போலும்?

வள்ளி. அதென்னடா அது, 'அண்ணுசாமி'?

ஸேவகன். இல்லை, நம்முடைய ஸ்வாமிக்கு அது அண்ணு ஸ்வாமி என்று சொன்னேன்.

வள்ளி. இந்தாடா, இதோ பார்! தெய்வத்தை அப்படியெல்லாம் தாறுமாறாகச் சொல்லி நகையாடாதே.— பிதா, போய் வருகின்றேன்.

[எல்லோரும் செல்லுதல்]

---

# அங்கம் 1.

## களம் 2

இடம். வள்ளிமலையைச் சார்ந்த காடு.

ப்ரவேசம். நாரத முனிவர்.

நாரதர். நான் வழக்கம்போல் நித்ய கர்மாநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு ஸத்யலோகத்துக்குச் சென்று, அங்கு என் தந்தை வாணீஸமேதராய் உயிர்களை ச்ருஷ்டித்து அததற்கு ஏற்ற பதவியைக் கொடுக்கும் ஆச்சர்யத்தைக் கண்ணுற்று, அங்கிருந்து புறப்பட்டு ஆதிமத்யாந்த ரஹிதனாய், அநாதரக்ஷகனாய், துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனனாய், இஷ்ட விக்ரஹ அர்ச்சாவதாரனாய், முப்பத்துமுக்கோடி தேவர்களும் நாற்பத்தெண்ணாயிரம் ருஷீச்வரர்களும், யக்ஷ கின்னர கருட காந்தர்வ ஸித்த வித்யாதரர்களும், ஸநக ஸநந்தன ஸநாதன ஸநத்குமாராதி அஷ்ட வஸுக்களும் புடைசூழ, வக்ஷஸ்தலத்தில் திருமங்கைவாழ, சேஷ சயனனாய், ஆஹ்லாதித நயனனாய் திருப்பாற்கடலில் விருப்பாற் பள்ளி கொண்டிருக்கும் ஸ்ரீமந்நாராயணனைத் தர்சித்து, பிறகு கைலாஸத்தை யடைந்து அநேக தேவகணங்களும் பூதகணங்களும் புடைசூழ்ந் திருக்க, தும்புரு கீதம் பாட, நந்தி மத்தளம்போட, பதஞ்சலி வ்யாக்ரபாதாதி சிவ பக்த கோடிகள் ஆநந்த ஸாகரத்தில் மூழ்கியிருக்க, அர்த்தநாரீசனாய் பக்தஜன தாஸனாய், கங்காதரனாய் கௌரீ மனோஹரனாய் விளங்கும் சிவபெருமானை ஸேவித்து, யதாவிதி ஏதேனும் ஒருவிளையாடல் செய்ய

உத்தேசித்து, இம்மலைநாட்டை யடைந்தேன். என் ஸங்கல்பம் இவ்விடத்தில் ஈடேறுமென்று தோன்றுகின்றது.

புத்திரப்பே றடைந்துநம்பி பெண்மகவுக் கருந்தவமே
புரிந்தா னுகச்
சித்திரவே லவனருளாற் சிவமுனியாம் தவமுனியைச்
செம்மான் சேர
வத்திரபூ ஷணவளைய லொடுமூன்று வயதுசென்ற
மகவா யன்றே
அத்திரவேல் விழிவள்ளி அவனியில்வந் தவதார
மாகி னுளே.

இவ்வாறு தெய்வீகமாய் வள்ளிக் கிழங்கைக் கல்லியெடுத்த பள்ளத்தில் அவதரித்த வள்ளி நாயகியைக் குறிஞ்சி வேந்தன் நம்பிராஜன் எடுத்து வளர்த்துத் தன் குலாசாரப்படி தினைப்புனங்காக்க அனுப்பியிருக்கின்றுன். அவளிடம் சென்று ஏதேனும் ஒரு கலகம் விளைவிக்கின்றேன். ஹே! திருமால் மருகா! திவ்ய மனோஹரதேஜோ மயானந்த முருகா! நீ தான் எனக்கு இவ்விஷயத்தில் உதவி புரியவேண்டும்.

[ராகம்-சங்கராபரணம். தாளம்-ரூபகம்.]

முத்துக்குமாரய்யனே பக்தற்கருள்மெய்யனே (முத்து)

நித்தமன்புசெய்கு றத்தியத்தியொடி ணித்துவாழ நாதா
உத்தமர் மனத்தில் வாழும் பாதா போதா (முத்து)

கீர்த்திமேவுவே லூர்த்தலத்திலருள் மூர்த்தியான தூயா
தேவர்சிறை தீர்த்த கார்த்திகேயா சேயா (முத்து)

ஆசையோடுபல தாஸரேத்துமுரு கேசபாச நாசா
அன்பர்விச் வாஸ ஸுப்ரகாசா ஈசா (முத்து)

[செல்கின்றுர்.]

# அங்கம். 1.

## களம். 3.

இடம். வள்ளிமலைச்சாரல்: தினைப்புனத்தையடுத்த சோலை.
ப்ரவேசம். வள்ளி.

வள்ளி. [ராகம்-காம்போதி. தாளம்-ரூபகம்.]

பல்லவி.

ஸ்ரீஸுப்ரமண்யாய நமஸ்தே—மனவிஜ
கோடி. கோடி லாவண்யாய தீன சரண்யாய (ஸ்ரீ)

அநுபல்லவி.

பூஸுராதி ஸமஸ்தஜன பூஜிதாப்ஜ சரணாய
வாஸுகி தக்ஷகாதி ஸர்ப்பஸ்வரூப தாரணாய
வாஸவாதி ஸகலதேவ வந்திதாய வரேண்யாய
தாஸஜனா பீஷ்டப்ரத தக்ஷதாராக்ர கண்யாய (ஸ்ரீ)

ஹே! மயில்வாகனா! ஜகன் மோகனா! எத்தனை நாள் தான் நானிப்படி வேதனைப் படுவேன்? இது வரையிலு மாவது நான் அரண்மனையில் அநேக சேடிகள் சூழ இருந்ததனால் என் மோகத்தை வாய்விட்டுக்கூறி வருத் தப்பட வழியில்லாதிருந்தேன். இப்பொழுதோ, என் விரக தாபத்துக்கு அநுகுணமாய் நான் தனித்துயருற் றுத் தவிக்கும் வண்ணம் என்னைத் தினைப்புனத்துக்குக் காவல் வைத்து விட்டனரே! நான் காவல் புரிந்து கை சோராவிட்டாலும் உன் ஆவல் மிகுந்து மெய் சோருகின்றேனே. உனக்கு என்றுதான் என் மீது கருணை பிறக்குமோ? உன்னுடைய திருமந்திரந்தனில் வந்தடைந்து உன்னைச் சேவிக்குங்குணம் என்று எனக் காகுமோ? மிகப் பாவிக்குத்துயர் எப்பொழுது போகு

மோ? ஹா! நாதா! குழைக்காதா! அருணையச் செந்தாமரை போன்ற பாதா! சித்திர வேற்கர விநோதா! என் வருத்தம் உனக்குத் தெரியாதா? என்மேலுனக் கின்னமும் வாதா! வந்தவர்களுக்குப் பழம் புளிக்காடியும் தந்திடார் தம்மைத்தேடி வாழை யின் பழமோ மாழையின் கனியோ என்னும்படி ப்ர பந்தமொருகோடி துரிதம்பெறப் பாடி ஒரு பரிசும் பெறுதுவாடி வருந்தும் புலவரைப்போல் உன் ரூபலா வண்யத்தைப் பலவாறு என் கண்களால் வியந்தும் உன் குணுதிசயங்களை மனப்பாடம் செய்து மகிழ்ந்தும் உன் காதலைப் பெறுது வேதனைப்படுகின்றேனே. என்னை வந்து ஆட்கொள்ளமாட்டாயா? உன் ரூபத்தை என் முன்வந்து காட்டாயா? என்னை வருத்தும் இம்மன் மதனை இவ்விடம்விட்டு ஒட்டாயா? ஆடு பகை குட்டி உறவு என்று எங்கேனும் உண்டா? உன் தந்தைக்குப் பகைவனல்லவா இப்பாதகன்? அவனால் தஹிக்கப்பட் டவனல்லவா இம்மன்மதன்? அப்படிப்பட்ட சண்டா ளன் மீண்டும் உயிர்பெற்று உன்னுடைய அடியாளை வருத்த வந்திருக்கின்றானென்றால் உன் தந்தையின் பகையையும் பராக்ரமத்தையும் மேற்கொண்டு அவனைக் கொன்று உன் அடியாளைக் காக்கும் நிமித்தம் இறக்கை கட்டிக்கொண்டு வரவேண்டாமா? ‘தந்தைபோல் தனயன்’ என்பது என்னளவில் இல்லாமற் போயிற்ற?

ப்ரவேசம். மாலினி.

ஏண்டி, இத்தனைநாழிகை எங்குபோயிருந்தாய்?

மாலினி. இங்கு இருந்து நான் செய்வ தென்ன இருக் கின்றது?

வள்ளி. ஆனால் ஒரு வேலையும் இல்லாமலா நம்மை இங்கு அனுப்பினார்கள்?

மாலினி. நான் அப்படித்தான் எண்ணியிருக்கின்றேன். நீ என்னவோ ஒரு வார்த்தை சொல்வதும் அரிதாய்விட்டது. எப்பொழுது பார்த்தாலும் ஏதோ உனக்குள்ளேயே சொல்லிக்கொண்டிருக்கின்றாய். விஷயம் இன்னதென்று வெளிப்படையாகத் தெரிந்தால் வேண்டாவெறுப்பாகவேனும் கேட்டுக்கொண்டிருக்கலாம்.

வள்ளி. உண்மைதான். சேடீ! என் விதிக்கு நான் என்ன செய்வேனடி?

மாலினி. மறுபடியும் பார். விதியென்றும் கதியென்றும் சொல்கின்றாயே ஒழிய, ஸங்கதி இதுவென்று விவரமாய்க் கூறினாலல்லவா தெரியும்?

வள்ளி. சேடீ! உன்னிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்லப்போகின்றேன்?

உள்ளமே மகிழப் பரிந்துரை யாடும்
உத்தமத் தோழியர்க் குரையாக்
கள்ளமே பயின்றென் காதலை யடக்கிக்
கருத்தொடு புலம்பிநாள் கழித்தேன்
வள்ளலென் றேனும் வந்தெனைத் தீமுன்
மணந்துசெல் வான்கொலோ என்னும்
தள்ளருங் கவலை மிகுந்ததால் நானித்
தனித்துய ருற்றனன் மாதே.

சேடீ! எனக்கு நல்ல காலமும் பிறக்குமா?

மாலினி. அம்மா, இதற்கா கவலைப்படுகின்றாய்? உன் காதலுக்கு இசையாதவனும் இக்குறக்குலத்தில் இருக்கின்றானா? வள்ளீ, நீ வருந்தவேண்டாம். இதோ, இப்

போழுதே உனது பிதாவிடம் கூறி விவாஹத்தை முடித்துவைக்கின்றேன்.

வள்ளி. பைத்தியக்காரீ! நான் மற்றவர்களைப்போல் உற்றூர் உறவினரில் வரித்திருந்தால் நீ சொல்வதுபோல் அது இடையூறின்றி முடியத் தக்கதுதான். என்னுடைய காதல் உலகத்தில் முன்பின் ஒருவரும் கொள்ளாத விதமாகவன்றோ இருக்கின்றது.

மாலினி. அதென்ன அப்படிப்பட்ட விந்தையான காதல்? நான் அறியக்கூடுமா?

வள்ளி. சொல்கின்றேன் கேள்.

திருவுற்றிலகுகங்க வரையிற்புகழ்மிகுந்து
திகழத் தினமுறைந்த வாசனை மிகு
மகிமைச் சுகிர்த தொண்டர் நேசனை பல
தீயபாதக காரராகிய சூரர்யாவரு மாளவேசெய்து
சிகரக் கிரிபிளந்த வேலனை யுமை
தகரக் குழல்கொள்வஞ்சி பாலனை
மருவுற்றிணர் விரிந்து மதுபக்குலமுழங்க
மதுமொய்த்திழி கடம்ப ஹாரனை விக
சிதசித்ர சிகியுந்து வீரனை எழில்
மாகநாககு மாரியாகிய மாதராளுயர் காதலாலுடல்
மருவப் புளகரும்பு தோளனை எனை
யருமைப்பணிகொளுந்த யாளனை
தெரிதற்கரியமந்தி ரமதைத்தனதுதந்தை
செவியுட்புகமொழிந்த வாயனை இள
ரவியிற்கதிர்சிறந்த காயனை அகல்
தேவநாடுகெ டாதுநீடிய சேனைகாவல னுகைவேவரு
திறலுற்ற சிவகந்த நாதனை விரி
மறையொத்தொளிருகின்ற பாதனை

மருளற்றிட நினைந்து மனதிற்களிசிறந்து
மதுரக்கனிவுவந்து கூடியே பல
விதமுற்றிலகுசிந்து பாடியே விரி
வாரிநீரினை வாரிமேல்வரு மாரிநேர்தரு மாலினோர்திரு
மருகன் தருமணத்தை நாடியே மனம்
உருகக்கலங்குமென்றன் சேடியே.

சேடீ! இப்படி யாராவது என்னைப்போல் குலதெய்வத்தையே கொழுநனாகக் கோருவார்களா?

மாலினி. அம்மா, இது ஆச்சர்யமுமன்று அஸாத்யமுமன்று. தெய்விகமாய்ப் பிறந்தவர்கள் தெய்வத்தையே கணவனாகக் கோருவது ஒரு விபரீதமா? எல்லாம் ஈச்வரஸங்கல்பத்தால் ஈடேறும். வீணாய்க் கவலைப்பட்டுக் காலம் கழிக்காமல் அதோ கூட்டங்கூட்டமாய் வந்திறங்கி வனத்தை யழிக்கும் பட்சிகளை ஓட்டப்போவோம், வா.

வள்ளி. ஸகி! ஏதோ உன் தேறுதலைக் கேட்டுச் சிந்தையை அடக்கிக் கொண்டு கார்யத்தைக் கவனிக்கின்றேன்.

[இருவரும் செல்லுதல்]

# அங்கம். 2.

## களம். 1.

இடம். வள்ளிமலைச் சாரல் : தினைப்புனம்.

ப்ரவேசம். வள்ளியும் மாலினியும்.

வள்ளி. [ராகம்-காம்போதி. தாளம்-ரூபகம்.]

ஆலோலம், ஆலோலம், ஆலோலம், ஆலோலம், சோ !
காலையிலே துயிலெழுந்த காக்கைகளே ஆலோலம்,
சோலைதொறுங் கூடுகட்டும் தூக்கணமே ஆலோலம், சோ!

மாலினீ! நீ இங்கேயே பரணருகில் நின்று பட்சிகளை யோட்டிக்கொண்டிரு, நான் புனத்தைச்சுற்றிப் பார்த்துக்கொண்டு வருகின்றேன். [போகிறாள்.]

ப்ரவேசம். நாரதர்.

நாரதர். ஆஹா ! இட்டபயிர்கள் செழித்தோங்கிக் கதிர்களைத் தாங்கித் தலைநிறுவி நிற்பதையும் பட்சிகள் கூட்டங் கூட்டமாய்ப் பயிர்களில் வந்திறங்கித் தான்யங்களைத் தின்பதையும் அழகிய மாதர் ஆயலோட்டி நிற்பதையும் பார்த்தால் இதுதான் அத்தினைப்புனம் போலும்.

மாலினி. வள்ளீ, இங்கு வா. பட்சிகள் ஓட்டமுடியாதபடி கூட்டம் கூட்டமாய் வந்திறங்குகின்றன. சீக்கிரம் வா.

ப்ரவேசம். மீண்டும் வள்ளி.

வள்ளி. காடை கௌதாரி குயில் கருங்குருவி ஆலோலம்,
பேடைமயிலினங்காள் பிணைக்குருவி ஆலோலம், சோ !

நாரதர். ஆஹா! இவள்தான் வள்ளி போலும்! இவளழகை என்ன சொல்வேன்.

[ராகம்-சுரட்டி. தாளம்-ரூபகம்.]

பல்லவி.

எனல் அம்புனங் காக்கும் வள்ளி
எழி லென்ன சொல்லுவேன்.

அநுபல்லவி.

மீன லோசனி பால ஞன
வேலவனுக்காய் ஜனித்து
சால உரக்கத் தொனித்து (எ)

சரணம்.

அஞ்சுகமும் தன்குலமென்றிவள்
அருங்குரல் கேட்டு வருகுதே
அடர்வனத்துள மானினங்கள்
அக்கண்ணைக் கண்டு குறுகுதே
மிஞ்சும் ஸௌந்தரியம் பெருகுதே
வெற்றிக்குகனை யுற்றிங்கு
கத்திக்குரல் சோரலாி(து) (எ)

இவளை இதுவரையில் அம்முருகன் மனைவியாய் அடையாதது அவன் பெருமைக்கே ஒரு குறைவாகும். எப்படியாவது இவள் மனத்தில் முருகன்மீது மோஹத்தை விளைக்கின்றேன்.

மாலினி. வள்ளீ! யாரோ ஒரு பெரியவர் வந்திருக்கின்றார். பார்த்தால் முனிவரைப்போல் இருக்கின்றது.

வள்ளி. யார், முனிவரா? ஆஹா! முன் ஜன்மத்தில் செய்த புண்யந்தானடி!

[ராகம்-நாகஸ்வராளி. தாளம்-ஆதி.]

பல்லவி.

மாதவமாமுனியே, ஹே ஸத்குரு.

அநுபல்லவி.

போத சிவானந்த புனித ஸுபா சாரமே
ஸாதுஸத்ஜனர் போற்றும் தத்துவ ஸாரமே (மா)

சரணம்.

தீன தயா நிதியே சித்தபரவா ரிதியே
ஞானகங்காநதியே களங்கமில்லா மதியே (மா)

முனீந்த்ரா, அநுக்ரஹிக்கவேண்டும்.

நாரதர். பெண்ணே! நீ யார்? இங்கே தனித்திருக்க என்ன காரணம்?

வள்ளி. ஜாதியினிற் குறக்குலமென் தாய்பேர் நங்கை
தந்தையின்பேர் நம்பிராஜன் என்பேர் வள்ளி
கோதிலொரு வேள்விமலை யோங்கு சிற்றூர்
குடியிருப்பா மெங்கள்பதி அதுவே யாகும்
நீதியுடன் தினைப்புனத்தைக் காக்க வென்றே
நேயமிகு தந்தையெனை அனுப்பு வித்தார்
ஓதுமென்ற நீர்தாம்யார் ஊர்தா னேதிங்
குமதுபெயர் தானேதோ உரைசெய் வீரே.

இதுதான் என்வரலாறு. முனீந்த்ரா! தங்களைப் போன்ற பெரியோர் என்னைப்போன்ற தீனர்களை அநுக்ரஹிக்க இந்த வனத்தை யடைந்தது எங்கள் முன்னோர் செய்த புண்யமோ, இத்தினைப்புனத்தின் கண்யமோ, அல்லது நான்தான் செய்த புண்யமோ தெரியவில்லை.—ஸ்வாமீ! இவ்வளவு தூரம் என்னைக் கேட்ட தாங்கள் யாரென்றும் இங்குவந்த காரணம் இன்னதென்றும் நான் அறியக்கூடுமா?

நாரதர். சீரிய குயில்கள் கூவும் தினைப்புன வள்ளி கேளாய்
பேரியல் நார தன்யான் பேருல கறியு மென்னைக்
காரியம் சொல்வே னந்தக் கழுகுமா மலையில் வாழும்
எரியல் கந்த வேளின் இணையடி தொழுவான் வந்தேன்.

வள்ளி. ஆஹா! நாரதரா! சேடி, நமஸ்காரம் செய்யடி!

ப்ரவேசம்.. ஸேவகன்

அடே! நாரதமஹருஷியடா, நமஸ்காரம்செய். ஜன்மாந்தர பாபமெல்லாம் தொலையும்.

ஸேவகன். பாபந் தொலைந்தாலும் தொலையாவிட்டாலும் என்னுடைய ஸந்தேஹம் தொலைவது நிச்சயம்.

நாரதர். உன்னுடைய ஸந்தேஹ மென்ன? சொல்.

ஸேவகன். லோகத்தில் ஸ்த்ரீஜன்மம் உயர்ந்ததா புருஷ ஜன்மம் உயர்ந்ததா,—

மாலினி. அது அவரைக் கேட்பானேன்? ஸ்த்ரீ ஜன்மந் தான் உயர்ந்தது.

ஸேவகன். பிறகு, புருஷ ஜன்மந்தான் உயர்ந்ததென்று நான் சொல்லவேண்டும் போலும்? ஸ்வாமீ! பார்த்தீர்களா? ஸ்த்ரீகளைக்கேட்டால் ஸ்த்ரீஜன்மந்தான் உயர்ந்ததென்கிறார்கள், புருஷரைக் கேட்டால் புருஷ ஜன்மந்தான் உயர்ந்ததென்கிறார்கள்.

நாரதர். அவரவர் ஜன்மம் அவரவருக்கு உயர்ந்ததாகத்தான் தோற்றும்.

ஸேவகன். நல்ல தீர்மானம்!

வள்ளி. ஏன்டா, இதைப்பற்றி அவரைக்கேட்கக் காரணம்?

ஸேவகன். இல்லை, இவர் ஸ்த்ரீயாகவும் புருஷராகவும் இருந்திருக்கிறதனால் இவரைக் கேட்டால்தான் ஸந்தேஹம் தெளியுமென்று நெடுநாளாய்க் காத்திருக்கின்றேன்.

வள்ளி. ஸ்வாமீ! அப்படியும் இருந்ததுண்டோ?—ஏண்டா, எப்பொழுது இவர் ஸ்த்ரீயாக இருந்தார்?

ஸேவகன். இவர் ஸ்த்ரீயாகவும் மஹாவிஷ்ணு புருஷராகவும் இருந்து பிறந்த பிள்ளைகள்தாம் ப்ரபவ விபவ என்று சொல்லும் அறுபது வருஷங்களும்.

வள்ளி. அப்படியா!

ஸேவகன். ஸ்வாமீ! எது உயர்ந்த ஜன்மமென்று தெரிய வேண்டும்.

நாரதர். லோகத்தில் இரண்டு ஜன்மமும் ஒன்றுக்கொன்று இன்றியமையாத தாதலால் இரண்டும் உயர்ந்த ஜன்மங்களே.

மாலினி. அம்மா, இவ்வளவுக்கும் முனிவர் இங்கு வந்த காரணத்தைக் கூறவில்லையே?

வள்ளி. ஆமாம்; மறந்தேன். ஸ்வாமீ! தாம் இங்கு வந்த விசேஷ மின்னதென்று தெரியக்கூடுமா?

நாரதர். வள்ளீ! எதோ உன் கழுத்தைக் காட்டு.

வள்ளி. இதென்ன விந்தையாயிருக்கிறது! இந்தாடா, முனிவருடைய கேள்வியைக் கவனித்தாயா?

ஸேவகன். அதுதான் பெரியவர்களுக்கும் சிறியவர்களுக்கும் இருக்கும் தாரதம்யம்.

வள்ளி. இதில் பெரியவர்களென்ன சிறியவர்களென்ன?

ஸேவகன். சிறியவர்களானல் ஸ்த்ரீகளை தேகாத்யந்தம் ஏற இறங்கப்பார்த்து—ஏதோ சொல்வார்கள்.

வள்ளி. பெரியவர்கள்?

ஸேவகன். கழுத்தைப்பார்த்து விவாஹமானவர்களா இல்லையா என்று அறிந்து தகுந்தவாறு ஆசீர்வதிப்பார்கள்.

வள்ளி. அப்படியா?

நாரதர். இன்னம் விவாஹமாகவில்லை போலும்?

வள்ளி. இதென்னடி விந்தை! அதைப்பற்றி இவருக் கென்ன?

ஸேவகன். மணமகன் யாரேனும் தேடிவைத்திருக்கின்றாரோ என்னவோ?

[ராகம்-பிளஹரி. தாளம்-ரூபகம்.]

நாரதர். பருவக்காலத்தை வீணிற் பாழாக்கலாகுமோ, பெண்ணே?

வள்ளி. மருவு தலைவிதியை மாற்ற யெவராலாகும், முனியே? ஸ்வாமீ! ஈச்வராநுக்ரஹம் அப்படி இருந்தால் நாம் என்ன செய்யக்கூடும்?

நாரதர். நான் அவ்வாறு நினைக்கவில்லை. நம்முடைய நன்மை தீமைகள் நம்முடைய க்ருத்யாக்ருத்யங்களின் பலா பலன்களே ஆகும். ஆதலால்,

விதிவிதி யென்பது வீண்பேச்சு அல்லவோ, பெண்ணே?

வள்ளி. விதியில்லையெனின் விண்ணேதுமண்ணேது, முனியே? முனீந்த்ரா! விதி யென்றால் ப்ரம்மம். விதி யில்லை யெனின், ப்ரம்மம் இல்லை. அதாவது உம்முடைய பிதா இல்லை. அவர் இல்லையெனில் நீர் எது, நான்

எது, மற்றத் தெய்வங்கள்தாம் எது? ஸ்வாமீ, த்ரிகால ஞானியாகிய தாம் இவ்வாறு கூறலாமா?

நாரதர். ப்ரம்மமே இல்லையென்று நான் சொல்லவில்லை. நாமே மனமொப்பி செய்யும் கார்யங்களுக்கு நாம் தெய்வத்தைக் காரணமாக்குவது தவறென்று சொல்லவந்தேனே ஒழிய வேறொன்றும் இல்லை. இப்பொழுது நீ மனம் வைத்தால் ஒரு மணவாளனைத் தேடியடைவது அஸாத்யமா? ஆகையால்,

மணமின்றி நீயுமுன் வாழ்நாள் கழிக்கலாமோ பெண்ணே?

வள்ளி. குணமிகுதந்தை புத்திகூர்மைக் கென்செய்வது முனியே? முனீந்த்ரா! தாங்கள் கூறுவதுண்மையே. ஆயினும், தங்களுக்குத் தெரியாத விஷயமா? ஸ்த்ரீகளுக்கு என்ன ஸ்வாதந்த்ரியமிருக்கின்றது? ஆகையால் நான் விவாஹமில்லாதிருந்தால், 'ஏனிப்படி வைத்திருக்கிறீர்' என்று என் தந்தையைப் போய்க்கேளும். என்னைக் கேட்பானென்?

நாரதர். வள்ளீ! நீ சொல்வது மிகவும் விந்தையாயிருக்கின்றது. நீ விவாஹம் செய்துகொள்ளவேண்டுமென்றால் உன் தந்தை வேண்டாமென்று சொல்லப்போகிறாரா? ஆகையால்,

காலிருந்தும் நடக்கக் கருதாமலிருப்பாரோ, பெண்ணே?

வள்ளி. காலத்தனக்கிசைந்த கோலமல்லவோவேண்டும், முனியே? ஸ்வாமீ, நன்றாயிருக்கின்றது! காலிருக்கிறதென்று பிறந்த குழந்தையை எடுத்து நிற்கவைத்து ஓடென்றால் அது ஓடுமா? காலத்தை அநுஸரித்து அல்லவோ நடக்கவேண்டும்?

நாரதர். பாலுண்டு பசியாறக் காலமும் வேண்டுமோ, பெண்ணே ?

வள்ளி. பாலோடாயினுங்காலமறிந்துண்ணவேண்டுமே முனியே! ஸ்வாமீ, பாலா யிருந்தாலும் அதை எப்பொழுது வேண்டுமானாலும் குடிக்கலாமா? பகலிற் குடித்தால் தேகத்துக்குக் கெடுதியென்று தாம் சொல்லக் கேட்டதில்லையா? இவைகளுக்கே விதிகள் ஏற்பட்டிருக்கின்றன வென்றால் மற்றவைகளுக்குக் கேட்க வேண்டுமா? —[ஸேவகனிடம்] ஏண்டா ?

ஸேவகன். வாஸ்தவந்தான் ; பகலிற் பாலுண்ணக் கூடாது, இரவில் மோருண்ணக்கூடாது என்று சாஸ்த்ரமே முறையிடுகின்றதே.

நாரதர். வள்ளீ, எதற்காக நான் இவ்வளவு தூரம் உன்னோடு வாதாடுகின்றேன் தெரியுமா? நான் உனக்கு நிச்சயித்திருக்கும் கணவனுடைய பெருமை தெரிந்து நீ அவனுக்கு மாலையிடவேண்டு மென்றுதான்.

வள்ளி. நீர் குறித்துவந்த கொழுநன் யாரா யிருந்தபோதிலும் நான் அறியாப் பெருமையொன்றும் அவனிடத்தில் இருக்கப் போகிறதில்லை.

நாரதர். முருகன் பெருமைபோல் மூவுலகிலு மில்லை, பெண்ணே!

வள்ளி. பெருமைக்கும்பெருமை பெற்றாலெனக்கென்ன முனியே?

மாலினி. [வள்ளியிடம்] அம்மா, இதென்ன இப்படிக் கூறுகின்றாயே? அவரை அநுஸரித்து வார்த்தையாடினாலல்லவோ முருகனைக் கணவனாய் அடையலாம் ?

வள்ளி. [மாலினியிடம்] பைத்தியக்காரீ, அவருடைய கருத்துக்கு உடன்பட்டாற்போல் கூறினால் ஒருவேளை என்

எண்ணம் நிறைவேறாமற் போனாலும் போகும். இப்படிச்சொன்னால்தான் தனக்கு இணங்காமல் வார்த்தையாடுகிறாளல்லவா என்று எப்படியாவது தான் கொண்ட கருத்தின்படி கார்யத்தை முடித்து வைக்க வழிதேடுவார்.

நாரதர். வள்ளீ, உண்மையில் உனக்கு அவன் பெருமை தெரியாது. நான் சொல்லுகிறேன் கேள்.

[ராகம்-அடாணா. தாளம்-ரூபகம்.]

பல்லவி.

முருகன் திருமால் மருகன் பெருமை-அந்த
முக்கண்ண னுக்குமில்லை தணிகாசல (முரு)

அநுபல்லவி

இருகண்ணும் மனமும் அவனைக் கண்டால்
இளகும்படி களிபொங்கிடும்
வளருந்திரு தணிகாசல (முரு)

சரணம்.

கார்த்திகைப் பெண்களோ ராறுபேருங்கண்டு
களிக்க வரும் பாலன் எதிர்
காணுங்கிரவுஞ்ச மாமலை வேரறக்
கண்ட வடி வேலன்

ஆர்த்த அசுரரை அன்றே கொல்லும் காலன்
ஆடும் மயில்மீதி லாரோகணக் கோலன்
கோத்தகடம்ப மலரணியும் சீலன்
குகனற்றவப் புகழ்பெற்றவ
ரகமுற்றவ னிகல்கொற்றவ (முரு)

புன்னகை மேவு வதன பிம்பந்தனில்
பொருந்தும் மந்த காசம் செழும்
பொன்னிறமேனியும் பன்னிருகைகளும்
பூண்ட க்ருபா வேசம்

ஸன்னிதியில் வந்து சந்ததமும் வாசம்
தான்செய்யும் பக்தருக் கில்லை யம பாசம்
உன்னைக்கண்டால் விலகாதவன்தன் நேசம்
உலகத்தினி லவனுக்கிணை
எவருண் டுயர் தணிகாசல (முரு)

வள்ளி. இவ்வளவுதானே? சொல்ல வேண்டிய தெல்லாம் சொல்லி ஆயிற்ரு, இன்னம் ஏதேனும் மிச்ச மிருக்கின்றதா?

நாரதர். முருகன் பெருமை முழுதும் சொல்ல உன்னால்தான் ஆகுமா, என்னால்தான் ஆகுமா, இந்த யுகந்தான் போதுமா? அப்படியிருக்க இவ்வளவுதான் என்று எப்படிக் கூறுவது?

வள்ளி. இதோ பாரும்! இதுவரையிலும் ஏதோ பெரியவராயிற்றே என்று உம்முடன் வார்த்தையாடிக் கொண்டிருந்தேன். எவன் எப்படி இருந்தால் எனக்கென்ன? ஏன் வீணாய் என்னிடம் வந்து நாப்பறையடிக்கின்றீர்?

நாரதர்.—நீ அவனை விவாஹம் செய்துகொண்டு ஸந்தோஷமாயிருக்கவேண்டுமென்றுதான் உன்னிடம் வந்து சொல்கின்றேன். உன்னைப்போன்ற ஸ்த்ரீகள் உலகத்தில் எத்தனையோபேர் இருக்கின்ருர்களல்லவா, அவர்களிடமெல்லாம் போய்ச் சொன்னேனா?

**சேவகன்.** என்னவோ? எத்தனை இடத்தில் அவமானப்பட்டு இப்பொழுது இங்கு வந்திருக்கின்றீரோ!

**நாரதர்.** வள்ளீ! முருகன் பெருமையை உன் அறிவுறக் கூறுகின்றேன் கேள்.

ஈசனைக் கோரியே சாகாவரம் பெற்றும்
இமையவர் தமக்கு நாளும்
இடுக்கண்கள் செய்திடும ரக்கர்தமை யேபோரில்
இணையிலா வேல்வி டுத்தும்
மோசநி னைந்தவன் கலாபமயில் போலவர
மோகன குணுள யோக
முருகனம் மயில்மீதி லேறிவரும் பெருமையை
மூவர்க்கும் சொல்ல லரிதே
பாசநோய் நீக்கியே முக்திப்ப யன்பெறப்
பரிவோடு தொழுகின் றவோர்
பக்தருக் கெந்நாளும் நீங்காத நல்லருள்
பாலிக்க முகமா றுளோன்
பேசரிய சதுர்முகனை சிறைவைத்து மேவாட்டிப்
பிரணவ சடாட்ச ரத்தை
பித்தனுக் குபதேசம் செய்தவோர் அருமையின்
பெருமைநா னென்ன சொல்வேன்.

**வள்ளி.** இதென்னடி பெரிய கஷ்டமாய்ப் போயிற்று? [சேவகனைப் பார்த்து] இந்தாடா, இவரை அனுப்பிவிட வழிதேட மாட்டாயா?

**சேவகன்.** ஓய்! கல்யாணம் வேண்டாமென்றால் நீர் கட்டாயப்படுத்துவானேன்? வந்ததற்கு ஏதேனும் ஒரு காரியத்தைச் செய்துவிட்டுத்தான் போகவேண்டு மென்றிருந்தால், எனக்கு வேண்டுமானல் ஒரு காற்கட்டைக் கட்டிவிட்டுப்போமே?

நாரதர். வள்ளீ, ஆனால் என் சொல்லைக் கேட்கமாட்டாயா? முருகனை ஸாமான்ய மானவ னென்று எண்ணாதே. உன்மனம் மட்டும் மாறுவதுண்டாயின் இன்னம் அவன் பெருமையையும் அழகையும் எடுத்துரைக்கின்றேன். முருகன் ரூபலாவண்யத்தைக் கவனித்தாயா? ஆறு முகம், பன்னிரண்டுகை,—

வள்ளி. இருபத்தினான்கு கால்?

நாரதர். இல்லை, இரண்டே கால்கள்.

வள்ளி. இதென்ன கணக்கு? ஆறுமுகம், பன்னிரண்டுகை, இருபத்தினான்கு கால், நாற்பத்தெட்டடி என்றிப்படிப் படிப்படியா யல்லவோ சொல்லவேண்டும்?

ஸேவகன். அப்படி யிருந்தாலும் அதில் ஆச்சர்ய மொன்று மில்லை. ஏனெனில் அவர்களுடைய வம்சமே அப்படிப் பட்டது.

வள்ளி. எப்படிப்பட்டது?

ஸேவகன். அவனுக்கு மாறுதலை, தந்தைக்கு மாறுதலை, அண்ணனுக்கு மாறுதலை.

வள்ளி. என்றால்?

ஸேவகன். இவரிப்பொழுது சொன்ன பேர்வழிக்குத்தான் ஆறுதலை யாயிற்று? அவனுடைய தந்தைக்கும் ஆறு தலை; என்றால், கங்கைத்தலை. அண்ணனுக்கு மாறு தலை: உடலுக்கு நேர் விரோதமான தலை. ஆறுதலையை யும் சேர்த்து ஒரே தலையாகப் பார்த்துப் பிடித்துக் கொண்டார்.

வள்ளி. ஏண்டா! என்னவோ சொல்லப்போகிறா யென்று பார்த்தேன். பெரியோரை அப்படி யெல்லாம் பரி

ஹாஸ்யம் செய்யாதே. [நாரதரிடம்] ஸ்வாமீ, இந்தாரும், தயவு செய்து போய்வாரும்.

நாரதர். வள்ளீ, போவது இருக்கட்டும், நான் சொல்வதைக் கேள்.

வள்ளி. இதென்ன வேதனையடி! ஸ்வாமீ, என்னுடைய குல மென்ன தெரியுமோ?

நாரதர். குலத்தைப்பற்றிக் கவலையே வேண்டாம்.

வள்ளி. இந்தாரும், நான் கேட்டதற்குப் பதில் சொல்லும்.

நாரதர். ஸரி. குலம் குறக்குலம்.

வள்ளி. குறக்குலத்துக்குக் கோபம் வந்தால் ஒருவராலும் அடக்கமுடியாதென்று உமக்குத் தெரியுமோ இல்லையோ?

நாரதர். இதில் கோபம் வரும்படியான வார்த்தை என்ன இருக்கின்றது?

அனியாய மாக உன்றன் அழகிய பருவக் காலம்
தனியாகக் கழிவ தெண்ணித் தகுந்தநல் வரனைத் தேடி
இனியாகி லுங்கொள் வாயென் றெடுத்துரைத் தேனு னக்கே
சனியான துனைத்தொடர்ந்தால் தான்கேட்க விடுமோ மாதே.

யாரோ ஒரு குறவனை மணந்து கெட்டுப்போகப் போகிறாயே என்று உன்னிடம் அன்பு கூர்ந்து உனக்கு உத்தம வரனைத் தெரிந்துரைத்தேன். பிறகு, உன் னிஷ்டம்.

வள்ளி. ஐயோ பாவம்! ஆடு நனைகிறதென்று கோநாய் குந்திக்கொண் டழுததாம்!

[ராகம்-சௌராஷ்ட்ரம். தாளம்-மிச்ரசாபு.]

வள்ளி. எங்கள் குறக் குலந்தனக்கு
பங்கமொன்று சொன்ன தென்ன—முனியே?

நாரதர். இழுக்காக என்ன சொன்னேன்
பழிக்காளாக்கிட என்னை—பெண்ணே?

வள்ளி. செங்குறிஞ்சி வேந்தன் எந்த
வேந்தருக்கும் மேலோனும்—முனியே!

நாரதர். செப்பிய வேந்து வெண்கிரி
சிவஸுப்ரமண்யனேகாண்—பெண்ணே!

வள்ளி. செட்டிமக னொருவனை நீர்
எவ்வளவோ புகழ்ந்துரைத்தீர்—முனியே!

நாரதர். ச்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹார
கர்த்தருக்கும் கர்த்தன் கண்டாய்—பெண்ணே!

வள்ளி. அஷ்டவித்திகளும் எங்கள்
பெட்டைக்குட்டிகளும் செய்யும்—முனியே!

நாரதர். அளவிறந்த வித்தி முக்தி
விளைநிலம் தென்கழுகுமலை—பெண்ணே!

வள்ளி. பார்க்கையிலே பசுவேஷம்
மார்க்கமெல்லாம் புலிவேஷம்—முனியே!

நாரதர். பக்தனுடைய மகிமை
முற்றிலும் நீ பார்த்தறிவாய்—பெண்ணே!

வள்ளி. எங்காணும் வீண்வார்த்தை
போங்காணும் நாரத—முனியே!

நாரதர். இருவர் மணம் பாராமல்
ஒருபோதும் போவதில்லை—பெண்ணே!

வள்ளீ, உன்னைச் சொல்லி பயனில்லை. உன்குலத்தைச் சொல்லவேண்டும்.

காட்டில்வாழ் வேடுவர்தங் கன்னிகையே பல்வளஞ்சேர்
நாட்டிற் பிறந்தாயேல் நாகரிகம்—வேட்டுவருக்
கென்னகுலம் என்னநலம் என்னவளம் என்னஸுகம்
என்ன பெருமை இயம்பு.

வள்ளி. என்ன, என்ன? என்ன சொன்னீர்? நாட்டில் பிறந்தால் தான் நாகரிகமோ? ஆனால், காட்டுக்கு ஒரு பெருமையும் இல்லையோ?

நாரதர். ஒரு பெருமையும் இல்லை யென்பது உண்மையே. நீயே அதற்கு நிதர்சனமா யிருக்கின்றாய்.

வள்ளி. போகட்டும், நான் கேட்பதற்குப் பதில் சொல்லும். தாம் அணிந்திருக்கும் சந்தனம் எங்கு உண்டானது? காட்டிலா, நாட்டிலா?

நாரதர். காட்டில் தான்.

வள்ளி. இந்தச் சடைமுடிக்கு ஆதாரமாகிய பால் முதலியவைகளும் யாகாதி க்ருத்யங்களுக்கு வேண்டிய பொருள்களும் எங்கே கிடைக்கின்றன?

நாரதர். காட்டில் தான்.

வள்ளி. தம்மைப்போன்ற தவச்ரேஷ்டர்கள் தவம் செய்வது காட்டிலோ நாட்டிலோ?

நாரதர். காட்டில் தான்.

வள்ளி. இன்னம், நாட்டிலுள்ளவர்களுக்கு ஜீவாதாரமாகிய ஒஷதிகள் எங்கிருந்து கிடைக்கின்றன?

நாரதர். எல்லாம் காட்டில் தான். ஆனால் இவ்வளவுக்கும் பெருமை எவ்விடத்தில்? நாட்டிலல்லவோ? இவ்விடத்தில் அவைகளை மதிப்பவர்கள் யார்? ஒரு வசனம் கேட்டதில்லையா நீ: காட்டில் மலர்ந்த கந்த புஷ்பத்தைப்போல், என்று? அதன் கருத்தென்ன? ஆகையினால்தான் சொல்கின்றேன்: நீயும் இக்காட்டைவிட்டுக் கந்தவேளை மணம்புரிந்தால் பெருமை யுண்டென்று.

வள்ளி. மேன்மேலும் அந்த வார்த்தையையே கூறுகின்றீர்?

ஸேவகன். கேவலம் ஒரு ஸேவகனுமன்றோ எஜமானி சற்றுக் கடிந்து பேசினால் உடனே அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டுப் போய்விடுகிறான். உமக்கேன் இப்படிப் பட்ட மானங் கெட்ட பிடிவாதமோ தெரியவில்லை. உம், உம்மைச் சொல்லி பயனில்லை. இந்த வ்யாபாரஸ்தருக்கே பொறுமை அதிகம்.

நாரதர். வள்ளீ! எதற்காக இவ்வளவு தூரம் சொல்கின்றேனென்று நீ தெரிந்துகொள்ள வில்லையே!

இந்தவெங் கானி லேவர் திப்படித் தனிய ளாகிச்
செந்தினைப் புனங்காத் திந்தச் சிறுகுடில் வாழ்தல் நன்றோ --
கந்தன்சொற் பணிய எங்கள் கழுகுமா மலைக்கே வந்தால்
ஸுந்தர மானே நித்ய ஸுகத்தினி விருக்க லாமே.

வள்ளி. வேண்டாமே. நான் கழுகுமலைக்கும் வரவில்லை, எனக்கு ஸுகமும் வேண்டாம்.

ஸேவகன். பேரைப்பார்! கழுகுமலை! அம்மா, இவர் சொன்ன பேர்வழியை மணந்தால் இப்படிப்பட்ட வேடிக்கையான பேருடைய ஊர்கள் அநேகம் காதில் விழும்.

வேண்டுமானல் நான் இரண்டொன்றைச் சொல்லட்டுமா? கழுகுமலே, அடுத்தாற்போல் குருவிகுளம், அடுத்தாற்போல் வானரமுட்டி, அப்புறம் சேவல்பட்டி இப்படி போகும்.

நாரதர். வள்ளீ, பேர் உன்னுடைய செவிக்கு இனிமையாக இல்லாததனுலேயே ஊரும் அப்படித்தான் இருக்குமென்று எண்ணுதே.

தெள்ளுதமி ழுக்குதவு சீலன் துதி
    செய்யுமொரு பக்தர்க்கனு கூலன் வளர்
செழிய புகழ்விளேத்த கழுகுமலே வளத்தைத்
    தேனே சொல்லு வேனே.

வெள்ளிமலே யொத்தபல மேடை, முடி
    மீதினிலே கட்டுகொடி யாடை அந்த
வெய்யவன் நடத்திவரு துய்யவிரதப் பரியும்
    விலகும் படி யிலகும்.

வீதிதொறும் ஆதிமறை வேதம் சிவ
    வேதியர்கள் ஓதுசாம கீதம் அதை
மின்னுமலர்க் காவதனில் துன்னுமடப் பூவையுடன்
    விள்ளும் கிள்ளேப் புள்ளும்.

சீதளமுகிற்குவமை கூறும் நிறச்
    சிந்துரங்கள் சிந்துமதத் தாறும் உயிர்ச்
சித்திர நிகர்த்தமின்னர் குத்துமுலேக் குங்குமச்செஞ்
    சேறும் காதம் நாறும்.

நித்தநித்த முங்கணவ ரோடுங் காம
    நிலேயிற் பிணங்கிமனம் வாடுங் கரு
நீலவிழியார் வெருத்த கோலமணி மாலேரத்ந
    நெருங்கும் எந்த மருங்கும்.

முத்துகடல் ஒத்தகடை வீதி முன்பு
கட்டு தாளப்பந்தலின் ஜோதி எங்கும்
காட்டுவதால் ஈரிரண்டு கோட்டுமத யானையிற்பல்
களிறும் நிறம் வெளிறும்.

முத்தமிழ்சேர் வித்வஜனக் கூட்டம் கலை
முற்றிலுமுணர்ந்திடுகொண்டாட்டம் நெஞ்சின்
முன்னுகின்றபோதுதொறுந் தென்மலையின் மேவுகுறு
முனிக்கும் அச்சம் ஜனிக்கும்.

எத்திசையும் போற்றமரர் ஊரும் அதில்
இந்திரன் கொலுவிருக்கும் சீரும் மெச்சும்
இந்நகர ரத்தினை யடைந்தவர்க் கதுவும் வெறுத்
திருக்கும் அரு வருக்கும்.

இப்படிப்பட்ட திவ்ய க்ஷேத்திரத்தில் கோயில் கொண்டிருப்பவன் எப்படிப்பட்ட புண்ய புருஷனாயிருக்க வேண்டுமென்று யோசித்துப்பார். நான் சொல்வதைக் கேள். உனக்கும் பெருமை ; உன் குலத்துக்கும் பெருமை ; எல்லா விதத்திலும் நன்மை. ஆகையால்,

இழிகுலத்தி லேபிறந்த எக்கங்கள் தீர
வழியதனை யேவேண்டு வாயேல்—எழிலுடைய
புள்ளிமயி லேறும் புனிதனையே சேர்தற்கு
வள்ளிமயி லேமனது வை.

வள்ளி. நான் என்னவோ என்று நினைத்தேன். என்னையும் என் குலத்தையும் இகழ்ந்து தன்னையும் தன் வரனையும் புகழ்ந்து என்னை நிர்பந்திப்பதை நினைத்தால் இவருடைய வ்யாபாரமே இது தான் போலும். ஸ்வாமீ,

பித்தன்மக னிடத்தினிற்போய் பெய்வளைக்கை
வள்ளியெனும் பெயரை வாய்ந்த

கொத்துமலர்க் குழலாளைக் கூட்டிவைப்பே
னென்றுமிகக் குளிரப் பேசிச்
சித்தமது மகிழ்ந்துதா னேயடைந்தீர்
போலுமிதைச் செய்தற் காக
எத்தனைபொன் பேசிவந்தீர் அத்தனைக்கும்
தினைதருவேன் ஏகு வீரே.

நாரதர். வள்ளீ, என்னுடைய தொழில் அது அன்று. ஆனால்

தாட்டிகத்தால் தலைபுரண்டு தத்திவிழும்
துஷ்டர்களைத் தரணி மீது
வாட்டிமிக வருத்துதற்குக் காரணமாம்
கோள்புகன்று வருவேன் மற்றும்
நாட்டிலுள பக்திமுதிர் அன்பினர்க்குப்
பரிவாக நாட்டும் முக்தி
கூட்டிவைக்கப் பிறந்தவன்யா னுதலினால்
உன்சொல்லும் குறைவு றாதே.

வள்ளி. நீர் என்ன சொன்ன போதிலும் என்னிடத்தில் உம்முடைய ஜபம் செல்லாது. வந்த வழியைப் பார்த்துக்கொண்டுபோம்.

நாரதர். உண்மைதானா? என் ஜபம் செல்லுமோ செல்லாதோ பிறகு பார்க்கின்றேன்.

[நாரதர் செல்லுதல்]

வள்ளி. அப்பா!

ஸேவகன். போய்விட்டாரா? அம்மா, மஹாகலகக்காரப் பேர்வழி இவர். தாங்கள் என்னவோ முகம் கொடுத்துப்பேசுகிறீரே என்று வெறுமை யிருந்தேன். இல்லாவிட்டால் அவரைப் பார்த்ததும் எனக்கு வந்த கோபத்தில் என்ன செய்திருப்பேன் தெரியுமா?

வள்ளி. இந்தாடா, உனக்கேன் கோபம் வரவேண்டும்?

ஸேவகன். ஏன் கோபம் வரவேண்டுமா? ஒரு நாள் இவர் என்ன செய்தார்: என்னிடம் வந்து, 'நான் ஜன்மாந்தரங்களையெல்லாம் எடுத்துச் சொல்வேன்' என்று சொன்னார். பெரியவரா யிருக்கின்றாரே, உண்மைதானோ என்னவோ என்று, 'என்னுடைய ஸம்ஸாரம் போன ஜன்மத்தில் என்னமாயிருந்தாள் சொல்லும்' என்று கேட்டேன். அதற்கு இவர் 'உன் ஸம்ஸாரம் போன ஜன்மத்தில் ஒரு நாய்' என்று சொன்னார். எங்களிருவருக்கு மிருந்த அந்யோந்யத்தைக்கொண்டு இவர் சொல்லாமலே அவள் நாயாகத் தான் இருந்திருக்கவேண்டு மென்று எனக்குத் தெரிந்திருந்தாலும், இவர் சொல்லைப் பரிக்ஷிப்போமென்று, 'ஆமாம் உம்முடைய வார்த்தையை எப்படி நம்புவது' என்று கேட்டேன். 'வேண்டுமானால் நீ ராத்திரி படுத்துறங்கும்போது பார்: அவள் உன் காலை வந்து நக்குவாள்' என்று சொன்னார். ஸரிதான் என்று புறப்பட்டேன். உடனே இவர் என்ன செய்தார்: என் ஸம்ஸாரத்தினிடம் போய் 'ஏண்டி, போயும் போயும் போன ஜன்மத்தில் ஓர் உப்புக்குறவனா யிருந்தவனைக் கல்யாணம் பண்ணிக்கொண்டாயே' என்று சொன்னார். அந்த அசடு அதை மெய்யென்று நம்பி, 'எப்படி அதைத் தெரிந்து கொள்வது' என்று கேட்டாள். 'வேண்டுமானால் அவன் தூங்கும்போது அவன் காலை நக்கிப்பார், உப்புக் கரிக்கும்' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். நான் ராத்திரி யெல்லாம் தூங்குகிறவனைப்போல் பாசாங்கு செய்ய, அவள் ஸமயம் பார்த்துக் காலை வந்து நக்கினாள். 'அத்து நாயே!' என்று அவள் கையைப்

பிடித்துக்கொண்டேன். 'சீ! உப்புக்குறவா' என்று அவள் என் முகத்தில் இடித்தாள். 'ஆனால் நீ நாயல்லவா, நாரதர்தான் எனக்குச் சொன்னாரே' என்று சொன்னேன். அதற்கவள் 'அந்த நாரதரே நீ உப்புக் குறவனென்று எனக்கும் சொன்னாரே' என்று சொன்னாள். ஸரிதான், இவ்வளவும் நாரதர் கட்டிவிட்ட கலகக் கதை என்று தீர்மானித்துப் பேர்வழியை அது முதல் தேடிக்கொண்டிருந்தேன். பிறகு, அவளும் இறந்தாள், எனக்கு அந்த நினைவும் ஒழிந்தது.

ப்ரவேசம். நாரதர்.

இதோ, மறுபடியும் வருகின்றார்.—ஸ்வாமீ, நீர் நின்ற இடத்தில் ஓர் கன்றைக் கட்டுகின்றேன், தயவுசெய்து போய் வாரும்.

நாரதர். வள்ளீ, கடைசி முறை சொல்கின்றேன். நாரதர் மனம் வைத்தால் பாரதில் ஆகாததில்லை. உனக்கும் முருகனுக்கும் மணம் செய்துவைக்காமற் போனால் என் பேர் நாரதனா பார்.

திங்களொளி யேபோலும் முகமேவும்
வள்ளியெனுந் தெய்வப் பெண்ணே
சங்குதமிழ் இசைசூழுந் தணிகைதனி
லேவாழும் சண்மு கன்கேள்
எங்கள்மனம் நீங்காத எழில்வேலன்
தன்னோடி ணங்கி நிற்க
உங்கள்மணம் பாராமல் ஒருபோதும்
போவதில்லை உண்மை காணே.

வள்ளி. எதோ, பார்க்கவேண்டும். நீரே நாரதரானால் அப்படிச் செய்யவேண்டும்.

[எல்லோரும் செல்லுதல்]

# அங்கம் 2.

---

## களம் 2.

இடம். திருத்தணிகை; ஸுப்ரமண்யர் கோயில்.

[பக்தர்கள் காவடி யெடுத் தாடியும் பாடியும் முருகனைத் துதித்துக் காணிக்கை செலுத்திவிட்டுச் செல்லுதல்]

ப்ரவேசம். நாரதர்.

**நாரதர்.** நாதவிந்து கலாதீ நமோநம
வேதமந்த்ரஸ்வரூபா நமோநம
ஞானபண்டித ஸ்வாமீ நமோநம வெகுகோடி

ஞானசம்பு குமாரா நமோநம
பூமியந்தரிபாலா நமோநம
நாகபந்த மயூரா நமோநம பரர்சூரர்

சேததண்ட விநோதா நமோநம
கீத கிண்கிணிபாதா நமோநம
தீரசம்ப்ரம வீரா நமோநம கிரிராஜ

தீபமங்கள ஜோதீ நமோநம
தூபரம்பரை சீலா நமோநம
தேவகுஞ்ச ரிபாகா நமோநம அருள்தாராய்

[ஸுப்ரமண்யர் ப்ரத்யக்ஷமாதல்.]

**ஸுப்ரமண்யர்.** நாரதா! இவ்வளவு தூரம் வந்த விசேஷ மென்ன?

**நாரதர்.** திருமால் மருகா! நான் த்ரிலோகங்களுக்கும் சென்று ஆங்காங்குள்ள ஆச்சர்யங்களைக் கண்டு வியந்து அருகி

னுள்ள ஒரு புனத்தின் வழியே வரும்போது ஓர் அரிய பொருளைக் கண்டேன். அதை உனக்கு உரிய தாக்கும் பொருட்டு இவ்விடம் வந்தேன்.

ஸுப்ரமண்யர். அப்படியா? அதென்ன அப்படிப்பட்ட அரிய பொருள்?

நாரதர். மாங்கனிக்குந் தேன்கதலி வண்கனிக்கு மேலினிக்கும்
பூங்கனியைக் கண்டுமனம் பூரித்து—நான் கனிந்தேன்
ஐயா முருகையா அக்கனியை இக்கணமே
கொய்யாமற் கொய்தணைத்துக் கொள்.

ஸுப்ரமண்யர். நாரதா! நீ இவ்வாறு மயக்கவணியாற் கூறு வதாலும் கொய்யாமற் கொய் யென்பதனாலும் அதில் ஏதோ விசேஷமிருப்பதாய்த் தோற்றுகின்றது. ஆகையால்,

[ராகம்-அடாணா. தாளம்-ரூபகம்].

மார்க்கத்திற்கண்ட கனிதனக்குமுள்ள
ச்லாக்யமென்ன முனியே ?

நாரதர். அது—பார்க்கும்பொழுதே புலன்களுக்கெல்லாம்
சுவைதரும் தீங் கனியே.

ஸுப்ரமண்யர். அப்படிப் பார்க்கும்பொழுதே சுவைதரும் கனியாய் இருந்தால் அதை இதுவரையிலும் எத்தனை யோபேர் பார்த்திருப்பார்களல்லவா ? ஒருவேளை அது மனிதருடைய கைக்கு எட்டாத தாயிருந்தாலும்,

பட்சிகள்கண்டால் பறந்தோடி யிந்நேரம்
பக்ஷித்திடாதோ சொல்வீர் ?

நாரதர். அதைப் பட்சிகள் கண்டாற் பறந்தோடுமாதலால்
பட்சமுடன் செல்வீர்.

ஸுப்ரமண்யர். நாரதா! ஒருவேளை அது மற்றவர் கையில் அகப்படாமல் அப்படியே இருக்கிறதென்று வைத்துக் கொள்வோம். நான் போய்ப் பார்க்கும்போது எனக்கு

எட்டாத கொம்பில் இருந்திடினக்கனி
எப்படிக் கொய்திடலாம் ?

நாரதர். சொல்லைத் தட்டாமல் நீஅதைச் சார்ந்துநின்றாலது
தானே வந்தெய்திடலாம்.

ஸுப்ரமண்யர். அப்படியா? நாரதா, நீ சொன்ன கனி மற்றக் கனிகளின் மத்தியில் இருந்தால் இதுதான் நீ சொன்ன கனி யென்று தெரிந்துகொள்ள

வளர்ந்து முதிர்ந்த செழுங்கனி தனக்கு
வாய்த்த குறிகளுண்டோ ?

நாரதர். மிகக் குளிர்ந்த முகமுண்டு கொங்கை யிரண்டுண்டு
கோதிலாக் கண்களுண்டு.

ஸுப்ரமண்யர். அப்படியா? இப்பொழுது தான் என் ஸந்தேஹம் நீங்கியது. நாரதா,

பெண்களுக் கேற்ற உறுப்பை யுரைப்பதால்
பேசுமோ வாய்திறந்தே ?

நாரதர். ராகப் பண்களுக்கெல்லாம் சுவைதருமே அந்தப்
பைங்கிளி வாய் திறந்தே.

ஸுப்ரமண்யர். அப்படியா? நாரதா, இப்படிப்பட்ட அரிய பொருளை புனத்தினருகே கண்டதாகக் கூறினையே,

பனிமலர்ச்சோலையி லிருக்குங்கனியப்
பைம்புனத்தி லேதூ ?

நாரதர். அதைக்-கனியென்றுரைத்தாலும் கன்னியென்றாலும்
கருத்து வேறாகாது.

ஸுப்ரமண்யர். நாரதா! நீ கூறியதில் உன் கருத்தைத் தெரிந்து கொண்டேன். அக்கன்னிகையின் ஊரும் பேரும் யாதோ?

நாரதர். ஊர் சிற்றூர். பேர் வள்ளி.

ஸுப்ரமண்யர். யாருடைய மகள்? என்ன தொழில்?

நாரதர். வனக்குற வேடர்க் கரசன் மகள். தினைப்புனக் காவல் தினம் செய்பவள்.

ஸுப்ரமண்யர். நாரதா! அம்மாதரசி என் காதலுக் கிசைவாளா? எதோ, அவள் அழகையும் குணத்தையும் எனக்குச் சுருக்கமாய் எடுத்துரைத்து என் செவிகளுக் கின்பமூட்டு.

நாரதர். [ராகம்-அடாணா. தாளம்-ரூபகம்.]

பல்லவி.

சித்திரப்பச்சைக் கச்சைகட்டிருக்கு முலைமாளுள்-உன்றன்
சித்தம் களித்தொரு முத்தமிடமையலானுள்.

அநுபல்லவி.

சித்தர் பரவும் ப்ரவித்தி விலாஸ
செய்ய திருக்கழுகாசல வாஸ
நர்த்தமிடும் சிவனுருக்குப தேச
நடைமயில் மீதுற்றவேல் முருகேச

நிறைபெற் றுசிதபொற் புறமிக
இளகிய தளிர்புரை மாது
நறைபெற் றிலகிய மலரணை
தனி யின்பத்துடனிப்போது (சித்)

சரணம்.

கெண்டைவிழி களிரண்டும் சிறைவரி வண்டு செழுங்
கிஞ்சுக மொழி யென்சொல்லுவேன் சீனிக்கற்கண்டு
கொண்டலேயே நிகர்க்குஞ் சுருண்டகுழல் கண்டு தவம்
கொண்டு ஸுரர்தினம் தொண்டுசெயும்தெய்வப்பெண்டு
எண்டிசையும் புகழ் கொண்ட வாழைத் தண்டு
இணையெனச் சொல்லப்போமே தொடை ரெண்டு
தண்டரள ஸ்தனமோ மல்லிகைச் சண்டு
தனரேகை மத்ஸ்யரேகை எல்லா மவட் குண்டு
தருநல் லெழிலுற் றிலகுந் தனுவைப் பொருநன் னுதலுந்
தருகற் பகநிகர் ஒருசிறு கொடியிடை யுடையாள்
மருவும்சிறைமயில்வெட்கிடஅணிமணியுருளுறுநடையாள் (சித்)

ஸுப்ரமண்யர். நல்லது! நாரதா, இதோ நான் சென்று அவளை உன்னிஷ்டப்படி மணம் புரிந்து வருகின்றேன்.

நாரதர். முருகா! ஆனால் ஒன்று: நீ உன் ஸ்வரூபத்தோடு செல்லாமல் அவள் குலத்து வேடனைப்போல் வேஷம் பூண்டு செல்ல வேண்டும்.

ஸுப்ரமண்யர். நாரதா! அப்படியே ஆகட்டும்.

நாரதர். ஷண்முகா! நான் போய் வருகின்றேன்.

ஸுப்ரமண்யர். நல்லது, முனீந்த்ரா!

[ஸுப்ரமண்யர் மறைகின்றார்]

நாரதர். ஆஹா! இன்றல்லவா நான் தன்யனானேன்! வள்ளியின் கர்வத்தை அடக்க வழி தேடியாயிற்று. ஒருவேளை முருகனுக்கு அவள் எளிதில் கைவசப்படாமற் போனபோதிலும் எனக்கு ஸந்தோஷமே. ஏனெனில், தன்னினும் அழகுடையவர் வேறொருவரும் இல்லை யென்று எண்ணியிருக்கும் அவனுடைய செருக்கை

யும் ஒருவாறு அடக்கியவனுவேன். அதைக் கருதியே வேட ரூபத்திற் செல்லும்படி கூறினேன். எது எப்படியாஞலும் இவ்விருவர் விவாஹத்தையும் நான் கண் குளிரக் காணுமற் போவதில்லை. வள்ளியின் சபதமோ, என் சபதமோ, எது ஈடேறுமோ பார்க்கின்றேன்.

தொல்லைமுதல் தானென்று மெல்லியிரு பேதங்கள்
சொல்லுகுண மூவந்த மெனவாகி
துய்யசதுர் வேதங்கள் வெய்யபுல ஞனைந்து
தொய்யுபொரு ளாறங்க மெனமேவும்

பல்லபல நாதங்கள் அல்கபசு பாசங்கள்
பல்குதமிழ் தானென்றி யிசையாகிப்
பல்லுயிரு மாயந்த மில்லசொரு பாநந்த
பௌவமுற வேநின்ற தருள்வாயே

கல்லுருக வேயின்கண் அல்லல்படு கோவம்பு
கல்வருக வேநின்று குழலூதுங்
கையன்மிசை யேறும்பன் கொய்யசடை யோனெந்தை
கைதொழமெய்ஞ் ஞானஞ்சொல் கதிர்வேலா

கொல்லைமிசை வாழ்கின்ற வள்ளிபுன மேசென்று
கொள்ளைகொளு மாரன்கை யலராலே
கொய்துதழை யேகொண்டு செல்லுமழ வாகந்த
கொல்விமலை மேனின்ற பெருமாளே.

[நாரதர் செல்லுதல்]

# அங்கம் 2.

---

## களம். 3.

இடம். தினைப்புனம்.

ப்ரவேசம். வேடரூபத்தில் ஸுப்ரமண்யர்.

ஸுப்ரமண்யர். ஆஹா! முன்னொரு காலத்தில் நான் தேவாஸுர யுத்தத்துக்குச் சென்றிருந்தபோது வழியில் என்னைக்கண்டு கழிபெருங் காதல் கொண்டு தம்மை மணம் புரியும்படி வேண்டிய அமுதவல்லி சுந்தரி என்னும் தெய்வப் பெண்களுக்குக் கொடுத்த வாக்கின்படி ஐராவதத்தின் வயிற்றில் தெய்வ யானை யென்னும் பெயரோடு வந்து பிறந்த ஒருத்தியை மணம்புரிந்தேன். இப்பொழுது மான்மகளாய்வந்து தோன்றியுள்ள வள்ளியை நாரதர் மொழியால் மணம்புரியக் கருதி இவ்வேஷத்தைத் தரித்தேன். நான் என் ஸ்வய ரூபத்துடன் செல்வேனாயின் என்னுடைய அழகைக்கண்டு யார் தான் என்னை மணம் புரியார்? அவ்வித ஸுலப மார்க்கத்தில் அவளைப் பெற மனமின்றி, 'ஊடலே காமத்துக்கு இன்பம்' என்றுணர்ந்து, அவள் என்னை இன்னானென்று அறியாமல் வெறுத்து ஒறுத்துச் சிறிச் சினந்து கன்றிக் காய்வதைக் கண்டு மகிழ்ந்து, பிறகு என் காதலுக்கு இணங்கும்படி செய்து கொள்கின்றேன்.—ஆஹா! இதுதான் அவ்வேந்திழை வாழும் தீந்தினைப் புனம்போலும்? இப்பூம் பொழிலே இவ்வளவு எழிலோடு விளங்குமாயின் இதனுள்ளிருக்கும் வள்ளி இன்னம் எவ்வளவு சிறப்போடு விளங்கவேண்டும்? ஆஹா! இப்புனத்தைச் சூழ்ந்திருக்கும் சோலையின் அழகை என்னென்று சொல்வேன்.

மூசவண்டு வாசமண்டு காவின்மொண்டு தேனையுண்டு
மோகன முகாரிராகம் பாடுமே மைய
லாகவே பேடையுடனே கூடுமே அலை
மோதுவாரிதி நீரைவாரிவிண் மீதுலாவிய சீதளாகர
முகில் பெருஞ் சிகாமுற்றும் மூடுமே கண்டு
மயிலினஞ் சிறகைவிரித் தாடுமே.
தேசுகொண்ட பாரதந்த வீரதும்பி ராசியண்டர்
தேவதாருவைக்கரத்தாற் பிடிக்குமே சுற்று
மேவியகிளையைவளைத் தொடிக்குமே யொளிர்
சேயசந்திர னேடுரிஞ்சு பலாமரங்களி லேநெருங்கிய
தீங்கனிமதுரசத்தை வடிக்குமே மந்தி
பாங்கினின் றதனையள்ளிக் குடிக்குமே.
அந்தர முருவிவளர்ந் திந்திர னுலகுகடந்
தப்புறம்போய் நின்றசையுஞ் சந்தன மரந்
தப்பிதமி லாதுகையால் வந்தன மிந்த
ஆறுமாமுக நாதனுக்கிடு மாறுபோலவி சாலமுற்றகொம்
பத்தனையும் நின்றுதலை சாய்க்குமே அண்டப்
பித்திகை தனிலுஞ்சென்று தேய்க்குமே
கந்தரந்தொ றங்கிடந்து கந்தரம்ப யந்தொதுங்கக்
கர்ச்சனை புரியுந்திறச் சிங்கமே செஞ்சி
லச்சமுற விண்ணுறைமா தங்கமே தடங்
காவிலேசில தாவிலேவளர் மாவிருனடு வேகிராதர்கள்
கார்முகமெய்யுங்கணைக ளேறுமே அதில்
வார்மதுவால் வாரியுவர் மாறுமே
ஆஹா! நான் வந்திருக்கும் காரணத்தை அறிந்து மாரவேள் அலங்கரித்து அமைத்த மண்டபமோ இச் சோலை?

ப்ரவேசம். பரண்மீதில் வள்ளியும் மாலினியும்.

இரு! இதென்ன ஆச்சர்யம்! அரணமைந்த இப் பரணிருந் தொருவித காந்தி வீசுகின்றது! ஆஹா! இது

என் உடல் குளிர உதித்த தண்மதியோ? மதியாயின் என்னைத் தஹிக்குமல்லவா? இது எனக்கு மகிழ்ச்சியை யன்றோ தருகின்றது. சீ! என்ன மயக்கம்! பெண் ணென் றறியாமற் பேசுகின்றேன். பசும் பொற்றகடு வேய்ந்து மரகத விளிம்படுத்த மாணிக்கச் சுனையருகில் சண்பகம், பாதிரி, வகுளம், அசோகம், சந்தனம் முதலிய தருக்கள் மலர்ந்து பூ நாறுங் கொழுநிழற்கீழ் ஒரு கற்பகத்தைச் சார்ந்து பளிக்குப் பாறையின்மேல் கோலக் கலாபம் விரித்து மயிலாட நோக்கி நிற்கின்று ளாதலின், இவள்

பூமக ளோவிண் ணுறைமக ளோபூம் பொழில்மகளோ
நாமக ளோதிருப் பாற்கட லீன்ற நளினமலர்
மாமக ளோஅலை நீர்மக ளோதண் மலைமகளோ
கோமக ளோஅறி யேன்தனி நின்றவிக் கோமளமே.

நெஞ்சே! வருந்தாதே. இவள் நீ கோரி வந்த வள்ளியே ஆகும். இவள் இவ்வளவு அழகுடையவளா யிருப்பதனால்தான் நாரதர் இவளை அவ்வளவு புகழ்ந்து ரைத்தார். ஆஹா! இவளழகை என்னவென்று வர்ணிப் பேன்.

சுந்தரம் மிகுந்த குழல் மேகம் இவள்
சொந்தநுதல் இந்துவில் ஓர் பாகம் திருந்
தும்புருவம் வில்லோடுசி நேகம்
தவ யோகம் வென்ற நேகம் வஞ்சம்
துஞ்சுவிழி நஞ்சினிலும் வேகம்

சந்த மலிகின்ற முகம் இந்து வள்ளைத்
தண்டுசெவி என்பதுவே தந்து கன்னம்
சாணைநுனி நாசி இன்ப சுந்து
வந்து சிந்துதல் பொ ருந்து சிறு
சண்பகம் துப்பாமிதழ் சி வந்து

செங்குமுத புஷ்பமதை　　　　ஒத்து　மொழித்
　　தேன்உதவும் வாய்நகையோ　　முத்து　கண்டம்
　　ஸ்ரீதரனார் ஊதுவர　　　　நத்து
　　சொல் தித்தித்துப் பாகைக்　　கைத்து　விடச்
　　செய்யும் என உன்னலாம்　　உளத்து

குங்கும வாகங்கசகோ　　　　தண்டம் முன்கைக்
　　கோமகரயாழ் உவமை　　　விண்டம்　கையைக்
　　கோகனகமோ எனம　　　　ருண்டம்
　　ஆழி மண்டங்குவி　　　　கண்டம்　நெருங்
　　கும்கெளிறு சிறுகிளித்　　　துண்டம்

கட்டுகதிர் பட்டுமணி　　　　வம்பு　கிரு
　　பட்டு வழி விட்டிட　　　　எழும்பு　கிற
　　கட்டழகாம் வட்டமுலைச்　　சொம்பு
　　யானைக் கொம்பு சிவ　　　சம்பு　குடம்
　　கைக்கும் வளையாத பொற்　　பறம்பு

மட்டுமிழ் பசுந்துளப　　　　மாலே　செங்கண்
　　வளருகிற தவிசெனும் ஓர்　　ஆலே　சிறு
　　வயிறுமயிர் சிற்றெறும்பு　　போலே
　　விரைவாலே வெள்ள　　　　மேலே　சுற்றி
　　வந்தசுழி உந்தி இடை　　　நூலே

தாம் அரவ படமெ னல்கு　　　லுண்டு　துடை
　　தங்கநிறச் செங்கதலித்　　　தண்டு　முழந்
　　தாட்குவமை கேட்கிலவை　　நண்டு
　　சினை கொண்டு வளர்　　　பெண்டு　வரால்
　　கணைக்கா லெனவருமி　　　ரண்டு

பாடு தாராசுயர் குதி கந்　　　துகமே　அணி
　　பரவுபுற அடியிணை புத்　　　தகமே　கடற்
　　பவளமதி தசவிரல்கள்　　　நகமே
　　அம்போ ருகமே பத　　　　யுகமே　மயில்
　　பண்ணும் இளஞ் சாயலை யா　சகமே

மேனகையோ டூர்வசியிந்த் ராணி செல்வம்
மிக்க திரு முக்யகலை வாணி இந்த
மின்னரசி தன் உருவம் காணி
னெஞ்சம் நாணி மலர்ப் பாணி தலை
மீதுகுவித்துத் தொழுவர் பேணி

ஐயோ! இவளை அடையாத ஜன்மம் இருந் தென்ன பயன்? ஆஹா! பங்கஜாஸனன் தன் பனிமலர்க் கை தான் கொண்டு இவள் அங்கத்தை எப்படிச் செய்தா னோ? இவளைத் தன்னிடத்தே வைத்துக் கொண்டு மகிழ இப்புனம் செய்த புண்யம் என் மனம் செய்ததுண் டோ?

வள்ளி. [ஆயலோட்டுகின்றாள்]

அன்னங்களே இணைபிரியா அன்றில்களே ஆலோலம்
சின்னஞ்சிறுகிள்ளைகளே செழும்புறாவே ஆலோலம், சோ!

ஸுப்ரமண்யர். ஆஹா!

ஆலோல மென்று குரல்காட்டி இந்த அரும்புனத்திற்
சேலோடு கண்ணைத் தினைமீதில் வைத்தசிங் காரிதன்னை
மாலோடு காதல் மனையாகக் கொண்டு மகிழ்ந்திருந்தால்
பாலோடு சேர்ந்த பழம்போ லினித்திடும் பண்புறவே.

ஆம், இவள் காதலைப் பெறுவ தெங்ஙனம்? அருகிற் போய் வார்த்தை யாடலாமா? என்னவென்று வார்த் தை யாடுவது? அருகிற் செல்வதற்கே ஏதேனும் ஒரு வ்யாஜம் வேண்டுமே: என்ன செய்வது? நல்லது, ஒரு மானைத் துரத்திக்கொண்டு வந்தாற்போல் அருகிற் செல்வோம். [வில்லுங்கையுமாய்ப் பரணருகிற்சென்று]

[ராகம்-ஹரிகாம்போதி. தாளம்-திச்ரரூபகம்.]

ஸுப். வலைதப்பியே குலமான்களே - ஒரு
மான்வரக் கண்டீரோ நீங்களே
கலைதப்பிவெஞ்சிலைக் கைக்கணை தப்பித்தன்
தலைதப்பி யென்னையும் தப்பியிங்கே இன்று(வலை)

மாலினி. ஆர்காணும் நீர்சிலே வேடரே - மானை
ஆட்புறத்தே வந்து தேடுநீர்
நீர் கூறிய மானுக் கிரண்டு காலுண்டோ
நேருக்கு நேராக வேயிரு கொம்புண்டோ (ஆர்)

ஸுப். என்நீபகுத்துக்கொழிக்கின்றாய் - சற்றும்
எண்ணாமல் என்னைப் பழிக்கின்றாய்
யானையைக் கைக்குள் மறைக்கின்றாய் - அதை
யார்கண்ட தென்றும் உரைக்கின்றாய்
கானிற்றனிவந்த மானுக் கடையாளம்
தானே தெரியாதோ நானோ சொல்லவேண்டும் (வலை)

மாலினி. உற்றுற்றுக் கீழ்மேலும் பார்க்கின்றீர் - சும்மா
ஒன்றை மறைத் தொன்றைக் கேட்கின்றீர்
அத்தை மகன்போல் வாய் போக்குறீர் - இங்கு
ஆள்நோட்டம் பாராமல் எய்க்குறீர்
எத்துக்கள்ளா! காமப் பித்துக்கள்ளா! மாய
வித்தைக்கள்ளா! மெத்த சுத்தக்கள்ளா! போபோ (ஆர்)

வள்ளி. ஸகி! யாரடி இவன்?

மாலினி. அம்மா! நான் என்னத்தைக் கண்டேன். நானும் உன்னைப்போல் இங்கேதானே இருக்கின்றேன்.

வள்ளி. வந்தவனைக் கேட்டுப் பாரேன்.

மாலினி. ஐயா! தாம் யார்?

ஸுப்ரமண்யர். நானா? நான் ஒரு வேடன்.

வள்ளி. [மாலினியிடம்] பார்க்கும் போதே தெரிகின்றது. இங்கேன் வந்தானென்று கேள்.

மாலினி. ஐயா, இங்கேன் வந்தீர்?

ஸுப்ரமண்யர். ஒரு மானைத் தேடிக்கொண்டு வந்தேன்.

வள்ளி. என்ன? மானைத்தேடிக் கொண்டா ?—மானெங்கு வந்ததடி இங்கு ?—

ப்ரவேசம். ஸேவகன்.

ஏண்டா, நீ ஏதேனும் மானைப் பார்த்தாயா ?

ஸேவகன். இந்த ஸ்ரீமானைத்தான் பார்க்கின்றேன்.

மாலினி. காட்டி லுள்ள மான் தினைப் புனத்துக்கு வருவானேன் ?

ஸுப்ரமண்யர். பெண்ணே ! நான் ஒரு மானைப் பிடிக்கப் பலவாறு முயன்றும் அது என் கைக்ககப்படாமல் ஓட, அதன்மீது என் கணையை யெய்தேன். அக்கணை யோடும் அது இப்புனத்திற் புகுந்தது. அதைத் தேடிக் கொண்டு வந்தேன்.

வள்ளி. சேடீ, இவனைப் போல் பொய்யனை நான் எங்கும் பார்த்ததில்லையடி !

மைவா ளிலங்குகண் மங்கைநல் லாயிந்த மாண்புனத்தில்
இவ்வாளி மொய்ம்பனின் றெய்தமெய்ம் மானிள மாந்தளிரின்
செவ்வாளி யுங்கொண்டுசேட்சென் றதாலன் றுசீதைகொண்கன்
கைவாளி யுங்கொண்டு போனபொய்ம்மானினுங்கள்ளத்ததே.

போகட்டும், வேடா, நீ தேடிவந்த மானுக்கு அடையாளங்க ளொன்று மில்லையா ?

ஸுப்ரமண்யர். நான் தேடிவந்த மான் மிகவும் ஆச்சர்யமான மான். இல்லாவிட்டால் அதைத் தேடிக்கொண்டு இவ்வளவு தூரம் வருவேனா?

காயாத கானகத் தேநின்று லாவுநற் காரிகையே
மேயாத மான்புள்ளி மேவாத மான்விழி மானந்தமான்
சாயாத கொம்பிரண் டேயிருந் தாலுந் தலைநிமிர்ந்து
பாயாத மானென்று பட்டதுண் டோவுன் றன்பார்வையிலே.

வள்ளி. சேடீ, நல்ல கெட்டிக்காரன் இவன்! இவன் சொன்னதைக் கவனித்தாயா? எல்லாம் உள்ளூரையாக இருக்கின்றது. இவனுக்குத் தகுந்த பதில் சொல்லி அனுப்ப வேண்டும்.

எந்தமா னிடவேடன் நீகாண் வேட்டைக்
 கேற்றமான் மலையிலுண் டிம்மான் நம்பி
தந்தமா னுனதுவலைக் ககப்ப டாமான்
 தைர்யமான் சௌர்யமான் ஜாதி மான்யான்
அந்தமா னென்றெண்ணி யென்னி டம்வந்
 தாண்பிள்ளை பெண்பிள்ளைக் கபயம் போட்டு
சொந்தமா மன்மகன்போல் ஏதோ சொன்னாய்
 தோழியைவிட் டினியடித்துத் தூரத்து வேனே.

ஸுப்ரமண்யர். பெண்ணே, நான் இப்புனத்துக்குப் புதியவன். முன்பின் வந்தறியேன். ஆகையால் திரும்பிப் போக வழியறியேன். இப்படிப்பட்ட என்னை இவ்வாறு அவமரியாதை செய்தனுப்புவது உனக்கு அடுக்குமா? என்னை ஆதரிக்க உனக்கு இஷ்டமில்லா விட்டாலும் உன் ஊரும் பேரும் இன்னதென்று சொன்னால் அவ்விடம் சென்று வந்த களைதீரத் தங்கியிருந்து பிறகு என்னிருப்பிடம் செல்கின்றேன்.

வள்ளி. ஆஹா! என்ன கெட்டிக்காரன்! புனத்துக்குப் புதியவனும்! திரும்பிப்போக வழியறியானும்!

இத்தனை பெரிய கண்கள் இரண்டுனக் கிருக்க ஜால
வித்தையா ரிடத்தில் முன்பு மேவிநீ யுற்ற மார்க்கம்
ஸத்யமா யறிந்தி டாயோ தையலாள் தனித் திருக்கப்
பித்தனே வந்து பேச மட்டுநீ கற்றாய் போலும்.

ஏகாந்தமாயிருக்கும் பெண்களிடம் வந்து பேசமட்டும் தெரிந்தது, திரும்பிப்போக வழி தெரியவில்லையா?—

ஏண்டி, வழி கெட்டு வந்தவனுக்கு மதி கெட்டும் போகுமோ?—போகட்டும். வேடா! வழி தெரியாதவர்கள் 'அருகிலேதேனும் ஊர் இருக்கின்றதா, அதற்கெப்படி வழி' என்று கேட்பது ஸஹஜம். 'நீ எந்த ஊர், என்ன பேர்?' என்றும் கேட்கச் சொல்லுமோ? நான் எந்த ஊரானால் உனக்கென்ன? என்ன பேரானால் உனக்கென்ன?

ஸுப்ரமண்யர். பெண்ணே! எதற்காகக் கேட்டேன் தெரியுமா? ஒருவேளை உன்னுடைய ஊரும் அருகிலுள்ள ஊரும் ஒன்றாயிருந்தால் 'இன்ன பேருள்ளவளைக் கண்டேன், அவள் சொற்படி இங்கே வந்தேன்' என்று கேட்பவர்களுக்குப் பதில் சொல்லலா மல்லவா?

வள்ளி. அப்படியா? வேடா! ஒரு வசனம் தெரியுமா? "கம்புக்கும் களை வெட்டுவான், தம்பிக்கும் பெண் தேடுவான்" என்பதுபோல் ஒரு கேள்வியால் இரண்டு கார்யத்தை ஸாதித்துக்கொள்ளப் பார்க்கின்றாய்போலும்?

ஸுப்ரமண்யர். அப்படித்தான் இருக்கட்டுமே. லோகத்தில் புதிதாய் ஒருவரைக் கண்டால் "நீ யார், எந்த ஊர், என்ன பேர்?" என்று கேட்பதில்லையா? அவ்விதம் கேட்டதாக ஏன் நினைக்கக்கூடாது? ஆனால் உன் ஊரும் பேரும் சொல்லமாட்டாயோ?

வள்ளி. நான் சிற்றூரை யாளும் நம்பிராஜன் புதல்வி,

ஸுப்ரமண்யர். என்ன, நம்பிராஜனா?

ஸேவகன். ஆமாம்; மற்ற ராஜாக்களுடைய காருண்யத்தை நம்பி அவர் ஒரு ராஜனாயிருக்கின்றார்.

வள்ளி. ஸரி, என் வரலாறு தெரிந்ததா? தெரிந்து உனக்கிப்பொழுது என்ன ஐச்வர்யம் வந்துவிட்டது?

ஸுப்ரமண்யர். எனக்கு ஸகல ஐச்வர்யமும் வந்ததாகத்தான் நான் நினைத்திருக்கின்றேன். போகட்டும்: சொன்னதனால் உனக்கென்ன குறைந்து போயிற்று? பெண்ணே! இத்தினைப் புனத்திலிருக்க என்ன காரணம்?

வள்ளி. ஸகி! கொஞ்சம் வார்த்தை கொடுத்தால் மிஞ்சி மிஞ்சிக் கேள்விகள் உண்டாகின்றன பார்த்தாயா?

ஸேவகன். இப்பொழுதென்ன ஆய்விட்டது? மெள்ள வந்தான், பெண்ணே யென்றழைத்தான். இன்னம் ஙள்ள மென்ன இருக்கின்றதோ.

வள்ளி. இன்னம் என்னதான் கேட்கின்றானோ பார்ப்போம் —வேடா! என் தாய் தந்தையர் என்னை இத்தினைப் புனங் காக்க இங் கனுப்பியிருக்கின்றார்கள். ஆகையால் நான் ஆயலோட்டிக் கிளிகடிந்து புனத்தைக் காத்துக் கொண் டிருக்கின்றேன்.

ஸுப்ரமண்யர். யார் அனுப்பியது? உன் தாய் தந்தையரா?

தழைக்கின்ற சந்தனத் தண்ணறுஞ் சாரல் தவழுங்கொண்டல்
மழைக்குன்ற வாணர் மடவிய ரேநும் மழைக்கண்களால்
உழைக்கன் றையுமொழி யாலொரு கோடிபைங்கிள்ளையையும்
அழைக்கின்ற உங்களை யோபுனங் காவலும் ஆக்குவதே

எல்லோரும் பறவைகளை யோட்டப் பயங்கரமான ரூபமும் குரலும் உடையவர்களை நியமிப்பார்கள். உன்னைப் போல் அழகிய ரூபமும் இனிய குரலும் உடையவர்களை யாரேனும் நியமிப்பார்களா? மயிலு மானும் குயிலுங் கிளியும் தன்னின மென்றுன்னை வந்தடைந்து

புனத்தை யழிக்குமென்று அறியாத உன் தாய் தந்தை யரைப் பேயரென்றே சொல்ல வேண்டும்.

**ஸேவகன்.** ஸரி, இன்னம் கொஞ்ச நாழிபோனால் பாட்டன் முப்பாட்டனையும் இழுத்துவிடுவான்போ லிருக்கின்றது.

[செல்கின்றான்.]

**வள்ளி.** அடே, வேடா! இனி இங்கு நின்று இப்படித் தாறுமாறாய் உளறினால் உனக்குத் தகுந்த மரியாதை செய்தனுப்புவேன். தாய் தந்தையர் பேயரா?

**ஸுப்ரமண்யர்.** பெண்ணே! இப்படி மரியாதை யில்லாமற் பேசாதே. வீணாய் என்னை ஏசாதே. நான் யார் தெரியுமா?

**வள்ளி.** நீ யாரானால் எனக்கென்ன?

**ஸுப்ரமண்யர்.** நான் வேடர்களால் பூஜிக்கப்பட்டவன். எல்லோராலும் பூஷிக்கப்பட்டவன்.

**வள்ளி.** நீ சொன்ன எல்லோரில் நானும் ஒருத்தி தானே. என்னா லிப்பொழுது நீ தூஷிக்கப்படும்போது எல்லோராலும் பூஷிக்கப்பட்டவ னென்று ஏன் வீணாய்ப் பொய்யுரைக்கின்றாய்?

**ஸுப்ரமண்யர்.** நான் பொய்யனா, அல்லது நான் தேடிவந்த மான் என் கண்முன் ப்ரத்யக்ஷமாய் நின்றுகொண்டிருக்க இங்கு மானும் இல்லை ஒன்றும் இல்லை என்று சொல்லும் நீ பொய்யளா? போகட்டும். நான் தேடி வந்த மானை என்னிடம் ஒப்புவிக்க மாட்டாயா?

**வள்ளி.** வேடா! இப்படி யெல்லாம் குறிப்பாகக் கூறுவதனால் பயனில்லை. விளைவது தெரியாமல் வீணா யிப்படி யெல்லாம் உளறுகின்றாய்.

ஒருமானைத் தேடிப் படர்கா னகத்தே உலகளந்த
பெருமா னடைந்த துயரறி யாமலிப் பெண்மடமான்
திருமா னிரண்டு விழிமா னுலாவுந் தினைப்புனத்தில்
வருமானைத் தேடி யலைவதென் னேமதி கெட்டவனே.

ஸுப்ரமண்யர். பைத்யக்காரீ! நான் தேடிவந்த மானும் திருமால் தேடிச்சென்ற மானும் என்றேனும் ஒன்றாகுமா?
சூல்தொடர்ந் தகன்ற மேகச் சரிகுழற் சீதை யைமுன்
மால்தொடர்ந் தகன்ற மாய மான்பிரித் ததுகாண் என்றன்
கால்தொடர்ந் தகன்று வந்த கவினுறு மானோ இந்தச்
சேல்தொடர்ந் தகன்ற செங்கட் சேயிழை யினைக்காட்டிற்றே.

வள்ளி. ஸகி! வழிக்கு வந்து விட்டான். முதலில் ஏதோ மானைத் தேடிக்கொண்டு வந்ததாகக் கூறினான். பிறகு மானுக்கும் பெண்ணுக்கும் பொருள் படுமாறு கூறினான். கடைசியில், 'என் கால் தொடர்ந்த மான் இக்கன்னியைக் காட்டிற்று' என்று கூறினான். இனி, உன்னைத்தான் கோரி வந்தேன் என்று கூறவேண்டியது தான் பாக்கி.— வேடா! வினைக் கெட்டுப்போகாதே. விநாச காலத்தில் விபரீத புத்தி என்பதற் கேற்பத் தாறுமாறாய் உளறாதே. போ, அப்புறம். இனி நின்றால் சேடியை விட்டு அடித்துத் துரத்துவேன்.

ஸுப்ரமண்யர். உன்னாலேயே என்னை அடித்துத் துரத்த முடியாதென்றால் உன் சேடியால் முடியுமோ? ஆகையால், கண்ணே!—

வள்ளி. வேடா! என்ன மிஞ்சி மிஞ்சிப் பேசுகின்றாய்? பத்ரம், நாக்கை உள்ளே வைத்துப்பேசு. என் ஜாதி புத்தியைக் காட்ட வேண்டுமோ?

ஸுப்ரமண்யர். இவள் கோபிப்பதும் ஓர் அழகாகத்தான் இருக்கின்றது. இப்படியே இவள் என்னோடு பேசினா

லும் ஸரி, என்னை ஏசினாலும் ஸரி, எனக்கு அது இன்பமே. இப்படிப்பட்ட ஸௌந்தர்யாகார முள்ளவளைத்

தொட்டாலும் போதும் மடமா திவள்பாத தூசியென்மேற்
பட்டாலும் நல்ல பதமே கிடைக்கும் பழிசுமந்து
கெட்டாலும் நன்றென் றிவளோடு சேரக் கிடந்துயிரை
விட்டாலும் நல்ல கதிமோக்ஷ மாகும் விதியிதுவே.

நான் கொண்டிருக்கும் காதலை வெளிப்படையாகக் கூறுகின்றேன். ஆனால் ஒன்று: முதலில் என்னுடைய கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும்.—பெண்ணே!* நீ என்னை இன்னானென் றறியாமல் 'அடே, போடா' என்று மர்யாதை யில்லாமற் பேசுகின்றாய். இனி அப்படிப் பேசினால் நானும் உன்னை 'அடி, போடி' என்று பேசுவேன்.

வள்ளி. என்ன? என்ன சொல்வாய்?

ஸுப்ரமண்யர். அடி, அடி யென்று சொல்வேன்.

வள்ளி. 'அடி, அடி' யென்றால் சேடியை விட்டு அடிக்கச் சொல்கின்றேன். போடா, போ! மர்யாதையா வேண்டும்? உன்னினும் மேலான ஓர் ஆயிரம் வேடர்களை வைத்தாள எனக்குச் சக்தி யுண்டென்று தெரியாமற் பிதற்றுகிறாயா? எல்லோரும் பெண் நானும் பெண்ணென்று நினைக்காதே.

ஸுப்ரமண்யர். அப்படியே எல்லோரும் வேடர் நானும் வேடனென்று எண்ணாதே.

வள்ளி. ஆனால்? என்ன செய்யவேண்டு மென்கிறாய்?

ஸுப்ரமண்யர். மர்யாதையாகப் பேசவேண்டு மென்கிறேன்.

வள்ளி. இப்பொழுது உன்னை மர்யாதை செய்து உன்னால் எனக்கு ஆகவேண்டிய தென்ன இருக்கின்றது?—போகட்டும். அப்படித்தான் மர்யாதையாகப் பேசுகின்றேன் : அப்பொழுதாவது என் சொல்லைக் கேட்பாயா?

ஸுப்ரமண்யர். சொல்லைக் கேட்பேனு! உத்திரவின்படி நடப்பேன். நீ காலாலிட்ட வேலையைத் தலையாற் செய்வேன்.

வள்ளி. ஆனல், வேடரே! என்னை நிர்ப்பந்திக்காமல் இப்பொழுதே இவ்விடம் விட்டுச் செல்லும்.

ஸுப்ரமண்யர். அது முடியாது. தாபத்தால் தவிக்கும் என்னைக் கோபித்துவெருட்டுவது உனக்குத் தர்மமா? நீ யென்னை மணம் புரிந்தாலன்றி இவ்விடம் விட்டுச் செல்லேன்.

வள்ளி. [தனக்குள்] இல்லை, இவனைச் சொல்லி பயனில்லை. என் புத்தியைச் சொல்லவேண்டும்.

மாலினி. வேடா! உன் அவிவேகத்தை என்ன சொல்வேன்? லோகத்தில் காதல் கொண்டவர் உற்றார் பெற்றாரை அடுத்து அவர்கள் ஸம்மதத்தைப் பெற்று நான்கு மறையும் கேள்வியா லறிந்து வேள்வி செய்யும் சான்றோரை முன்னிட்டு மணம் செய்துகொள்வது ஸஹஜம். இப்படி யாரேனும் முன்பின் பெண்ணைப் பாராதவனைப் போல் 'என்னைக் கல்யாணம் செய்து கொள், என்னைக் கல்யாணம் செய்துகொள்' என்று வெட்கமில்லாமற் கேட்பார்களா?

ஸுப்ரமண்யர். பெண்ணே! நான் உலக இயல்பு தெரியாதவனல்லன். இப்பொழுது என்னுயிரே போய்க்கொண்டிருக்கின்றது. அதைப் போகாமற் காத்தபின் உலகி

யற்படி இவ்வாரணங்கை வரைந்து கொள்வேன்—ஆகையால், மானே, மௌனமாயிருப்பதேன்.

வள்ளி. இங்கு மானும் வரவில்லை, ஒன்றும் வரவில்லை. ஏன் வீணாய் மானே மானே யென்று கிடந்தலைகின்றாய்?

ஸுப்ரமண்யர். ஆனால் என்னை விவாஹம் செய்துகொள்ள மாட்டாயா?

வள்ளி. எனக்கு விவாஹத்திலேயே விருப்பமில்லை.

ஸுப்ரமண்யர். பெண்ணே, அவ்விதம் கூறாதே.

ஸத்தான யவ்வன காலத்திற் செய்யும் ஸரஸஸுகம்
செத்தால் வராது கிடையாது தேக பலம்குறைந்தால்
வித்தார மான பலனிது போலவே றென்றில்லையுன்
கைத்தா மரைகொண்டு கட்டி யணைக்கநற் காலமிதே.

வள்ளி. ஸகீ! இதென்ன ப்ராரப்த கர்மமடி? நாரதர் போனாரே என்று ஸந்தோஷப் பட்டுக்கொண்டிருந்தால், இவன் எங்கிருந்தோ வந்து முளைத்தான். இங்கிருந்தால் இப்படித்தான் வார்த்தை வளரும். நாம் சென்று நம்முடைய கார்யத்தைக் கவனிப்போம், வா.

[பரணருகிற் செல்லுகின்றாள்]

[ராகம்-ஹரிகாம்போதி. தாளம்-திச்ர ரூபகம்]

ஸுப்ர. கொஞ்சும் பஞ்சவர்ண அஞ்சுகமே இங்கு
கொஞ்சநேரம் நின்று கூடிக்குலாவுவாய்
கஞ்சமலர்ச்கணை நெஞ்சைத் தொளைத்திட
காரிகையே உன்னைக் கோரிவந்தேனிங்கு (கொ)

வள்ளி. வேடா உனக்கென்ன கேடா நீ யென்றனக்
கீடா ஒரு போதும் கூடாதடா போடா
மாடா மனுஷ்யனு மர்யாதை யில்லாமல்
மாதுடனே பொல்லா வாதுக்கெனவந்தாய் (வே)

ஸுப்ர. வாதுசெய்ய வந்த வம்பன் நானல்லடி
வாய்முத்தம் கொள்ள வந்தேன் சற்று நில்லடி
சூதுவார்த்தை பேசி மானே என்னை யேசி
சோதிப்பதுவுந்த காதிப்பொழுதென்னை (கொ)

வள்ளி. சோதிப்பதாலென்ன லாபம் வரும் என்னைப்
பாதிப்பதால் பொல்லா பாபம்வரும்சொன்னேன்
மாதவ முனிவர்கள் வாழும் வனக்குற
வள்ளியென் றறியாமற் றுள்ளுகின்றாய் வீணில் (வே)

ஸுப்ரமண்யர். பேரென்ன? வள்ளியா? ஐயோ! என்ன திவ்யமான நாமம்.

வள்ளி. ஸகி! இதுவரையிலும் என் பேர் தெரியாமல் தவித்தான். இப்பொழுது சொல்லிவிட்டேனோ இல்லையோ, இனித் திவ்யநாம ஸங்கீர்த்தனந்தான்.

ஸுப்ரமண்யர். வள்ளி, அப்படித் திவ்யநாம ஸங்கீர்த்தனம் செய்பவர்களை வழிபடும் தெய்வம் வந்தாட் கொள்ளு மென்று சொல்வார்களே? நீ அத்தெய்வத்தினும் கன் னெஞ்ச முள்ளவளாய் இருக்கின்றனையே.

வள்ளிக்கொடியே மருக்கொழுந்தே மலர்
மஞ்சரியே தெய்வ குஞ்சரிநாயகி
புள்ளி மயிற்பாகன் தன்னை மணந்ததைப்
போல்நீயு மென்னை மணம்புரி வாயின்றே (கோ)

வள்ளி. கொம்புத் தேனுக்கு முடவ னாசைப்படும்
கொள்கையைப்போ லென்னைக் கோரிவந்தாயிங்கு
நம்பி மொசம்போய் நீ நாழிகை போக்குறாய்
நாணம் கெட்டவனே மானம் கெட்டவனே. (வே)

வேடா! கிட்டாதாயின் வெட்டென மறக்கவேண்டு மல்லவா? ஏன் வீண் ப்ரயாஸம் எடுத்துக்கொள்கின் றாய்?

ஸுப்ரமண்யர். வள்ளீ, 'ஆகா தெனினும் அகத்து நெய் உண்டாகிற் போகா தெறும்பு புறஞ்சுற்றும்' என்று நீ கேட்டதில்லையா?

வள்ளி. ஆனால் எறும்பைப்போல் அவ்வளவு பகுத்தறிவு இல்லாதவனா நீ?

ஸுப்ரமண்யர். உன்னளவில் நான் எறும்புக்கும் கீழ்ப்பட்டவன் என்று சொன்னாலும் குறைவில்லை.

வள்ளி. வேடா!

எட்டாத பழமிதுவென் றெண்ணி டாமல்
  எட்டியெட்டி அண்ணாந்து பார்த்துப் பார்த்துக்
கொட்டாவி விட்டதனால் வருவ துண்டோ
  கூறாத வார்த்தைகளைக் கூற வேண்டாம்
ஒட்டாது நீயுரைத்த வார்த்தை சும்மா
  ஓடிப்போ இனிநின்றால் உயிர்க்குத் தீங்காம்
கட்டான குறவரெங்க ளண்ணன் மார்கள்
  கானகத்து வருமுன்னே கடந்தி டாயே.

ஐயோ வேடா, தயவுசெய்து போய்விடு: உனக்குப் புண்யமுண்டு.

ஸுப்ரமண்யர். வள்ளீ, நான் உன் போகமுவந்து வந்தவனே யன்றிப் போக வந்தவ னல்லன்.

வள்ளி. என்ன? நான் சொல்லுகின்றேன், மேன்மேலும் வாதாடுகின்றாயா? உடனே புறப்பட்டுப் போகின்றாயா, இல்லாவிட்டால் பட்சிகளை வெருட்டுவதுபோல் கவணெறிந்து அடித் தோட்டட்டுமா?

ஸுப்ரமண்யர். வள்ளீ, ஏன் இவ்வளவு கோபம்?

பத்மினி ஜாதிப்பெண்மானேபசுந்தேனேயின்றுநானேஉன்றன்
பார்வையில் மயங்கி னேனே நாளும்
பலவிதமாகக் கொஞ்சிக் கலவியி லாசைமிஞ்சிப்
பாரில் மகிழ்ந்திட யேனே எழிற்
காரிகையே கோபந் தானே.

வள்ளி.

எடா உனக்கென்னகேடா வனவேடா முழுமூடா உனக்கு
என்ன சொல்லியும் நீ மாடா ஒரு
எள்ளத்தனைபுத்தியுமுன்னுள்ளத்தினிவில்லையோவென்
இஷ்டத்தைக் கோராதே போடா உனக்கு
அஷ்டமத்திற் சனி யோடா

ஸுப்ரமண்யர்.

இணங்குவாயேல்நல்லயோகம்இந்த்ரபோகம்நல்விவேகம் இவை
எல்லாம் தரும் நம ஸ்நேகம் உன்னை
எய்திய மற்றென்னைமணம் செய்திடுவா யித்தருணம்
இல்லையேல் தீராதென் மோகம் எனென்
சொல்லையே கொள்ள ஸந் தேகம்.

வள்ளி.

விருப்பமேஇல்லாதமாதுதன்முன்வாதுசெய்வதேது நெஞ்சில்
வெட்கம் சற்றேனுமில் லாது சும்மா
வெள்ளைத்தனமாய் நீயும் துள்ளித்திரிந்தாற் பாயும்
வேங்கை போல் பிதா உன் மீது பாய்ந்து
தீங்கிழைப்பார் காணிப் போது.

ஸகி! என் புத்திப்பிசகு. இத்தனை நாழிகை இவனை இங்கு நிறுத்திவைத்ததே குற்றம். என்ன செய்வேனடி? அண்ணன்மார் வரும் ஸமயமாய்விட்டதே.— வேடா, இனி இங்கிருந்தால் மர்யாதை கெட்டுப் போவாய். போகின்றாயா, என்ன?

ஸுப்ரமண்யர். வள்ளீ, உன்னால் நேரிடும் அவமானம் எனக்கு வெகுமானம். உன்னுடைய தூஷணையே எனக்குப் பூஷணம். நீ எவ்வளவு கடிந்துபேசினாலும் உன்னைவிட்டுப் பிரிந்துபோக எனக்குக் காலெழவில்லை. நான் என்ன செய்வேன்?—அந்தோ! என்னுடைய ஜன்மம் என்ன ஜன்மம்? இவ்வேந்திழையின் ஸாமிப்யத்தைப் பெற்று ஸந்தோஷிக்கும் வண்ணம் இவள் செல்லுமிடத்துப் புல்லாகவேனும், மகிழும் சோலையில் மலராகவேனும் படுத்திருக்கும் பாணுகவேனும் நான் பிறந்தேனு?—என்ன, இது! ஏதோ சப்தம் கேட்கின்றது?—இவளுடைய ஸஹோதரர்கள்தாம் வருகின்றனர் போலும்! நல்லது, வரட்டும். இப்பொழுது நான் என் சக்தியைக் காட்டுவதழகன்று. இவ்விடத்திலேயே இவ்வேந்திழை ப்ரமிக்கும் வண்ணம் ஒரு வேங்கை மரமாய் நிற்கின்றேன்.

வள்ளி. ஐயோ, வேடா, அதோ என் ஸஹோதரர்கள் வருகிறுப் போலிருக்கின்றது. தயவுசெய்து போய்விடு. இருந்தால் இருவருயிருக்கும் தீங்கு நேரிடும்.

ஸுப்ரமண்யர். வள்ளீ, என்னைப்பற்றி எனக்குக் கவலையே இல்லை. உன் காதலைப் பெறுமல் உயிர் வாழ்வதைவிட அவர்களுடைய கையால் உயிரைவிடுவது உசிதமேயாகும்.

வள்ளி. ஐயோ, வேடா, அதோ பார்! சொல்லிக்கொண்டிருக்கும்போதே வந்துவிட்டனர்!

கலியுகத்தை யாயிரமுங் கடந்தொருவி காரிகார்த்தி
கைமா தத்தில்
மெலியுமதி ரவிபுதன்செவ் வாய்சனியன் ராகுடனே
வியாழன் வெள்ளி

பொலியவோ ரிடம்வந்து புகுவதுபோ லென்னினத்தார்
புனத்தை நாடி
ஒலியெழுந்து வருகின்ரு ராதலிஞ லுயிர்க்கஞ்சி
ஒடு வாயே.

ப்ரவேசம். நம்பிராஜன் முதலோர்.

ஸுப்ரமண்யர் வேங்கைமரமாக மாறுதல்.

இதென்ன ஆச்சர்யம்! திடீரென்று மறைந்துவிட்டான்! இது என்ன ஜாலமோ! என்ன மந்திரமோ! என்ன மாயமோ! சகீ! இவர்கள் கேட்டால் என்ன சொல்வேன்?

நம்பிராஜன். குழந்தாய், வள்ளீ! க்ஷேமந்தாஞ? ஜாக்ரதையாகக் காவல் புரிந்துகொண்டிருகின்ருயா? இத்தினைப் புனத்தில் இன்பமாகக் காலங் கழித்துக்கொண்டு வருகின்ருயா?

வள்ளி. பிதா! நன்ருயிருக்கின்றது! கேட்கவும் வேண்டுமா? தாங்கள் எப்பொழுதும் என் கவலையாகவே இருக்கும்போது என்னுடைய இன்பத்துக்கு ஒரு குறைவும் ஏற்படுமா?

ஸேவகன். ஆஞல் ஒன்று: நாங்கள் இங்கு வந்த கொஞ்சநாளைக் கெல்லாம் எங்களை ஒரு முனி பிடித்துக்கொள்ள, அப்போதுமட்டும் கொஞ்சம் கஷ்டப்பட்டோம்.

நம்பிராஜன். என்ன! முனி பிடித்துக் கொண்டதா?

வள்ளி. அதெல்லாம் ஒன்றும் இல்லை, பிதா. அவனுடைய வார்த்தையை மெய்யென்று நம்புகின்றீரே?

ஸேவகன். ஆஞல் நாதமுனி வரவில்லையா இங்கு?

வள்ளி. அதையா சொன்னாய்? வாஸ்தவந்தான். பிதா! இங்கு நாரதமுனிவர் வந்து ஆசீர்வதித்துவிட்டுப் போனார்.

நம்பிராஜன். அப்படியா? ஸந்தோஷம்!

கிள்ளிவளவன். பிதா! இதென்ன ஆச்சர்யம்! நடுப்பயிரில் இத்தனை நாள் இல்லாமல் இன்றேதோ மரமொன்று முளைத்திருக்கின்றது?

இளந்திரையன். ஆஹா! எவ்வளவு உயரம்! எத்தனை கிளைகள்! எத்தனை இலைகள்!

நலங்கிள்ளி. பிதா! பயிரல்லவோ அழிந்துபோகும்? எவ்வளவுதூரம் நிழலடிக்கின்றது!

நம்பிராஜன். வள்ளீ, இந்த மரம் எப்படி உண்டாயிற்றென்று உனக்குத் தெரியுமா? முன்பின் எப்பொழுதாவது இது இங்கு இருந்ததுண்டா?

வள்ளி. பிதா, நான் என்ன கண்டேன்? எப்பொழுது தாங்க ளென்னைக் காவலுக்கு அனுப்பினீரோ அப்பொழுது முதல் பட்சிகளை ஓட்டுவதும் பரணில்சென்று படுத்துறங்குவதுமாய்க் காலங்கழித்து வருகின்றேன். இங்கு இது இருந்தது இல்லை யென்று நான் கண்டேனா? உதயம் எழுந்தேன், இதைக் கண்ணிற் கண்டேன். பிதா, ஒருவேளை தெய்வச் செயலாக இருக்குமோ?

நம்பிராஜன். தெய்வமாவது! பூதமாவது! நிழலடித்து வீணாய்ப் பயிரெல்லாம் அழிந்துபோகின்றது. வெட்டி யெறியுங்கள்! எதோ, கோடரியைக் கொண்டு வாருங்கள். [மரத்தை வெட்டப்போக, உச்சியிலிருந்து கௌளி பேசுகின்றது.]

கிள்ளிவளவன். தம்பீ! நிறுத்து, நிறுத்து! வெட்டாதே! எதோ தெய்வத்தடையாய்ப் பேசுகின்றது.

நம்பிராஜன். ஆனால், குழந்தை சொன்னதுபோல் தெய்வ மரமாகத்தான் இருக்குமோ? மந்திரீ, வெட்டவேண்டாம், விட்டுவிடுங்கள்.

வள்ளி. பிதா, இருந்துவிட்டுப் போகிறது. பாணுக்கும் நிழலாய் இருக்கும்.

நம்பிராஜன். மந்திரீ, பயிர்களெல்லாம் செழித்தோங்கிக் கதிரெடுத்திருக்கின்றனவா? ஏதோ ஒரு கதிரைக்கொண்டுவா, பார்ப்போம்.

வள்ளி. பிதா, இன்னம் எத்தனை நாள் புனத்தைக் காத்துக் கொண்டிருக்க வேண்டும்?

நம்பிராஜன். கதிர்கள் இன்னம் கொஞ்சம் முதிரும் வரையில் இருக்கவேண்டும். இன்னம் இரண்டொரு மாதம் இருந்தாற் போதும்.

வள்ளி. ஸரி, பிதா, அதுவரையில் தாங்கள் இங்கு அடிக்கடி வந்து போகவேண்டும்.

நம்பிராஜன். அப்படியே ஆகட்டும். நாங்கள் போய்வருகின்றோம். [நம்பிராஜன் முதலானவர்கள் செல்லுதல்]

வள்ளி. ஸகி! அந்தமட்டும் 'தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்று' என்பதுபோல் மரத்தின் ஸமாசாரத்தை ஒருவிதமாய்க் கூறி தப்பித்துக்கொண்டேன்.

மாலினி. அது கிடக்கட்டும், வள்ளீ, வேடன் வந்த ஸங்கதியை நீயேன் பிதாவிடம் கூறவில்லை.

வள்ளி. சேடீ, அவன் எனக்கு என்ன கெடுதி செய்தானடி? ஏதோ, தனக்கு என் மீதுள்ள காதலை வெளியிட்டான். அதனால் நான் என்ன கெட்டுப்போனது? இதைப் பிதாவிடம் கூறி பாதகத்தைத் தேடிக்கொள்வானேன்.

[வேங்கை மரம் மறைய, ஸுப்ரமண்யர் வேட ரூபத்தில் மீண்டும் தோன்றுதல்.]

ஸுப்ரமண்யர். வள்ளீ, இதோ வந்தேன்.

சிந்தையிலுன்னையே நாடி யருள்கூடி விளையாடி நலந்
திகழ்சிந்துபல பாடி மலர்ச்
செந்தேனே மீண்டுமிதோ வந்தேனே நீங்குவதோ
செம்மையில் முன்செய்த கோடி புண்யம்
நம்மைவிட்டே யகன் றோடி

வள்ளி. இதென்ன விந்தையடி? 'போனாற்போல் வந்தானும் புதுமாப்பிள்ளை' யென்று மறுபடியும் எங்கிருந்தோ வந்து குதித்தான்! வேடா, இத்தனை நாழி எங்கே பதுங்கிக்கொண்டிருந்தாய்?

ஸுப்ரமண்யர். நீதான் நன்றாய்ப் பார்த்துத் தெரிந்து கொள்.

வள்ளி. இல்லை, உன்னுடைய ப்ரதாபத்தை நீதான் சொல், கேட்போம்.

ஸுப்ரமண்யர். வள்ளீ, அங்கொரு வேங்கைமரம் தோன்றிற்றே அது இப்பொழுது எங்கிருக்கின்றது பார்.

வள்ளி. ஸகீ! என்ன ஆச்சர்யமடி!—இருக்கட்டும்.—அடே, வேடா, அது விந்தையாகத் தோன்றியது. விந்தையாய் மறைந்தது. அதைப் பற்றி இப்பொழுதென்ன?

ஸுப்ரமண்யர். வள்ளீ, அந்த மரமாய் நின்றவன் நானே.

வள்ளி. என்ன பௌருஷம்! என்ன பராக்ரமம்! கல்யாணம் செய்து கொள்ள வந்தவன் என் இனத்தார் வருகிறாரென்றால் நின்றெதிர்த்துச் சண்டைசெய்து வென்று என்னைக் கொண்டுபோகாமல் மரமாய் நின்றேன்

என்கிருயே! அடமரமே! கொஞ்சங்கூட வெட்கமில்லையே? ஸகி, இவர்தான் என்னைக் கல்யாணம் செய்துகொள்ளப் போகிறவராம்! இவருடைய தைர்யத்தைப் பார்த்தாயா?

ஸுப்ரமண்யர். வள்ளீ, நான் மரமாயிருந்தபோதே என்னை வெட்ட முடியாமல் உன்னினத்தார் என்னைவிட்டுச் சென்றனரென்ருல் நான் மனுஷ்யனாய் நின்றிருந்தால் என்ன செய்யமுடியுமென்று நினைக்கின்ருய்? இதொன்றிலேயே என் பெருமை உனக்குத் தெரியவில்லையா? போகட்டும், அப்படி மரமாய் நிற்கவும், மனுஷ்யனாய் மாறவும் எல்லோருக்கும் ஸாத்யமென்று நினைக்கின்ருயா? எதோ, நீ செய் பார்ப்போம்.

வள்ளி. அடே, வேடா, மரமாய் நின்றதை ஒரு பெருமையாகச் சொல்லாதே. இப்படிப்பட்ட ஜாலவித்தைகள் எங்கள் வீட்டுப் பெட்டைக் குட்டிகளும் ஸர்வ ஸஹஜமாய்ச் செய்யும். எங்கள் ஜாதியின் பெருமை தெரியாமல் நீ செய்த இந்த அற்ப வித்தையைப் பெரிதாக எண்ணிப் பிதற்றுகின்ருய். எங்கள் பெருமையைச் சொல்கின்றேன், கேள்.

மேருவெற்பை ஓரசைப்பி லசைத்துப் பம்பரம்போல்
மேதினியில் வைத்துநிலை நாட்டுவோம் எங்கள்
ஜாதிக்குள்ள வித்தையெல்லாம் காட்டுவோம்
அஷ்டமாஸித்திகளெல்லாமிஷ்டம்போல் செய்துமுடிப்போம்
துஷ்டயமனையும் போரில் வெல்லுவோம் ப்ரம்ம
ச்ருஷ்டிக்குமுன் னுள்ளதெல்லாம்சொல்லுவோம்
சங்கரனும் எங்கள் குல மங்கையை மணந்ததனுல்
தானடைந்த ப்ரம்மஹத்தி தீர்ந்தது இந்த
மாநிலமெல்லாம் புகழ நேர்ந்தது.

ஸுப்ரமண்யர். வள்ளீ, இவ்வளவு பெருமை உன்குலத்துக்கு இருக்கிற தென்றுதான் நான் உன்னைத் தேடி வந்தேன்.

தேடிவந்தேனே வள்ளி மானே
சிந்தைமிக நொந் தேனே
செழிய பசுந் தேனே
தெரிந்துளம் பரிந் தேனே நானே (தேடி)

வள்ளி. கூடி யண்ணன்மார் எழு பேரே
குலத்தொடும் வா ராரே
கொண்டசினம் வி டாரே
கொன்றுலன்றிப் போ காரே வேடா (கூடி)

ஸுப்ர. வந்தாற் படையோடும் போ ராடி
மணமாலை யே சூடி
மருவாமலே வாடி
மங்கையேநான் போவே னேடி போடி (தேடி)

வள்ளி. வெந்தழலெனவே காயும்
விளக்கொளியிற் பாயும்
விட்டில்களைப்போல் நீயும்
வீணாய் மாய்வதேன் போயும் போயும் (கூடி)

வேடா, மறுபடியும் பழைய கதையைப் படிக்க ஆரம்பித்தாய். வேண்டாம், சொல்வதைக்கேள். பெண்ணாசையால் மண்ணாய்ப் போனவர் அநேகர். ஆகையால் இவ்வெண்ணத்தை விட்டு விடு.

வெறும்புளி யதனைத் தின்று வீணாய்நாக் கெரிவ தல்லால்
வரும்பய னொன்று மில்லை வாய்புளித் ததுவே மிச்சம்
பரும்புலி யதுப சித்தால் பசும்புல்லைத் தின்னு மோதான்
நெருங்கிநீ பேச வேண்டாம் நினைத்தவை முடியா வேடா.

ஸுப்ரமண்யர். வள்ளீ, நீ கூறிய துண்மையே. ஆயினும், நான் என்ன செய்வேன்? உன் ரூபலாவண்யத்தில் ஈடுபட்டு அழுந்திக்கிடக்கும் என் கண்ணையும் மனத்தையும் என்னால் மீட்டுக்கொள்ள முடியவில்லை.

வன்னத் தினைமாவைத் தெள்ளியே உண்ணும்
வாழ்க்கைக் குறக்குல வள்ளியே உயிர்
வாங்கப் பிறந்திட்ட கள்ளியே இரு
வடமேருவை நிகராகிய புயமீதணி பலமாமணி
மாலை படீரெனத் துள்ளியே விழ
வான்மதி வீசுந் தீ யள்ளியே

கன்னத்தினிற்குயிற் சத்தமே கேட்கக்
கன்றுதுபாரென்றன் சித்தமே மயக்
கஞ்செய்யுதே காமப் பித்தமே உடல்
கனலேறிய மெழுகாயின தினியாகிலும் அடிபாதகி
கட்டியணைத்தொரு முத்தமே தந்தால்
கைதொழுவேனுன்னை நித்தமே

வாடியிருப்பது வஞ்சமோ பொல்லா
வன்கருங்கல்லோவுன் நெஞ்சமோ கொண்ட
மையற்பயித்தியங் கொஞ்சமோ சிலை
மதனாகம முதகாவிய மதிலேமொழி சுகலீலையின்
மார்க்க முனக்கென்ன நஞ்சமோ ஒரு
வார்த்தை யுரைக்கவும் பஞ்சமோ

தேடிக் கிடையாத சொன்னமே உயிர்ச்
சித்திரமே மட வன்னமே அரோ
சிக்குதுபால் தயிர் அன்னமே பொரு
சிலைவேள்கணைகொலைவேலெனவிடுமார்பினிடுவேதொலை
செய்வது கண்டிலை இன்னமே என்ன
செய்தேனோ நான்பழி முன்னமே

வள்ளி. ஸகி! இவன் இதற்கென்றே கங்கணங் கட்டிக் கொண்டு புறப்பட்டான்போ விருக்கின்றது. இவனுக்குப் பதில் சொல்ல நம்மால் முடியாது.

ஸுப்ரமண்யர். வள்ளீ! இப்படி ஒரே பிடிவாதமாய் முடியாதென்று சொல்வது உனக்கு அழகா? என்னைப் போகும்படி கேட்காதே. உனக்குக் கோடி புண்யம், எனக்குங் கண்யம். இங்கேயே உனக்குத் துணையாக இருந்து பறவைகளை யோட்டட்டுமா? இல்லாவிட்டால்வேறேதேனும் வேலை கொடுக்கின்றாயா? என்ன சொல்கின்றாய்? வாய் முத்தந்தான் சிதறட்டுமே. நான் பொறுக்கியெடுத்துக் கொள்கின்றேன்.

வள்ளி. ஸகி! இவனோடு நமக்கென்ன வார்த்தை? நாம் ஆயலோட்டப் போவோம், வா.

[ராகம்-பிளஹரி. தாளம்-ஆதி.]

ஸுப்ர. ஆயலோட்டும் பெண்ணே அடி ஆயலோட்டும் பெண்ணே
ஆவியே என்னுருயிர் ஸஞ்சீவியே மன்மதனென்னும்
பாவியே மலர்க்கணையைத் தூவியே வாட்டுறனடி (ஆ)

வள்ளி. மாய வேடா போடா அட மாயவேடா போடா
வாடியே இசைகளேழும் நாடியே சங்கீதபதம்
பாடியே என்னை மயக்க ஓடியே வந்தாயோ இங்கு (மா)

ஸுப்ர. பாயும் தென்றலாலே மிகப் பாயும் தென்றலாலே
பாங்கியே மெத்தவும் மனம் ஏங்கியேசித்தஜன்கணை
ஓங்கியேதைத்ததால்மோகனுங்கியேதஞ்சமடைந்தேன் (ஆ)

வள்ளி. வாயும் நொந்திடாதோ உன்றன் வாயும் நொந்திடாதோ
வஞ்சியே தஞ்சமென்றெனைக் கெஞ்சியே வீணகமையல்
மிஞ்சியே பேசவாயாகில் அஞ்சியே உயிரிழப்பாய் (மா

ஸுப்ரமண்யர். வள்ளீ! நான் எவ்வளவு வேண்டியும் 'கொடிறும் பேதையும் கொண்டது விடா' என்பது போல் ஒரே பிடிவாதமாய் என் வேண்டுகோளை மறுப்பது நியாயமா? வள்ளீ, சொல்வதைக்கேள்.

பத்துலட்சம் பொன்னைத் தாரேன் என்மேற் பட்சம்
வையடி தயை செய்யடி
பாவையாளே உன்மேல் ஆவ லாகினேன் கண்
பாரடி துயர் தீரடி
அரசாளும் புவியெல்லாம் ஸரஸாங்கியே தருவேன்
அணையடி தஞ்சம் இணையடி
அங்கஜன் கணையினால் பங்க மிக வடைந்து
வந்தேனே மனம் நொந்தேனே.

வள்ளி. உனக்கு ராஜ்யங்கூட இருக்கின்றதா? மனோராஜ்யமோ? நீ என்ன ராஜ்யத்தை ஆளப்போகின்றாயோ தெரியவில்லை.

ஸுப்ரமண்யர். வள்ளீ, என் மனோராஜ்யத்தை நீ அபஹரித்துக்கொண்டாய், உண்மையே. மற்றப்படி இந்த லோகாதிபத்யமே வேண்டுமென்றாலும் தருவேன்.

வள்ளி. நீ ஆயிரந்தான் கொடுத்தாய். ஜாதிக் குறத்திமுன் உன் ஜபம் செல்லாது, போய்ச்சேர்.

ஸுப்ரமண்யர். [கோபத்துடன்] வள்ளீ, என் மகிமை தெரியாமல் ஒரே மூர்க்கமாய்க் கூறுகின்றாயா? பார், உன்னை என்னபாடு படுத்தி எடுத்துக்கொண்டு போகின்றேன்.

வள்ளி. [சேடியிடம்] ஸகி, ஒரு வேடிக்கை செய்கின்றேன். [பயந்தவள்போல் வேடனிடம்] ஐயா, வேடரே, இல்லை, நான் இதுவரையிலும் செய்ததெல்லாம் தவறுதான்.

மன்னிக்கவேண்டும். இனி தாங்கள் என்னை என்ன செய்யச் சொன்னாலும் செய்கின்றேன். கோபிக்க வேண்டாம்.

ஸுப்ரமண்யர். ஆனால், புறப்படு உடனே, என் ஊருக்குப் போவோம்.

வள்ளி. சீ, போ! மானங்கெட்டவனே! ஒருபடி தாழ்ந்து பார்ப்போமென்று பார்த்தால் 'புறப்படு, புறப்படு, புறப்படு, புறப்படு' என்று பதறுகின்றாயா? வேடா! உனக்குக் கடைசிமுறை சொல்கின்றேன்.

நற்குணத் துடனே நீதான் நடந்துபோ இல்லை யென்றால்
தர்க்கம்பண் ணாதே யென்றன் தமயன்மார் வருவார் வந்தால்
விற்கரத் துடைய வாளால் வெட்டுவார் முகம்பா ராமல்
பொற்கொடி யெதிர்நில் லாதே வருங்குறி புகன்றேன் வேடா

[வள்ளியும் மாலினியும் செல்லுதல்]

ஸுப்ரமண்யர். ஐயோ! இம்மாதரசி, அடங்காக் கோபத்தோடு போய்விட்டனளே. என்னை இன்னானென்றறியாமல் இவள் என்னோடு பேசுவது எனக்கு இன்பந்தருவதாய் இருக்குமென்றெண்ணி நான் பூண்ட வேஷம் எனக்குத் துன்பந்தருவதாயல்லவோ முடிந்தது? என்ன செய்வேன்? இனி முன்வைத்த காலைப் பின்வாங்குவதிற் பயனில்லை. என்னை அவள் இன்னானென்று அறியாமலே எனக்கு இசையும்படி செய்தாலன்றி நாரதரிடம் நமக்குக் கௌரவம் இராது. எவ்வளவு தூரம் முயன்றும் அவ்வேந்திழையின் ஸ்பர்சஸுகமும் நமக்குக்கிடைக்காமற் போயிற்றல்லவா? இந்த ரூபத்தோடு எப்பொழுதும் இங்கிருப்பதென்றால் முடியவில்லை. ஏனெனில், அடிக்கடி அவளுடைய இனத்தார் இங்கு

வந்து போய்க்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் வரும் போதெல்லாம் மறைந்துகொள்ளவேண்டியதா யிருக்கின்றது. ஆகையால் எல்லோரும் அறிய நாம் இவளுடன் பழகத்தக்க வேஷத்தைத் தரித்து இவளோடு இணைபிரியாதிருக்க வழிதேடவேண்டும். [சற்று யோசித்து] ஒன்று செய்வோம். பால்ய யௌவன கௌமார வார்த்திக தசைகளில் பால்யமும் வார்த்திகமும் பெண்களோடு வேடிக்கையாய்ப் பழக அநுகூலமான நிலைமைகள். ஆகையால் தொண்டு கிழமான பண்டார வேஷம் பூண்டு இவள் இனத்தாரைக் கண்டு ஸாஹஸம் செய்து எப்படியாவது இவளையே நமக்குப் பணிவிடைப் பெண்ணாக நியமிக்கும்படி கேட்போம். வள்ளியாலடைந்த அநுராகமே தேகாத்யந்தம் நிரம்பித் ததும்பித் தங்க இடமில்லாமற் பொங்கி வழிந்ததோ என்னுமாறு காஷாயத்தை யணிந்து அவளுடைய திருநாமத்தை ஜபித்துக்கொண்டு அவர்கள் வரும் வழியில் ஸஞ்சரிப்போம்.

[செல்லுதல்]

---

# அங்கம் 3.

---

## களம் 1.

இடம். தினைப்புனம்.

ப்ரவேசம். நம்பிராஜன், நல்லறநம்பி, கிள்ளிவளவன் இளந்திரையன், நலங்கிள்ளி, ஸேவகன் முதலாயினோர்.

**நம்பிராஜன்.** மைந்தர்காள்! இன்னம் இரண்டொருவாரத்தில் நமது தினையை அறுத்துவிடலா மென்று நினைக்கின்றேன்.

**நல்லறநம்பி.** அரசே! அத்தனைநாள் வேண்டியதில்லை.

**நம்பிராஜன்.** மந்திரீ! இதற்குள் நாம் நமது வள்ளிக்குத் தகுந்த வரனைத் தீர்மானிக்கவேண்டு மல்லவா?

**நல்லறநம்பி.** அரசே! எதற்கும் முருகக்கடவு ளிருக்கின்றார்.

**கிள்ளிவளவன்.** அண்ணா! அதோ யாரோ ஒரு பெரியவர் வருகிறார்!

**இளந்திரையன்.** ஆமாம். பழுத்த பழம்!

**நலங்கிள்ளி.** ஐயோ பாவம்! தொண்டுகிழம்!

**ஸேவகன்.** தாடி ஒரு முழம்.

ப்ரவேசம். கிழவேஷத்தில் ஸுப்ரமண்யர்.

**நம்பிராஜன்.** ஸ்வாமீ! தாங்கள் எங்கிருந்து வருகின்றீர்? ஏன் இப்படி நடுக்குகிறது? பயப்படவேண்டாம்! நாங்கள் ஒன்றும் செய்யமாட்டோம், சொல்லுங்கள்.

**ஸுப்ரமண்யர்.** அப்பனே, பயமில்லை. வெகுதூரம் நடந்து வந்த களைப்பால் தலைசுற்றுகின்றது. நீங்கள் யாரோ?

**நம்பிராஜன்.** ஸ்வாமீ! நான் இந்த மலைநாட்டுச் சிற்றரசன். என்னை நம்பிராஜன் என்பார்கள்.

ஸுப்ரமண்யர். அப்படியா? ஸரிதான்: இவர்கள் யார்?

நம்பிராஜன். இவர் என் மந்திரி. இவர்கள் என் மைந்தர்கள். இவன் என் ஸேவகன். ஸ்வாமீ! தாங்கள் இருப்பது எந்த ஊரோ? எங்கெங்கு சென்று வருகிறீர்கள்?

ஸுப்ரமண்யர். நான் இருப்பது கழுகுமலை. ஸ்வாமிமலை, பழனிமலை, சோலைமலை, கழுக்குன்றம், பரங்குன்றம் முதலிய ஸ்தலங்களுக்குச் சென்று இப்படி வந்தேன்.

ஸேவகன். தாதாவுக்குக் குன்றும் மலையுமே என்றும் அலையும் இடம்போலிருக்கிறது.

நம்பிராஜன். ஸ்வாமீ! இப்பொழுது அடியேன் செய்யத் தகுந்த தொண்டு யாது?

ஸுப்ரமண்யர். ஸமீபத்தில் கன்யாகுமரி இருக்கிறதாகக் கேட்டு அதை நாடிவந்தேன். குமரிதீர்த்தம் கிடைத்தால் ஜரை நரை யெல்லாம் போய்விடு மென்று சொல்வார்கள்.

ஸேவகன். கிழங்களுக்குமட்டும் சபலம் போவதில்லை. சாகுங் காலத்தில் ஜரை நரை போகவேண்டுமா?

நம்பிராஜன். அடே! பெரியோரை அப்படியெல்லாம் பழிக்காதே. குமரியின் பெருமையைச் சொன்னார். அதனால் அவர் தன்னுடைய ஜரை நரை நீங்கத்தான் அங்கே போகிறாரென்று எண்ணிவிடலாமா? மந்திரீ! எனக்கொன்று தோன்றுகின்றது. இவரை இங்கேயே கொஞ்சகாலம் இருக்கச்சொல்லி இவருக்கு சிச்ருஷை செய்தால் இவருடைய ஆசீர்வாதத்தால் நமது குழந்தைக்கு நல்ல வரன் கிடைக்கக்கூடும்.

சேவகன். ஆமாம்! ஆமாம்! நாம் படவேண்டிய கஷ்டத்தை யெல்லாம் இவர் முன்னமே பட்டு ஊர் ஊராய்ச் சுற்றிப் பார்த்து வந்திருக்கின்றார்; ஆதலால், நல்ல வரனைத் தெரிந்துரைப்பார்.

நம்பிராஜன். மேலும், நமது குழந்தை தனியாக இருக்கின்றாள். இவரை இங்கு நிறுத்திக்கொண்டால் இவரோடு கதை காரணத்தைச் சொல்லிக்கொண்டு வேடிக்கையாய்ப் பொழுது போக்குவாள்.

கிள்ளிவளவன். ஆமாம், அண்ணா, அதுதான் ஸரி.

நம்பிராஜன். ஸ்வாமீ! தாங்கள் இங்கேயே கொஞ்சகாலம் தங்கியிருந்து எங்கள் ஆதித்யத்தை அங்கீகரிக்கவேண்டும்.—அடே! குழந்தை வள்ளியைக் கூப்பிடு.

சேவகன். அம்மா! யாரோ பெரியவர் வந்திருக்கின்றார். நாரதமுனிவரென்று எண்ணவேண்டாம்.

ப்ரவேசம். வள்ளி.

வள்ளி. தாதா! நமஸ்கரிக்கின்றேன்.

ஸுப்ரமண்யர். சீக்ரமே விவாஹ ப்ராப்திரஸ்து! அப்பனே, குழந்தை யார்?

நம்பிராஜன். நமது குழந்தைதான்—வள்ளி யென்று பெயர்.

ஸுப்ரமண்யர். அப்படியா?

நம்பிராஜன். குழந்தாய்! இப்பெரியவர் குமரி தர்சனங் கோரிவந்தவர்: இந்த வழியே வந்தார். இவரைக்கண்டதும் எனக்கு ஒரு யோசனை தோன்றியது: நீ தனியாக இருக்கின்றாயே, பாட்டுக்கதையைப் படித்துக் கொண்டு இவரோடு கொஞ்சநாள் வேடிக்கையாய்க்

காலங்கழித்துக்கொண் டிருக்கலாமே என்று உன்னை அழைத்துக்கொண்டுவரச் சொன்னேன்.

வள்ளி. ஆமாம், பெரியவர் இங்கே இருக்க ஸம்மதிக்க வேண்டுமே?

ஸுப்ரமண்யர். உங்கள் பரிவு வார்த்தையைக் கேட்கும் போதே எனக்கு அளவிறந்த ஆநந்தமுண்டாகின்றது. குமரிதர்சனப்ராப்தி இங்கேயே கிடைத்துவிட்டதென்று சொல்லலாம்.— ஆமாம், என்னை இங்கிருக்கும்படி கேட்கின்றீர்களே, இந்தக் கிழத்துக்கு அருவருப்பில்லாமல் ஆசையோடு தொண்டு புரியத்தக்கவர்?

நம்பிராஜன். ஸ்வாமீ! இதோ என் மைந்தர்கள் இருக்கின்றார்கள். மந்திரி இருக்கின்றார். நான் இருக்கின்றேன்.

ஸுப்ரமண்யர். ஐயையோ! உங்களிற் சிலரைப் பார்க்கும்போதே பயமாயிருக்கின்றது. அன்றியும், காட்டுத் தொழிலிற் பழக்க முடையவர்களாதலால் கறடு முறடான உங்கள் கைகால்கள் என்மீது படும்போதே பாறையைத்தூக்கி வைத்தாற்போல் இருக்குமே? உங்கள் சிச்ருஷையில் எனக்கு அவ்வளவாகத் திருப்தியிராது.

நம்பிராஜன். ஆனால், ஸ்வாமீ, இதோ என் குழந்தை வள்ளி இருக்கிறாள்.

ஸுப்ரமண்யர். அவள் என்னுடைய நோக்கமறிந்து என் சொற்படி நடக்கவேண்டும். அப்படி நடக்க அவளுக்கு ஸம்மதமானால் அவளை நியமிக்கலாம்.

நம்பிராஜன். வள்ளீ! அவருடைய நோக்கமறிந்து அவருக்குப் பணிவிடை செய்துகொண்டிரு. பெரியவருடைய ஆசீர்வாதத்தைப் பெறு. நாங்கள் போய் வருகின்றோம். ஸ்வாமீ, எங்களுக்கு உத்திரவுதானா?

ஸுப்ரமண்யர். போய்வாருங்கள் !

வள்ளி. பிதா ! பட்சிகளை யார் ஓட்டுவார்கள் ?

நம்பிராஜன். அந்த வேலையை உன் சேடி செய்வாள்; நீ கவலைப் படவேண்டாம்.

வள்ளி. ஸரி.

[வள்ளியும் ஸுப்ரமண்யரும் தவிர மற்றவரெல்லோரும் செல்கின்றனர்]

வள்ளி. தாதா ! உமக்கிப்பொழுது என்ன வேண்டும்?

ஸுப்ரமண்யர். எனக்கு வேண்டியது, வள்ளீ,

[ராகம் - ஆனந்தபைரவி. தாளம் - ஆதி.]

பசியாலுடல்மெலிந்தேன் கொஞ்சம் சுசியாயமுதளிப்பாய்
பாக்கியம் பதினாறும் சிலாக்கியமுடன் பெறுவாய்

வள்ளி. புனத்தி லமுதேது யாதும் புசிக்கக் கிடையாது
போதகுரு நாதனேயிப் போததற்கு யாது செய்வேன்

ஸுப்ரமண்யர். பசித்தவனைப் பார்த்து அப்படிச் சொல்லாதேடி !

கண்கள் பஞ்சடைய இருகாதும் செவிடாக
காய்ந்ததா லென்வயிறுமின் றேந்திழையே என்னசெய்வேன்?

வள்ளி. தாதா ! இப்புனத்தில் வேறொன்றும் அகப்படாது.

தேனுந்தினைமாவும் கையில் திரட்டித் தருகின்றேன்
தின்றுவயிற்றின் பசியை இன்று தீர்த்தருள் செய்குவீர்.

கொண்டுவரட்டுமா?

ஸுப்ரமண்யர். நீ முகமலர்ந்து உப்பில்லாக் கூழ் இட்டாலும் அதுவே எனக்கு அமுதமாகும். ஆகையால், இருப்பதைக் கொண்டுவா.

வள்ளி. [பரணிலிருந்து ஒரு தட்டில் தேனும் தினைமாவும் கொண்டுவந்து வைத்து] தாதா! இதோ இந்தத் தட்டில் தேனுந் தினைமாவும் கொண்டு வைத்திருக்கின்றேன். அமுதுசெய்யுங்கள். ஆனால் ஒன்று. இது எங்களைப் போன்றவர்களுக்கே ஜீரணமாவது கஷ்டம். நெஞ்சில் அடைத்துக் கொள்ளாமல் கொஞ்சம் கொஞ்சமாய் எடுத்துப் புசிக்கவேண்டும்.

ஸுப்ரமண்யர். வள்ளீ, இதெல்லாம் நான் முன் பின் புசித்தறியேனடி: நீயே அளவறிந்து என் வாயில் எடுத்துப் போடு.

வள்ளி. ஆகட்டும். தாதா, வாயைத்திற! [வாயில் தினைமாவைப் போடும்போது ஸுப்ரமண்யர் வள்ளியின் கையைப் பிடித்துக்கொள்ள யத்தனிக்கின்றார்.] கை யென்னத்திற்கு மேலே வருகின்றது?

ஸுப்ரமண்யர். தாடி மீசையைத் தள்ளிக்கொள்கின்றேன், இரு.

வள்ளி. அப்படியா? ஸரிதான், தள்ளிக்கொள்!—கூழுக்கும் ஆசை பாழாப்போன மீசைக்கும் ஆசை!

ஸுப்ரமண்யர். ஹூம், போடு.

[வள்ளி தினைமாவை வாயிற்போட ஸுப்ரமண்யர் மறுபடியும் கையைப் பிடித்துக்கொள்ள யத்தனிக்கின்றார்.]

வள்ளி. இந்த நாசமாப்போன கை கீழே இருக்கட்டுமே!

ஸுப்ரமண்யர். இல்லையடி. தலையாடும்போது கண்ணில் மூக்கிற் போட்டுவிடப் போகிறாயே என்று கை மேலே வருகின்றது.

வள்ளி. உனக்குத்தான் கைகால் ஆட்டங் கொடுத்திருக்கிறதென்றால் எனக்குக் கூடவா கை குலைப்பு? பயப்பட

வேண்டாம்: எனக்குக் கண் தெரிகின்றது, ஜாக்ரதை யாய்ப் போடுகிறேன்.

ஸுப்ரமண்யர். [தினைமாவை உண்டு நெஞ்சி லடைத்துக்கொண் டதுபோல் அபிநயித்து] அடி, பாவி! நஞ்சைக் கலந்து தின்னென்று சொன்னாயே! நெஞ்சிலடைத்துக்கொண் டதே! என் ஜீவன் போகின்றதே!

[ராகம்-சுரட்டி. தாளம்-சாபு.]

பாவி யென்செய்வேன் எப்படி உய்வேன்
ஆவியை யமனாக அபஹரித்தாயே
தூவிய தினைமாவில் சூதாகவே பச்சை
நாவியைக் கலந்தாயோ நஞ்சை வைத்தாயோ.

வள்ளி. நஞ்சைக்கலந்தேனென்றும் நாவியைவைத்தேனென்றும்
நெஞ்சம் குளிர்ந்துரைக்க நினைந்தீரே ஐயா
மிகத்துணிந்தீரே ஐயா

ஸுப்ர. மெய்நடுங்குதையோ மேன்மூச் சொடுங்குதையோ
கைகால் துவண்டு தொண்டை காயுதே மானே
என்ன காலமோ தேனே.

வள்ளி. நான் அப்பொழுதே சொன்னேன்: கொஞ்சங் கொஞ்சமாய்ப் புசிக்கவேண்டுமென்று. என் வார்த் தையைக் கேளாமல் 'காய்ந்த மாடு கம்பங்கொல்லையில் இறங்கினாற்போல்' ஆத்திர ஆத்திரமாய்த் தின்றுவிட்டு என்மீது பழிபோடுகின்றீரா? உம்மைச் சொல்லி பய னில்லை. என் புத்தியைச் சொல்லவேண்டும்.

காலந்தன்னை நொந்து கவலை கொள்ளாதீர் நீர்
பால்போலவே சுனையில் பருகலாம் தண்ணீர்
இனிப் பெருக்காதீர் கண்ணீர்.

ஸுப்ரமண்யர். ஆனால், சீக்கிரம் ஏதேனும் ஒரு சுனையருகில் அழைத்துக்கொண்டு போடி: என் ப்ராணன் போய்க்கொண்டிருக்கின்றது.

வள்ளி. ஆனால், இந்தக் கழியைப் பிடித்துக்கொள். [என்று ஒரு கழியைக் கையிற் கொடுக்கின்றாள்.]

ஸுப்ரமண்யர். ஸரி, அப்படியே. [கழியைப் பிடித்துக் கொண்டு வள்ளியின் கையைத்தொட யத்தனிக்கின்றார்.]

வள்ளி. அந்தக் கையேன் விஷமேறுகிறாற்போல் என் கையண்டை வருகின்றது ?

ஸுப்ரமண்யர். இல்லையடி, கழி நழுகி விழுந்து விட்டாலும் கை நழுகி விழமாட்டேனல்லவா ?

வள்ளி. அதெல்லாம் கூடாது. விழுந்தால் நானிருக்கின்றேன். கை அந்தப் பக்கமே இருக்கட்டும்.

ஸுப்ரமண்யர். ஆகட்டும், அப்படியே. [என்று மறுபடியும் கையைத் தொட யத்தனிக்கின்றார்.]

வள்ளி. [திரும்பிப் பார்த்து] கை ! கை !

ஸுப்ரமண்யர். இல்லையடி. [என்று கையை இழுத்துக் கொள்கின்றார்.]

வள்ளி. ஊம், கைகிட்ட வந்தால் அப்படியே விட்டு விட்டுப் போய்விடுவேன் : தெரியுமா ! [கொஞ்ச தூரம் அழைத்துக்கொண்டு போய்] இதோ, இந்தச் சுனையில் இறங்குகின்றாயா ?

ஸுப்ரமண்யர். இது பாசியாய் இருக்கின்றது. வேறேதேனும் சுனையைக் காட்டடி !

வள்ளி. இதோ, இந்தச்சுனை நன்றாயிருக்கின்றது. இதில் இறங்கித் தண்ணீர் அருந்தலாம்.

ஸு¬ப்ரமண்யர். [சுனையில் இறங்கி வேண்டுமென்று கால்தவறி விழுந்து] ஹா ! ஐயோ ! சுனையில் விழுந்துவிட்டேனே !

வள்ளி. ஐயோ ! ஸகி ! ஸேவகா ! கிழம் விழுந்து விட்டதே!

ப்ரவேசம். ஸேவகன்.

ஸேவகன். ஐயோ ! நாலுபேர் யாரேனும் வாருங்களேன் ! [என்று ஓடுகிறான்]

ஸு¬ப்ரமண்யர். ஹா ! ஐயோ !

வள்ளி. ஐயோ ! தண்ணீரைக் குடிக்கின்றதே !—தாதா ! இந்தக் கழியைப் பிடித்துக்கொண்டு கரையேறேன்.

ஸு¬ப்ரமண்யர். கை வழுக்குகின்றதடி. கையைக் கொடுத்துக் கரையேற்றடி.

வள்ளி. ஏனோ ? ஆசை ! ஆசை ! கையைக் கொடுக்கவா ! நன்றாய்க் கொடுப்பேனே !

ஸு¬ப்ரமண்யர். அடி வள்ளீ, முழுகிப் போகின்றேனே !

வள்ளி. நீ செத்துப்போயேன : எனக்கென்ன ?—இந்தக் கழியைப் பிடித்துக்கொண்டு வாயேன் ?

ஸு¬ப்ரமண்யர். ஐயோ ! உயிர் போகின்றதே !

வள்ளி. தொலைந்துபோ, எனக்கென்ன ?

[ராகம் - கானடா. தாளம் - ஆதி.]

ஸு¬ப்ர. ஏண்டி யென்னை இந்தச் சுனைதனில் தள்ளி
சும்மா இருப்பதும் ஏற்குமோ கள்ளி ?

வள்ளி. வேண்டு மென்று சுனையில் விழுந்தது மன்றி
வீண்பழி சுமத்துவதேன் விவேக மின்றி ?

ஸு¬ப்ர. ஆண்டியா மிவனுக்கு யாரு மில்லை யென்னும்
அலட்சியமான எண்ணமோ சண்டாளி இன்னும் ?

வள்ளி. ஆண்டவனே அவதூறு சொல்லாதீர்
அடாதவார்த்தைகள் சொல்லிஎன்னைக்கொல்லாதீர்

ஸுப்ர. சொல்லுவ தென்னடி சோரு தென் ஞவி
தொல்லுலகிலுன்னைப் போலுண்டோ பாவி ?

வள்ளி. ஐயோ! என்னசெய்வது? ஆபத்துக்குத் தோஷ மில்லை யென்பார்கள். கையைக்கொடுத்துத்தான் கரை யேற்றித் தொலைக்கின்றேன்.—ஐயோ! என்னமோ வெட்கமாயிருக்கின்றது.—தாதா! இந்தக் கழியைப் பிடித்துக்கொள்ளேன்? [லஜ்ஜையை அபிநயித்து கடைசி யில் கையைக்கொடுத்து எடுத்துவிடுகின்ருள்.]

ஸுப்ரமண்யர். [தனக்குள்] ஐயோ! இவள் கையைத்தொட்ட போது எனக்குண்டான ஸந்தோஷத்தை என்ன வென்று சொல்வேன்!

வள்ளி. தாதா! நீயே விழுந்துவிட்டு வீணுகத்தானே என் னைப் பழித்தாய்? — போகட்டும், பசியாறியாயிற்று. தண்ணீரும் குடித்தாயிற்று. இனி அந்த மரத்தடியில் உட்கார்ந்துகொண்டு 'சிவ சிவா' என்று சொல்லிப் போகிறவழிக்குப் புண்யத்தைத் தேடிக்கொள்.

ஸுப்ரமண்யர். தாகம் தீர்ந்தது: உண்மைதான்,—

வள்ளி. ஆனல்?

ஸுப்ரமண்யர். வேறென்று மில்லை:

ஆகத்தை வருத்து கின்ற அரும்பசி யவித்தாய் தண்ணீர்த்
தாகத்தை யவித்தா யின்னும் தவிர்ந்தில தளர்ச்சி மன்னே
மேகத்தை யனைய கூந்தல் மெல்லியல் வினையேன் கொண்ட
மோகத்தைத் தணித்தி யாயின் முடியுமென் குறையி தொன்றே

வள்ளி. அப்படிச் சொல்லடா வழக்கே என்ருனும்.

[ராகம் - அடாணு. தாளம் - ரூபகம்.]

ஸு. ப்ர. தாக விடாயைப்போல் மோக விடாயையும்
தணித்தாற் புண்யமடி பெண்ணே

வள்ளி. சண்டி பிறண்டிடில் காடுகொள்ளா திந்தச்
சமத்து செய்யாதே போ ஐயா.

ஸு. ப்ர. எப்படியு முன்னைக் கைப்பிடியாமல் நான்
எடுத்தடி வைத்திடேன் பெண்ணே.

வள்ளி. ஏழைக் குறும்பிது இந்தக் குறும்பெல்லாம்
இங்கே செல்லாதுபோ ஐயா.

ஸு. ப்ர. அப்படிச்சொல்லாதே என்பழி ஏற்காதே
அநியாயம் செய்யாதே பெண்ணே.

வள்ளி. விப்ரர்க்கு வாய்போக்காதே ஆண்டிக் கதுவும்சொல்
லாதே என்னும் சொல் மெய் ஐயா.

ஸுப்ரமண்யர். வள்ளீ, வெறுத்துரையாடி வீண்பழிக்கா ளாகாதேடி. அநியாயமாய் ஒரு ஜீவன் போய்விடும்.

வள்ளி. போகட்டுமே? இப்படிப்பட்ட பாபஜன்மம் லோகத்தில் இருப்பானேன்?

ஸுப்ரமண்யர். வள்ளீ, உன்காதலைப் பெறாததனால் நான் உயிரை விட்டுவிடுவேன். ஆனால், அந்தப்பழி உன்னைப் போன்ற உத்தமியை வந்தடையுமே என்றுதான் அஞ்சுகின்றேன்.

[ராகம்-கமாஸ். தாளம்-ஆதி.]

ஸு. ப்ர. சகிக்க முடியாது மையலே—முத்தம்
தாடி வனக் குறத் தையலே.

வள்ளி. தையலே என்று தலைசுற்றி இங்கு
தவிப்பதென்னக் கிழப்பையலே?

ஸுப்ர. தவிப்பது முன்னே மணப்பதற் கல்லவோ
சங்கைவிட் டிங்கிதம் சொல்லவோ ?

வள்ளி. சங்கைவிட் டிங்கிதம் பேசுவதே னென்னை
தந்திரமா யின்று வெல்லவோ ?

ஸுப்ர. தந்திரக்காரன் நான் அல்லடி மனம்
தாளேன் மனமென்னக்கல்லடி ?

வள்ளி. தந்திர மெல்லாம் பலிக்கா திங்கே நின்று
சமத்து செய்வாயேல் வில்லடி.

ஸுப்ர. பாவி மாரன்கணே கொல்லுகின்றதடி
பாவையே நீ தயைசெய்குவாய்.

வள்ளி. பாயும் புலிபோல் பிதா வருவா ருன்னைப்
பக்ஷிப்பதற்கு முன்னேகுவாய்.

ஸுப்ர. பக்ஷித்தாலும் என்னை ரக்ஷித்தாலும் என்றன்
பட்சம் உன்றனைவிட்டேகுமா?

வள்ளி. பட்சமுடன் பத்துலட்சம் கொடுத்தாலும்
பாவையென்னைத்தொடலாகுமா.

ஆகட்டும், பிதாவரட்டும்: உன்னை என்ன பாடு படுத்தி வைக்கின்றேன் பார்! [கோபத்துடன் பரணைநோக்கிச்செல்கின்றாள்.]

ஸுப்ரமண்யர். வள்ளீ !

வள்ளி. நான் வள்ளி யன்று, உன் விஷயத்தில் மஹா கள்ளி.

ஸுப்ரமண்யர். என்றாலும், நான் உன்னைத் தள்ளிவிட மாட்டேன். வள்ளீ ! வள்ளீ ! இங்கே வா சொல்கின்றேன்.

வள்ளி. நான் வரமாட்டேன்.

ஸுப்ரமண்யர். இப்படி வாயேன் சொல்கின்றேன்.

வள்ளி. ஹூஹூம், மாட்டேன்.—அடே! ஸேவகா! சேடீ! எல்லோரும் எங்கேயோ தொலேந்து போய்விட்டார்கள்!

ப்ரவேசம். ஸேவகன்.

ஸேவகன். அம்மா, ஏன் கூப்பிட்டீர்கள்.

வள்ளி. கேட்டையாடா கதையை? 'கிடக்கிற தெல்லாம் கிடக்கட்டும், கிழவனைத் தூக்கி மணையில் வை' என்றாற்போல், இந்தக் கிழத்தைக் கல்யாணம் பண்ணிக் கொள்ளவேண்டுமாம்.

ஸுப்ரமண்யர். பைத்தியக்காரீ! நான் சொன்னதெல்லாம் உண்மையென்று தானே நம்பிவிட்டாய்? காடு வா வா என்கிறது, வீடு போ போ என்கிறது. எனக்கென்னத்திற்குக் கல்யாணம்? நான் அப்படியெல்லாம் ஆசைப்படுவேனா?

வள்ளி. இல்லே, கொஞ்சம் ஆசைப்பட்டுத்தான் பாரேன்.

ஸுப்ரமண்யர். வள்ளீ! உண்மையாகக் கூறுகின்றேன்: நீ தனியே இருக்கிறாயே, இப்படி யேதேனும் நேர்ந்தால் எப்படி நடந்து கொள்கிறாயோ பார்ப்போமென்று உன் மனத்தைப் பரீக்ஷித்துப் பார்த்தேன்.

ஸேவகன். இப்படிப்பரீக்ஷிக்க இன்னம் பத்து வருஷம் போக வேண்டும்! தொண்ணூறும் பத்தும் குறுக்கே இருபதும் ஆயிற்று, கிழத்துக்கு ஸந்தேஹத்தைப் பார்!

வள்ளி. வாஸ்தவமாகத்தான் இருக்குமடா. இல்லாவிட்டால் இந்தக் கிழவயதில் இப்படி யாரேனும் செய்வார்களா? தாதா, நான் போய் வரட்டுமா?

ஸுப்ரமண்யர். வள்ளீ, போவதிருக்கட்டும், இப்படி உட்கார். எனக்கு ஜோஸ்யம் தெரியும் : எவ்வளவு ஆச்சர்யமாய் நடந்ததை நடந்தபடி சொல்கின்றேன் பார்.

வள்ளி. உண்மையாகவா? ஆனால், முதலில் அவனுடைய கையைப் பார்த்துச் சொல்.

ஸேவகன். தாதா! தா தா என்று கையை நீட்டினால் என்னத்தைத் தரப்போகிறாய்? அது கிடக்கட்டும். எனக்கு எத்தனை குழந்தைகள்? முதலில் அதைச் சொல்.

ஸுப்ரமண்யர். உனக்கு ஸம்ஸாரமே இல்லையே, குழந்தைகளேது?

ஸேவகன். ஸம்ஸாரமில்லை யென்று கையில் எழுதியாவைத்திருக்கின்றது? போகட்டும், மறுபடியும் கல்யாணமானால் எத்தனை குழந்தைகளென்று சொல்லேன்.

ஸுப்ரமண்யர். உனக்குக் கல்யாணமே ஆகாது.

ஸேவகன். ஆனால், எனக்குக் கல்யாணமே இல்லையோ? போகட்டும் : க்ஷேமப்பட்டேன்.

ஸுப்ரமண்யர். வள்ளீ, உன் கையைக்காட்டு.—இடது கையை.—வள்ளீ, நீ ஒரு புருஷன்மீதி லாசை வைத்திருக்கின்றாயா?

வள்ளி. ஆனால், பெண்ணென்றிருந்தால் ஆசையில்லாமலா இருப்பாள்? அதெல்லாம் கிடக்கட்டும். இன்று இங்கு என்ன நடந்தது? யார் வந்திருந்தார்கள்?
அதைச் சொல் பார்ப்போம்.

ஸுப்ரமண்யர். ஒரு வேடன் வந்திருந்தானு?

ஸேவகன். அந்த யோக்யன் ஸமாசாரம் என்னத்திற்கு? தாதா, வேறு யார் வந்திருந்தார்கள் சொல் பார்ப்போம்.

ஸுப்ரமண்யர். அதற்குமுன் நாரதர் வந்திருந்தாரா?

வள்ளி. எண்டா! இவரும் பெரியவர், அவரும் பெரியவர். இரண்டுபேரும் ஒருவரை யொருவர் கண்டு பேசிக் கொண்டு வந்தார்கள் போலும்!

ஸேவகன். இருக்கும், இருக்கும்.

வள்ளி. தாதா! அதெல்லாம் கிடக்கட்டும்: நான் யார்மேல் ஆசை வைத்திருக்கின்றேன்? அது எப்படி முடியும்? அதைச்சொல். அதைச்சொன்னால் உன் ஜோஸ்யம் நல்ல ஜோஸ்யந்தான்.

ஸுப்ரமண்யர். நீ உன் குலதெய்வமாகிய முருகக்கடவுள்மீது மோஹம் கொண்டிருக்கின்றாய்.

வள்ளி. [ஆச்சர்யத்துடன்] நம்முடைய குலதெய்வமே இப்படி வந்து ஜோஸ்யம் சொல்கிறதடா!

ஸேவகன். ஆனால் ஒரு கோயில் கட்டி அதில் இவரை வைக்க வேண்டியதுதான்.

வள்ளி. தாதா! அது எப்பொழுது முடியும்?

ஸுப்ரமண்யர்.. சீக்கிரத்திலேயே முடியும். இதுவரையிலே யே முடிந்திருக்கவேண்டும்,—

வள்ளி. தாதா! நாழியாகின்றது. நான் வரட்டுமா? போய்ப் பக்ஷிகளை யோட்டவேண்டும்.

ஸுப்ரமண்யர். வள்ளீ! என்னைத்தனியாக விட்டுவிட்டுப் போனால் எனக்கு மிகவும் பயமாயிருக்கும்.

வள்ளி. சாகிற கிழத்துக்குப் பயமென்ன? தாதா! இன்னம் ப்ராணன் உனக்குத் தித்திப்பா?

ஸுப்ரமண்யர். ஆனால் உனக்கிந்தக் காட்டு மிருகங்களிடத் தில் பயமே இல்லையா?

வள்ளி. வேண்டுமானல் நீ ஒவ்வொன்றுய்க் கேட்டுப்பாரேன்.

ஸுப்ரமண்யர். இந்த ஸிம்ஹம் என்கிருர்களே அது வந்தால் என்ன செய்வாய்?

வள்ளி. நன்றுயிருக்கின்றது!

ஸேவகன். ஸிம்ஹம் என் கண்ணிற்பட்டால் நாயாயோட வேண்டாமா?

ஸுப்ரமண்யர். புலி?

ஸேவகன். புலியும் வரும் கிலியும் வரும்!

ஸுப்ரமண்யர். கரடி?

வள்ளி. கரடியா? கரடியோடு இவன் சண்டை செய்வானே: ஏண்டா?

ஸுப்ரமண்யர். அப்படியா?

ஸேவகன். கொஞ்சநாழி இருந்து பார்த்தால் தெரியும்: எப்படிப்பட்ட சண்டையென்று.

ஸுப்ரமண்யர். ஆனல் எந்த மிருகம் வந்தாலும் பயமில்லையா?

ஸேவகன். மிருகம் எல்லாம் கம்மென்று போகவேண்டியதுதான். ஆனல் எனக்கிந்தக் கொசுவைக் கண்டால் மட்டும் அதிகபயம். அது எந்தப் பட்டறையில் மூக்கைத் தீட்டிக்கொண்டு வருகிறதோ தெரியவில்லை. சுறுக்கென்று ஒரு குத்து குத்தி உறிஞ்சால் உள்ளே இருக்கிற ரத்தத்தையெல்லாம் வெளியே எடுத்துவிடுகின்றது.

ஸுப்ரமண்யர். போகட்டும்: இந்தக் காட்டானை வந்தால்?

வள்ளி. என்ன! காட்டானையா! [என்று பயந்து மூர்ச்சிக்கின்ருள்.]

ஸேவகன். போ! தாதா! இப்பொழுதுதான் நீ அயோக்ய தாதா. அதை யேன் ஞாபகப்படுத்தினுய்? அம்மா! அம்மா! ஒன்றுமில்லை, எழுந்திரும்.

வள்ளி. யானை யொன்றும் இங்கு வராதே? எனக்குப் பயமாயிருக்கின்றது. நான் போய்ப் பரண்மீது ஏறிக் கொள்கின்றேன்.

ஸேவகன். ஆனல் போகலாம்.

[ஸேவகனும் வள்ளியும் செல்கின்றனர்.]

ஸுப்ரமண்யர். நான் வள்ளி பரிணயத்தைக் கோரி வருமுன் என் அண்ணு கணநாதரை ஸ்தோத்ரம் செய்யாமல் வந்தது ஒரு பெருங்குற்றம். இவளுக்கும் யானையைக் கண்டால் பயமென்று தெரிகின்றது. ஆகையால், விநாயகக்கடவுளை யானை ரூபத்தில் வருமாறு வேண்டி எப்படியாவது இவளைப் பயமுறுத்தி என்னை மணந்து கொள்ளும்படி செய்கின்றேன்.

[ராகம்-மாளவி. தாளம்-ஆதி.]

பல்லவி.

வருவாயே என்முன் கரிமுகனே
மனேஹரியை நான்மணந்திட (வரு)

அநுபல்லவி.

மருவிய யானை தனைநிகர வாராயிம்
மாதேங்கி மருள (வரு)

சரணம்.

புரமூன் ருரழலா லெரியப் புன்முறுவல்
புரி சிவனு ருளும்
பரமனே நானிவ் வள்ளிதனைப்
பண்பாகவே பாரில் சேர்ந்திட (வரு)

ப்ரவேசம். ஒருபுறம் வள்ளியும் மற்றொருபுறம் யானையும்.

வள்ளி. தாதா! நாழியாகின்றதே, பாணுக்கு வரவில்லையா?

ஸுப்ரமண்யர். [புன்சிரிப்புடன்] வந்தால் என்னைக் கல்யாணம் செய்துகொள்கிறாயா?

வள்ளி. ஆசை! ஆசை! கல்யாணமா செய்து கொள்ள வேண்டும்! ஆகட்டும்! ஆகட்டும்! அண்ணாவிடம் சொல்கின்றேன். [திரும்பிப்பார்த்து யானையைக் கண்டு பயந்து]

ஐயரே பண்டாரக் கிழவனாரே
ஐயோ நான் என்ன செய்வேனே!

ஸுப்ரமண்யர். வள்ளீ, என்ன விசேஷம் ஏனிப்படிப் பயப் படுகின்றாய்?

வள்ளி. யானை வந்தென்னை மிரட்டுதையோ
அருமையாய் என்றனைக் காருமையா!

ஐயோ, தாதா! ஆனையைப் போகச் சொல்லேன்.

ஸுப்ரமண்யர். என்னைக்கல்யாணம் பண்ணிக்கொள்ளுகிறாயா?

வள்ளி. கல்யாணமா? உனக்குத் தம்பி யாராவது இருக்கிறார்களா?

ஸுப்ரமண்யர். தம்பியா? அதெல்லாம் உதவாது. என்னைத் தான் பண்ணிக்கொள்ளவேண்டும்.

வள்ளி. கல்யாணம் பண்ணிக்கொள்ளாவிட்டால்?

ஸுப்ரமண்யர். யானை போகாது.

வள்ளி. ஆனால் கல்யாணம் பண்ணிக்கொள்கிறேன்.

ஸுப்ரமண்யர். பொய் சொல்லாதே. பொய் சொன்னால் மறுபடியும் யானையை வரவழைத்துவிடுவேன்.

வள்ளி. இல்லை, பொய்யில்லை.

ஸுப்ரமண்யர். யானை! கல்யாணம் பண்ணிக்கொள்கிறாளாம், போ! [யானை செல்கின்றது]

வள்ளி. தாதா! யானை போய்விட்டதா? இனி வராதே? உன்னை ஏய்த்துவிட்டேனே! உன்னை ஏய்த்துவிட்டேனே! எங்கிருந்தோ ஒரு யானை வந்துவிட்டதாம் 'நான் வரவழைத்துவிட்டேன், நான் வரவழைத்துவிட்டேன்' என்று என்ன பெருமை! கல்யாணமா செய்து கொள்ளவேண்டும்? ஆசையைப்பார் கிழத்துக்கு!

ஸுப்ரமண்யர். யானை! கல்யாணம் பண்ணிக்கொள்ள மாட்டாளாம். ஏதோ மறுபடியும் வா!

வள்ளி. ஆஹா! வரும்! நன்றாய் வருமே!

ப்ரவேசம். யானை.

ஐயோ! தாதா! யானையைப் போகச் சோல்லேன், எனக்குப் பயமாயிருக்கின்றதே!

ஸுப்ரமண்யர். ஊம்! முன்னே என்ன சொன்னாய்? 'உன்னை ஏய்த்து விட்டேனே! உன்னை ஏய்த்து விட்டேனே!' யானை வந்துவிட்டதே! யானை வந்துவிட்டதே!

வள்ளி. ஐயோ! தாதா! என்னைக் காப்பாற்றுமே!

ஸுப்ரமண்யர். கல்யாணம்?

வள்ளி. பண்ணிக்கொள்கின்றேன்.

ஸுப்ரமண்யர். ஸத்யமாய்?

வள்ளி. ஸத்யமாகத்தான்.

ஸுப்ரமண்யர். அதெல்லாம் உதவாது. உன் வார்த்தையை நம்பமாட்டேன். உன் குலதெய்வத்தின் மேல் ஸத்யம் செய்யவேண்டும்.

வள்ளி. ஸுப்ரமண்யன் பேரிலாணை உன்
சொந்த மனைவி ஆவேனையா

[சற்று சிந்தித்து] ஐயோ ! நானொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைத்ததே! ஹே! மயில் வாகனு! இதுவோ உன்னருள்! கல்லாலடித்தவனுக்கு உன் தந்தை காட்சி தரவில்லையா? வில்லாலடித்த விஜயனுக்கு அருள் புரியவில்லையா? அப்படி நான் என்ன உன்னிடத்தில் அபசாரப்பட்டேன், இப்படி நீ என்னைப் பரிசோதிக்க? போகட்டும், இது உனக்கு ஸம்மதமாயின் நானும் உன் எண்ணத்துக்கு விரோதமாய் நடக்கவில்லை.—ஐயா! இனி இந்த யானை என்னை ஒன்றும் செய்யாதே?

ஸுப்ரமண்யர். ஒன்றும் செய்யாது. வேண்டுமானுல் நீ யானையோடு பேசலாம்.

வள்ளி. யானை! நான் இவரைக் கல்யாணம் செய்துகொள்வதுதான் உனக்கிஷ்டமா? [யானை தலையசைக்கின்றது] கல்யாணம் செய்து கொள்ளாவிட்டால்? [யானை முட்டவருகின்றது] ஐயோ! வேண்டாம்! கல்யாணம் பண்ணிக்கொள்கின்றேன். இனி யென்னை ஒன்றும் செய்யமாட்டாயே? அருகில் வரட்டுமா? [யானை வாவென்று தலை யசைக்கின்றது. வள்ளி பயந்து பயந்து அதனருகிற் சென்று அதைத் தடவிக்கொடுத்து ஆச்சர்யத்துடன்] என்ன ஆச்சர்யம்! எவ்வளவோ பயங்கரமாய் இருக்க வேண்டிய இந்த யானை நான் இவரைக் கல்யாணம் செய்துகொள்வதாகச் சொன்னதும் நான் சொன்னபடியெல்லாம் கேட்கின்றது! இது என்னத் தெய்வீகமோ தெரியவில்லை.—[ஸுப்ரமண்யர் மறைகின்றார்] ஆஹா! இதென்ன இது! திடீரென்று கிழவர் மறைந்துவிட்டார்! ஹே, மால் மருகா! வேல்

முருகா! யானை தோன்றிய ஆச்சர்யத்தையும், கிழவர் மறைந்த மாயையையும் நினைத்தால் இது உன் திருக் கூத்தே என்பதில் ஸந்தேஹமே இல்லை. நீ யென்னை வந்தாளாயெனினும் உன்னருளே நோக்கி நிற்கின் றேன். பிறகு உன் திருவுளம்!

பூமிக்கொ ராறுதலை யாய்வந்து சரவணப்
பொய்கைதனில் விளையாடி யும்
புனிதர்க்கு மந்த்ரவுப தேசமொழி சொல்லியும்
போதனைச் சிறையில் வைத்தும்
தேமிக்க ஹரிஹரப் பிரமாதி கட்கும்
செருக்கமுடி யாவசுர னைத்
தேகங் கிழித்துவடி வேலினால் இருகூறு
செய்தமரர் சிறைதவிர்த் தும்
நேமிக்குள் அன்பரிட ருற்றசம யந்தனில்
நினைக்குமுன் வந்துதவி யும்
நிதமுமெய்த் துணையாய் விளங்கலால் உலகிலுனை
நிகரான தெய்வமுண் டோ
மாமிக்க தேன்பருகு பூங்கடம் பணியுமணி
மார்பனே மால்மருக னே
மயிலேறி விளையாடு குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே.

ப்ரவேசம். ஸுப்ரமண்யர் ஸ்வயரூபத்தில்.

ஸுப்ரமண்யர். ஹே! பெண்மணீ! இனி நீ கவலைப்பட வேண்டாம்! வேடனாய் வந்துன்னை வேண்டினவனும், கிழவனாய் வந்து கிட்டினவனும் நானே. நீ உன் இருப் பிடத்திற்குச் செல். கொஞ்ச காலம் உன்னைக் களவி யலிற் கூடி மகிழ்ந்து சீக்கிரத்திலேயே உன்னை ஆட் கொள்கின்றேன். [இருவரும் செல்கின்றனர்.]

# அங்கம் 3.

---

## களம். 2.

இடம். வள்ளியின் பள்ளியறை.

வள்ளி படுக்கையின்மீது உறக்கம் பிடிக்காமற் புரண்டுகொண் டிருக்கின்றாள். ஸமீபத்தில் வள்ளியின் ஸஹோதரரும் சேடியரும் அயர்ந்து நித்திரை செய்கின்றனர்.

வள்ளி. ஹா! நாதா! எப்பொழுதுவருவீரோ? வந்தெனக்கு மணம் தருவீரோ? இன்றிரவு வருவதாகக் கூறினீரே. இதுவரையிலும் காணேனே? இப்போதைக்கே எனக்கு ஓர் யுகமாகக் காண்கின்றதே! இன்னம் எத்தனை யுகங்கள் நானிப்படிக் கழிக்கவேண்டுமோ?

பூமி மெச்சிடுமண் ணுமலைக்கோர்துணை யானவன் மயில்
வானவன் ஒரு கானவன் எனப்
புனத்தைக்காக்குமந்தத் தினத்திலென்முன்வந்தமானவன்

சேம முற்றதணி காசலேசனையே தேடுதே மனம்
வாடுதே கால் தள் ளாடுதே இரு
செங்கை தங்கிநின்ற சங்கினங்கள் கழன் றோடுதே

தென்றலான புலி வந்து கோபமோடு சீறுதே தடு
மாறுதே இதழ் ஊறுதே மிக்க
தீமையாமிருளிற் காமலாகிரியும் மீறுதே

குன்றமாந் தனமி ரண்டும் மார்பில்விம்மிக்கொண்டதே தேமல்
மண்டதே வெப்புங் கண்டதே மலர்க்
கொம்புபோல மென்மருங்குலான துந்துவண்டதே

உள்ளம் மெல்லமெல்ல லீலைசெய்ய நினைந் துருகுதே முத்தம்
கருகுதே கண்ணீர் பெருகுதே என்றன்
உச்சிக்கேறிகாமப் பித்தம் இறுகிறென்று வருகுதே

வள்ள மேவு பசும் பாலுந்தேனும் அரு வருக்குதே கசந்
திருக்குதே துன்பம் பெருக்குதே வன்ன
வாருந் தாறு மாறுக் கிறவே தனமும் பருக்குதே

பாரமான கொங்கை யோரம் வேடனம்பு பாயுதே உடல்
தேயுதே மலர் தீயுதே கொடும்
பாவியான மதி ஆவி சோரவந்து காயுதே

மாரவேள் கணையின் கோரமானகாம வாதையே எனுந்
தீதையே தீரத் தூதையே சொல்லி
வாட்டந்தீர்குகனைகூட்டிவரக்காணேன்கோதையே.

மாலினி. அம்மா! ஏன் வீணே கலங்குகின்றாய்? உன் கண்கள் மையைமறந்தன; கைகள் வீணையைத் துறந்தன; விரல்கள் கூடற்சுழியை எண்ணி எண்ணி வாடின; கூந்தல் மலரை மறந்து மங்கின. இப்படி அலங்கோலமாகக் கலங்குவது உனக்கு அழகா?

வள்ளி. சேடீ! நான் என்னடிசெய்வேன்? ஐயோ? மதன் விடும் அக்நியாஸ்த்ரத்தை அணைக்கப் புருவவில்லினின்றும் வருணாஸ்த்ரம் புறப்படுவதுபோல் தாரைதாரையாய்க் கண்ணீர் பெருகுகின்றதே! தேகாத்யந்தம் உருகுகின்றதே! இடைவிடாமல் பெருமூச்சு வருகின்றதே! இவைகளையெல்லாம் நான் வெளியிற் காட்டக் கூடாதென்று எவ்வளவு அடக்க முயன்றாலும் என்னால் முடியவில்லையே.

மாலினி. அம்மா! இவைகளெல்லாம் ஒருவேளை விரகத்தால் ஏற்பட்ட வேதனைகளாயிருக்கும். இதோ, நான் அதற்குத் தகுந்த சைத்யோபசாரம் செய்கின்றேன். சற்று சயனித்துக் கண்ணைமூடு.

வள்ளி. ஐயோ, சேடி, நான் கண்ணுறங்கி என் கண்கள் மறுபடியும் தமது வஞ்சனையைக்காட்ட இடந்தரேன்.

இப்படி என்னோடு பழகி எனக்கு நன்மை செய்கிற வர்களைப்போன்று தீமைசெய்பவர்களை நான் பார்த்த தேயில்லை. என் துணைவர் அருகில் இல்லாதபோது இப்படி நீரைச்சொரியும் என் கண்கள் மூடித்திறந்தால் அத்திவ்வியரூபத்தைக் காட்டி மறைத்து என்னை வாட்டுகின்றதடி. ஆகையால் அவ்வித ஸ்வப்னாவஸ்தையைவிட இந்த ஜாக்ராவஸ்தையை எப்படியாவது ஸகித்து விடுகின்றேன். நான் கண்ணுறங்கும்படி மட்டும் கேளாதே.

மாலினி. வள்ளீ! இதோ முத்தும் சந்தனமும் ஸுத்தமான பனிநீரில் குழைத்துவைத்திருக்கின்றேன். இதை உன் தேகாத்யந்தம் அப்புகின்றேன். பிறகு உன்தாபமெல்லாம் நீங்கிவிடும். சயனித்துக்கொள்.

வள்ளி. [சயனித்து மார்பகத்தை நோக்கித் திடுக்கிட்டெழுந்து] ஐயோ! சேடி! இதோ பாரடி, என்னைக் கொல்ல நினைத்து மன்மதன் எய்த கமலமும் நீலோத்பலமும் என் மார்பில் அழுந்திக்கிடக்கின்றன. ஐயோ! அவைகளை எடுத்தெறிய மாட்டாயா?

மாலினி. வள்ளீ! அவைகள் நீ மார்மீது வடித்த கண்ணீர்த் துளிகளில் ப்ரதிபலிக்கும் முகக்கமலமும் நயனோத்பலமுமேயன்றி வேறல்ல. பயப்படாதே. இதோ உன் தாபமெல்லாம் தணியும். [அரைத்து வைத்திருக்கும் முத்தையும் சந்தனத்தையும் எடுத்துப் பூசுகின்றாள்.]

வள்ளி. சேடி! என்னடி செய்கின்றாய்? ஐயோ! ஏதோ அக்னியை வாரி அப்புகின்றாயே? உன்னைப்போன்ற அசடியை நான் பார்த்ததில்லையடி! கடல்நீர் காய்ந்து கொதித்தால் அவ்வெப்பத்தை மாற்றத் தண்ணீர் எங்

கேனும் உண்டா ? ஸகி ! இதோபாரடி ! நீ அரைத்துப் பூசிய முத்தும் சந்தனமும் என் உடல் வெப்பத்தால் நீறுகி என்னைப் பூதியணிந்த புராந்தகனைப்போ லாக்கி விட்டது.

மாலினி. அப்படித்தானுக்கட்டும். நீ சங்கரனுய் விட்டால் உருவில்லான் உனக்கு வெருவி உன்னிடம் நெருங்க மாட்டான். அதுபோகட்டும், வள்ளீ, நீ எங்கேசென் றிருந்தாய், யாரைக்கண்டாய், எப்படி இக்காதல் கொண்டாய்? என்னிடம் ஒளியாமற் சொல். பிறகு நான் உன் தாபத்தைப் போக்க வழிதேடுகின்றேன்.

வள்ளி. உண்மையாகவா? சொன்னுல் என் தாபத்தை நீக்கு வாயா? ஆனுல், சொல்கின்றேன் :

செந்தின்மாநக ரந்தனில் மேவிய
தேசிகனுமுரு கேசன் மயில்
வாசியி லேறுமுல் லாசன் சிறு
திங்களும்பண சங்கமாசுண
முந்துலங்கிய கங்கையாறொடு
செஞ்சடாடவி மீதணிவார்செவி
சேரன்முன் னேதுப தேசன் அடி
யார்தமை யாள்விசு வாசன்

எந்தநேரமும் வந்தனைசெய்தடி
யெண்ணும் அண்ணமலை தாசன் துதி
பண்ணுமெய்ஞ் ஞானவி லாசன் என்னே
டிந்தெழுந்து தயங்கு மாலையில்
வந்துவண்டு முழங்கு சோலையி
லின்ப சாகர மாகிய லீலைக
ளன்புடனே செய்தான் மானே அந்தச்
சம்ப்ரம மென்ன சொல் வேனே

மங்கைமார்பல ரும்புடைசூழ் தர
மாமலர் கொய்திடச் சென்றேன் அங்கோர்
பூமரத்தேதனி நின்றேன் சந்த்ர
மண்டலங்கலை வென்றவாநன
மைந்தொடொன்று மிருந்துவார் மது
வண்டலோடுக டம்பெனுமாரமும்
வாரமுந் தோன்றிடச் சேர்ந்தான் என
தேரும் பார்த்தே களி கூர்ந்தான்

பங்கஜாசன மெலுறை நான்முகப்
பாதகனுமலர்க் கைதான் கொண்டுன்
சோதியை யெப்படிச் செய்தான் அடி
பஞ்சராஞ்சினு மஞ்சசீரடி
கொஞ்சராஞ்சித வஞ்சியே புவி
பட்டுநீ நிலைநிற்க வொண்ணுதென்று
பன்மலர் மெத்தையொன் றிட்டான் பின்பு
மென்மெல வந்தென்கை தொட்டான்

மாலினி. என்ன! முருகக்கடவுளா உன்னை இவ்வாறு வந்து ஆட்கொண்டார்? நாங்களெல்லாம் எங்கு போயிருந்தோம், உன்னையவர் தனித்துக்காண? நான் நம்பவில்லையம்மா! ஒருவேளை இப்படி யெல்லாம் ஸ்வப்னத்தில் நடந்ததோ?

வள்ளி. போடி, வம்புக்காரி! ஒன்றும் தெரியாதவளைப் போல் என்வாயைக் கிளறுகின்றாயா?

மாலினி. பின்னை யென்ன? நான் அறியாமல் முருகக்கடவுள் எப்படி வந்துவிடுவார்?

வள்ளி. சொல்லுகின்றேன், கேள்:

மஞ்சுநிகர் குந்தள மின்னே சததளங்கள்விகஸிதம்செய்
வாரிஜாஸனத்தில் வாழ் பொன்னே செய்ய
வன்னமேஒளிர்சொன்னமேநடை அன்னமேயிடை பின்னமேபெற
வந்ததனபார வஞ்சியேஅதிவிருப்பத்துடனுரைக்கும்
வார்த்தையைக்கேளாசை மிஞ்சியே
அஞ்சு வயதான பருவம் தனிலெனது சிறுமனையில்
அங்கஜவேள் போல உருவம் பெற்றே
ஆடிய வனும் நாடிய புனத் தோடிய கலை தேடிய வனும்
ஆண்டியாகி யானைமா முகன் தனையழைத்துப்பயமுறுத்தி
ஆட்கொண்டவனுமெழிற் குகன்

மாலினி. என்ன, என்ன? இன்னொரு முறை நன்றாய் விளங்கும்படி சொல்.

வள்ளி. சேடீ! அன்று வேடனாய் வந்து மானைத் தேடிய வரும்,

மாலினி. ஊம்,

வள்ளி. பிறகு கிழப்பண்டாரமாய் வந்து யானையை வெருட்டியவரும்,

மாலினி ஊம், ஊம், அப்புறம்!

வள்ளி. போடி, வித்தைக்கள்ளி! ஊம், ஊம், என்று கதை கேட்கின்றாயா: ஐயோபாவம்! ஒன்றும் தெரியாது!

மாலினி. தெரிந்தால் கேட்பேனா? உண்மையாய்த் தெரியாது. வள்ளீ! இப்படியெல்லாம் வந்தவர்தானா முருகன்?

வள்ளி. ஆம், இப்படியெல்லாம் வந்தவர் தான்

திருமக ளுலாவும் இருபுய முராரி
திருமரு காமப் பெருமாள்காண்
ஜெகதல மும்வானும் மிகுதிபெ றபாடல்
தெரிதரு குமாரப் பெருமாள்காண்

மருவும டியார்கள் மனதில்வி ளையாடும்
மரகத மயூரப் பெருமாள்காண்
மணிதர ளம்வீசி யணியரு விசூழ
மருவுக திர்காமப் பெருமாள்காண்
அறவரை கணீறு படவசு ரர்மாள
அமர்பொரு தவீரப் பெருமாள்காண்
அரவுபி றைவாரி விரவுச டைவேணி
அமலனு பதேசப் பெருமாள்காண்
இருவினை யிலாத தருவினை விடாத
இமையவர் குலேசப் பெருமாள்காண்
இலகுசி லைவேடர் கொடியின திபார
இருதன விநோதப் பெருமாளே.

மாலினி. அப்படியா? ஆனால் நான் அவரை எப்படியாவது இங்கே அழைத்துக்கொண்டு வருகின்றேன். நீ சற்று சயனித்துக்கொள். இதோ, பார்! சந்திரனும் உதித்து உச்சிக்கு வந்துவிட்டான்! வெகுநாழிகையாயிற்று. இப்படி விழித்துக் கருத்தழிவது உனக்கே நன்று யிருக்கின்றதா?

வள்ளி. ஐயோ! மதியும் உதித்துவிட்டதா? மதியே! இப்படி நீ மணந்தார்க்குத் தண்கதிரும் தணந்தார்க்கு வெங்கதிரும் வழங்குவது அம்ருதத்தோடும் விஷத்தோடும் பிறந்தகுணந்தானோ? சந்த்ரா! பிறந்த இடத்தின் பெருமையையெல்லாம் நீ மறந்துவிட்டது துஷ்ட ஸஹவாஸத்தின் மஹிமையோ? உன்னைச் சொல்லி என்னபயன்? வடவாமுகாக்னியோடு பிறந்தாய். பரமசிவன் நெற்றிக்கண்ணோடு பழகி இருந்தாய். பாம்பின் வயிற்றில் மறைந்திருந்தாய். இப்படிப்பட்ட நீ அக்னியைக் கக்குவது ஓர் ஆச்சர்யமா? ஐயோ, திருப்பாற்கட

வில் கற்பகத்தருக்களோடும், கௌஸ்துபமணியோடும், இருநிதியோடும், திருமகளோடும், அம்ருதத்தோடும் பிறந்தாயே! இந்த நல்ல ஸஹவாஸத்தின் வாஸனை உன்னிடம் கொஞ்சங்கூட இல்லாமற்போனது பெண்கள் செய்த பாபமோ! அடே! மன்மதனுறவைமட்டும் விட்டொழித்தால் உன்னை நிகர்ப்பவரும் இவ்வுலகத்தில் இருப்பார்களா! சேடி, இப்படிப்பட்ட வெம்மதியைத் தண்மதியென்று சொல்வது என்ன விபரீதமடி? ஊம், உலகிற் பல உயிர்களைக் கொல்லும் யமனைத் தர்மராஜன் என்று சொல்கிறவர்கள் இதனைத் தண்மதியென்று சொல்வது ஓர் ஆச்சர்யமா? சேடி! என்னைத் தாமரை யணையிற் கிடத்திப் பனிநீர் தெளித்துச் சந்தனத்தைப் பூசிக் காமாக்னியை அவிக்க வீணாய் முயல்கின்றாயே. இச்சந்திரன் குளிரமட்டும் மருந்தறிவாயானால் வடவா முகாக்னியையும் அவிக்கலாமடி. ஹே, மதியே! உன் வீரத்தையெல்லாம் மெல்லியரிடந்தானா காட்டவேண்டும்? என் ப்ராணநாதரிடம் உன் பௌருஷம செல்லவில்லையா? நாங்களிருவரும் சேர்ந்திருக்கும்போது வந்தால் உன்னை எவ்வளவோ கொண்டாடுவோ மல்லவா? அடி சேடி! உன்மனமும் என்னளவிற் கல்லாய்ப் போயிற்றா! என் ப்ராணநாதரிடம் சென்று என் துயரைக் கூறமாட்டாயா?

மாலினி. அம்மா! என்னவென்று போய்க் கூறவேண்டும்?

வள்ளி. சொல்கின்றேன் கேள்.

[ராகம்-உசேனி. தாளம்-ரூபகம்.] 67730

பல்லவி.

இன்றே வரச்சொன்னாள் என்றே சொல்வாய் மின்னாள்.

அநுபல்லவி.

குன்றே குலவுந் திருக்கழுகாசலக்
கோயில்கொண்ட குக ஷண்முகனே உன்னைக்
குறக்குலத் தரசிளங்குமாரி
மனதன்புடனே தன்னை மருவும்படியாயுன்னை (இ)

சரணம்.

கந்தமேவிய மந்தமாந் தென்றற்
காற்றெனுந் தேரி லேறி மிகு
கந்துகமதக்கரியெனச்செல்லும்
கன்னிப்படையுடன் மீறி
சந்திரவட்டக்குடையுடன் புஷ்ப
சாம் மழையெனத் தூறி மாந்
தளிர்க்குயில்க ளங்குரிக்கவே யுத்த
சன்னத்தனுகவே சீறி
வந்திருக்கும் மதப்பயலை வாட்ட
மாதர் விழியாள் மனத்துயர் ஓட்ட
சிந்தையி லன்புட னின்பத்தை ஊட்ட
சித்திரமெத்தைமேல்வைத்துத்தாலாட்ட
திகழும் சுந்தர வல்லி
மிகவும் வந்தனம் சொல்லி (இ)

பருவ மங்கைய ரிருக்கும் செருக்கைப்
பார்த்துப் பார்த் துள்ளம் வாடி ராப்
பகல் நித்திரை யில்லாமல் நீ வரும்
பாதையின்மேல் விழி நாடி
ஒருநொடியளவும் சயனித்தி
ராமல் விரகக்கூத் தாடி என்
உயிர்த்துணைவ னின்னம் வரக்காணேனென்
றோல மிட்டுன்றனைத் தேடி

இருகச்சின் வழியே கனல் நீங்க
எந்நேரமு முன்ற னின்பத்திற் றேங்க
தருக்கும்அநங்கன்சண்டைவிட் டேங்க
சக்களத்திகளின் முன்றானு மோங்க
தருமிங்கித ஸத்குணமே
மிகுமுன்றனை யிக்கணமே (இ)

மாலினி. அம்மா! அப்படியே போய்ச் சொல்லுகின்றேன்.

வள்ளி. நீ வரும் வரையில் நான் இவ்விடத்திலேயே படுத்துக்கொண்டிருக்கின்றேன். எப்படியாவது அவரைக் கையோடு அழைத்துக் கொண்டு வந்து சேர்.

மாலினி. அப்படியே ஆகட்டும். [செல்கின்றாள்]

வள்ளி. [படுத்துறங்கி, கனவு காண்கின்றாள்.] நாதா இதென்ன விளையாட்டு? இப்படி என்னைக் கசக்கிப் பிழிவது நன்றாயிருக்கின்றதா?

பாளைவாய் கமுகில்வந்தூர் வாளைபாய் வயல்சூழ்செந்தூர்
பாலனம் புரியவந்த புண்ணியா போகம்
காலையும் செய்கின்றாய் முன்பின் எண்ணியா

வேளையோ விடிந்ததையா நாளைவாரே னென்றுகையை
விட்டிடென்றாலும் விடாமற் பிடிக்கிறாய் பாலை
ஒட்டவே மடுவரிந்து குடிக்கிறாய்

உன்னையும் விவாகமில்லா என்னையுமே அன்னைகண்டால்
ஒன்றும் சொல்விடாளோ அடா பாவியே இன்று
தின்றிடுவேன் என்பாள் பச்சை நாவியே

சன்னைசாடை யாகவந்தென் றன்னையணைவாய் நீயென்று
சாற்றிடுமென் னுண்மையான சொல்லையே விட்டுக்
கூற்றுவன்போல் வந்தாயென்ன தொல்லையே

சாறுசேர் கரும்புருசி யாயிருந்தா லும்வேரோடே
தான் பறித்துத் தின்னுவது ஞாயமோ முழு
ஆண்பிள்ளைக் கிதுதான் ஸம்ப்ர தாயமோ
நூறுதர மாறிமாறி வேறுவேறு லீலைசெய்தால்
நோகுமோ நோகாதோ எனக் குள்ளமே கொண்டு
போகுமோ கிணற்று நீரை வெள்ளமே.

ஹா, நாதா, இதற்குள் எங்கு மறைந்தீர்? சீ! என்ன இது! ஸ்வப்னுவஸ்தையா, அல்லது மதனுவஸ்தையா? அடே மதனு! பதறாதேடா! இன்னம் ஒரு நிமிஷத்தில் என் ப்ராணநாதர் வந்து விடுவாரடா! உருவில்லாதிருக்கும்போதே பெண்களை இந்தப் பாடு படுத்தும் நீ உருவத்தோடிருந்தால் இன்னம் என்ன செய்ய மாட்டாய்? ப்ரம்மன் உனக்குப் புஷ்பாயுதத்தைக் கொடுத்திருக்கும்போதே இப்படிப் புலம்பச் செய்கின்றுயெனின் வஜ்ராயுதத்தைக் கொடுத்திருந்தால் இன்னம் எவ்வளவு வருத்துவாயோ தெரியவில்லை. அடே பாதகா! இது ஜடையல்லடா, கூந்தலின் பின்னல். கண்டக்கறுப்பு விஷமல்லடா, கஸ்தூரி. இது பூசும் வெண்ணீறல்லடா, உடல் வெளுப்பு. நான் சிவனல்லடா, யுவதி. வீணே என்னிடத்தில் என் போர்செய்கின்றுய்? அந்தோ! நாதா! இவ்வருத்தமெல்லாம் உமக்குத் தெரிந்திருந்தும் என்னை வந்தாட்கொள்ள ஏனிந்தத் தாமதம்? நான் உமக்கு என்ன அபராதம் செய்தேன்.

[ராகம்-ப்யாக். தாளம்-ஆதி.]

பல்லவி.

இத்தனை கோப மாகுமா

அநுபல்லவி.

எத்தனை நயந்தும் உன்சித்த மிரங்காமல் (இ)

சரணம்.

பக்திவினயத்துட னுத்தமனே நானிருந்தும்
அத்தனையும் உன்மனதில் இத்தனை பழிப்பானதும்
பெற்றவர் செய்தபிழையோ குற்றமற்ற என்றன்மீது (இ)

ஆறுதவில்லாத என்மேல் ஆறுமுகத்தோடிருந்தும்
வேறுமுகமாயிருத்தல் யாருடைய போதனையோ
சூரனை வதைத்த வேலா சொந்தமான என்றன்மீது (இ)

ப்ரவேசம். ஸுப்ரமண்யர்.

ஸுப்ரமண்யர். இச்சை கொண்டவர்க்கு லஜ்ஜைபயமொன்று மில்லை என்பதற்கேற்ப அச்சமும் நாணமும் போக்கிக் கள்ளனைப்போல் காவல் பலவற்றையும் கடந்து வள்ளியை வேறெங்கும் காணமல் இவ்விடத்திற்கு வந்து சேர்ந்தேன். இதுதான் அம்மதுமலர்க்குழல் வள்ளியின் பள்ளியறை போலும்? ஆஹா! தாரகை நடுவில் தண் மதி போலவும் ஆடி ஓய்ந்த மயில் போலவும் என்னுருயிர்க் காதலி அதோ அயர்ந்து நித்திரை செய்கின்றாள்! கண்மணி! எதோ, கண்ணைத் திறந்துபார்!

வள்ளி. [திடுக்கிட்டெழுந்து] ஹா! நாதா! மெள்ளப் பேசும். அருகில் என் அண்ணன்மார் படுத்துறங்குகின்றார்கள். விழித்துக்கொள்ளப்போகின்றார்கள். நாதா! இங்கிருப்பதை எப்படித் தெரிந்து கொண்டீர்? இவ்வளவு காவலையும் மீறி எப்படி இங்கு வந்தீர்?

ஸுப்ரமண்யர். கண்ணே! உன் ஆவல் மிகுந்த எனக்கு இக்காவல் ஒரு தடையா? ஆசைநோய் கொண்டால் மடையருக்கும் அறிவு கூர்மையாகு மெனின் நான் உன்னிருப்பிடத்தைத் தெரிந்துகொள்வது ஓர் ஆச்சர்யமா

வள்ளி. நாதா? இனி நான் ஒரு நிமிஷமும் இங்கிருக்க ஸம்மதியேன். என்னைத் தங்களுடனே அழைத்துக்கொண்டுபோக வேண்டும்.

ஸுப்ரமண்யர். வள்ளீ! அப்படியே. புறப்படு போவோம்.

வள்ளி. நாதா! இதோ ஒரு சிறிய வேடிக்கை. என் அண்ணன் காவல் செய்யும் அழகைச் சற்று பாரும். [படுத்துறங்குகிறவன் கையிலிருந்த ஒரு கழியை எடுத்துத் தோளில் வைத்துவிட்டுச் செல்கின்றாள்]

ப்ரவேசம். நம்பிராஜன்.

நம்பிராஜன். என்ன ஆச்சர்யம்! என்னைத் திடுக்கிட்டெழுந்து ஓடி வரும்படிசெய்த ஒலிமுழக்கம் இவர்களை எழுப்பாததென்ன விந்தை! இவர்கள் அயர்ந்து நித்திரை செய்கின்றார்கள்! ஐயோ! குழந்தை வள்ளியைக்காணோமே! ஒலி முழக்கத்துக் கஞ்சி எங்கேனும் ஓடி ஒளித்தனளோ! ஐயோ! எப்படி வெளியே சென்றிருப்பாள்? பூட்டிய கதவுகள் பூட்டியபடி இருந்தனவே. என்ன மாயமோ தெரியவில்லையே! மைந்தர்காள்! எழுந்திருங்கள்! பெரிய ஆபத்து வந்துவிட்டது. குழந்தை வள்ளியைக் காணேன். என்ன செய்வேன்?

கிள்ளிவளவன்.—[விழித்துக்கொண்டு] என்ன? வள்ளியைக் காணோமா? கோட்டைக் கதவின் சாவி என்னிடத்தில் தானே இருக்கின்றது? யார் அதைக் கடந்து வந்திருக்கக்கூடும்! அடே ஸேவகா, எழுந்திரு! என்ன உறக்கம்? விழித்துக்கொள்! குழந்தை வள்ளியைக் காணோம். உனக்கேதேனும் தெரியுமா? —என்ன தேடுகின்றாய்?

ஸேவகன். ஸரி, தெரிந்தது! வள்ளியைக் கொண்டுபோனவன் எனக்குத் தெரிந்து விட்டது.

நம்பிராஜன். என்ன தெரிந்தது! யார் கொண்டுபோனவன்?

ஸேவகன். அவன் தான்! ஸந்தேகமில்லை.

நம்பிராஜன். எவன் தான்?

ஸேவகன். என்னுடைய மூட்டையைத் திருடிக்கொண்டு போனவன் தான்.

இளந்திரையன். பிதா! இவனுடன் பேசிக்கொண்டிருப்பதிற் பயனில்லை. வள்ளியைக் கொண்டுசென்ற கள்ளனை உடனே பின்பற்றிச் செல்வோம் வாருங்கள்.

[எல்லோரும் செல்கின்றனர்]

---

# அங்கம் 3.

## களம் 3.

இடம். அடர்ந்த காடு.

ப்ரவேசம். வள்ளியும் ஸுப்ரமண்யரும்.

வள்ளி. நாதா! என்னைப்போன்ற அபராதிகளும் லோகத்தில் இருக்கின்றார்களா? நாரதர்முன் உம்மை மனமாரச் சொல்லாவிட்டாலும் வாயார இகழ்ந்துரைத்தேன். வேடனாய் வந்தபோது உம்மைப் பலவாறு சினந்து பேசினேன். உமது பெருமையை அறிந்தபின்னும் நானாக உம்முடைய ஸந்நிதானத்தை வந்தடைந்து உம்மை வருத்தாமல் உமது பாதங்கள் நோவ காடு மேடெல்லாம் கடந்து வந்து எனக்குக் காட்சியைக் கொடுத்து ஆட்கொள்ளும் கஷ்டத்துக்கு உம்மை ஆளாக்கினேன்.

ஸுப்ரமண்யர். கண்ணே! உனக்கு என்னிடத்துள்ள பக்தியும் ச்ரத்தையும் நன்கு உணர்ந்திருந்தும் நாரதர் வாக்கால் கட்டுண்டு என் ஸ்வய ரூபத்தை முதலிலேயே உனக்குக் காட்டி உன்னைக் கொண்டு செல்லாமல் இது வரையில் தாமதித்த நானல்லவோ அபராதி? அன்றியும், இரவும் பகலும் என்னை எதிர்பார்த்துக் கண் பூத்துக் காத்திருந்து கண்மூடாக் கலக்கத்துக் காளாகிய உன்னை உன் மெல்லிய பாதங்கள் நோவ இக்கல்லிலும் முள்ளிலும் நடக்கவைத்தேன்.

வள்ளி. நாதா! நன்றாய்ச் சொன்னீர்! நாயகனை யெதிர்பார்த்து நயனமலர் மூடாமல் விழித்துக்கொண்டிருப்பதினும் மேலான இன்பம் இப்பூலோகத்தி லிருக்கின்றதா? அன்றியும் நீர் அருகிலிருக்கும்போது எனக்கு

என்ன துன்பம்? எல்லாம் எனக்கு இன்பமாகவன்றோ தோன்றும்? நான் வந்த மார்க்கம் கல்லும் முள்ளும் கலந்துள்ள தென்று உமது உரையினுல் தெரிந்து கொண்டேனே அன்றி, என் உணர்ச்சியால் தெரிந்து கொள்ளவில்லை. நான் பஞ்சின்மீதும் மலரின்மீதுந் தான் நடந்து வந்தேனென்று இதுவரையில் எண்ணி இருந்தேன்.

ஸுப்ரமண்யர். வள்ளீ! ஆனுல் ஒன்று, சற்று முன் உன்னை நீ அபராதி யென்றல்லவோ சொல்லிக்கொண்டாய்? நான் அவ்வாறு நினைக்கவில்லை. உபகாரி யென்றே எண்ணியிருக்கின்றேன். ஏன் தெரியுமா? லோகத்தில் என்னைப் பூஷிப்பவர்களே அன்றி தூஷிப்பவர்களை நான் இதுவரையில் அறிந்ததில்லை. உன்னுடைய நிந்தா ஸ்துதியால் அந்தக் குறையும் நீங்கினேன். மேலும், நான் என் நிஜரூபத்தில் வந்திருந்தால் நீ யென்னைச் சினந்து சீறவும், அதட்டி அணைக்கவும், பிணங்கியிணங்கவும் நேர்ந்திருக்குமா? இப்படிப்பட்ட பேரின்பத்தை எனக்குக் கூட்டிவைத்த நாரதருக்கு நான் என்ன கைம்மாறு செய்யப்போகின்றேன்.

வள்ளி. நாதா! அதோ என்னமோ யுத்தகோலாகலம் கேட்கின்றது. என்னுடைய பிதா முதலானவர்கள் தான் வருகின்றூர்கள் போலும்.

ஸுப்ரமண்யர். வள்ளீ! நீ சற்று மறைந்து இரு. நானொரு வேடிக்கை செய்கின்றேன்.

ப்ரவேசம். நம்பிராஜன், மந்திரி, ஸேவகன், புதல்வர் முதலானவர்.

நம்பிராஜன். மந்திரீ! அதோ இருக்கின்றனள் வள்ளி.

நலங்கிள்ளி. பிதா! அருகில் யாரோ ஒருவன் இருக்கின்றுன்.

கிள்ளிவளவன். பிதா! இதோ இக்கணையால் அவனுடலைத் தொளைக்கின்றேன். உத்திரவுதானா?

நம்பிராஜன். குமாரா! அவன் அருகில் நமது குழந்தை வள்ளி நின்றுகொண்டிருப்பதனால் அவளுக்கு ஏதேனும் அபாயம் நேரிடும். ஆகையால் பதறாதே.

இளந்திரையன். பிதா! அருகிற் சென்று அவனை 'யோக்யா!' என்றழைத்தாற் போதும். அந்தச் சொல்லம்பினும் கொடியதா நமது வில்லம்பு.

ஸேவகன். அம்மா! இப்படியும் செய்யலாமா? அடே! அயோக்யா! வள்ளியைத் திருடிக்கொண்டு வந்து விட்டது மல்லாமல் என்னுடைய மூட்டையையு மல்லவா திருடிக்கொண்டு வந்துவிட்டாய்?

நம்பிராஜன். அடே! அர்த்த ராத்ரியில் என் வீடேறி வந்து கள்ளனைப்போல் என் குழந்தை வள்ளியை மயக்கிக் கொண்டு வந்து விட்டாயல்லவா? வா யுத்தத்திற்கு.

[வள்ளி செல்கின்றாள். ஸுப்ரமண்யர் ஒவ்வொருவராக எதிர்த்துச் சண்டை செய்து அவர்களை மூர்ச்சையடையச் செய்து பிறகு ஸேவகனை எதிர்க்கின்றார்.]

ஸுப்ரமண்யர். அடே! எங்கே ஓடிப் பதுங்குகின்றாய்?

ஸேவகன். ஆனால், என்ன செய்யவேண்டு மென்கின்றாய்? என்னோடு சண்டைக்கு நிற்கின்றாயா?

ஸுப்ரமண்யர். ஆம்.

ஸேவகன். ஆனால் சண்டைக்கு நில்.

ஸுப்ரமண்யர். [வேலாயுதத்தை ஓங்குகின்றார்.]

ஸேவகன். அடேடே. இரு இரு. அதென்ன கையிலென்னமோ எடுக்கின்றாயே?

ஸுப்ரமண்யர். இதுதான் வேலாயுதம்.

ஸேவகன். ஏண்டா! சண்டைக்கு நிற்கின்றேன் என்று சொல்லிவிட்டு என்னமோ ஆர்ப்பாட்டம் எல்லாம் செய்கின்றாயே! முதலில் எனக்கு ஸரியாய் உன்னால் ஒரிடத்தில் அசைவற்று நிற்க முடியவில்லையே. நான் ஓட ஆரம்பித்தால் நீ என்ன ஓடப்போகின்றாயோ தெரியவில்லை.

ஸுப்ரமண்யர். அடே, பரிஹாஸவார்த்தை இருக்கட்டும். எடுத்துக்கொள் ஆயுதத்தை.

ஸேவகன். ஆனால், இரு இதோ எடுத்துக்கொள்கின்றேன். ஊம், ஸரி.

ஸுப்ரமண்யர். என்னடா இது? இதென்ன ஆயுதம்?

ஸேவகன். இதுவா? இதுதான் தினையளக்கும் மரக்கால். உனை யளக்கக் கொண்டுவந்தேன். நில், ஒரு கை பார்க்கின்றேன். [ஓடி ஓடி சண்டை செய்பவன்போல் நடித்து] அடே டே டே, இரு, இரு, இரு சொல்கின்றேன். நான் இங்கு யுத்தம் செய்யமாட்டேன்.

ஸுப்ரமண்யர். ஏன்?

ஸேவகன். நான் என்னமோ சண்டையிற் சாகப்போகின்றேன். கீழே விழவும் இடமில்லாமல் இங்கெல்லாம் பிணக்காடாய் அடித்துத் தள்ளிவிட்டாயே, பிணத்தின் மேல் பிணம் விழுந்தால் தீட்டல்லவா?

ஸுப்ரமண்யர். அடே, இவ்வித வேடிக்கை வார்த்தைகளைக் கேட்டு விட்டுவிடுவேனென்று எண்ணாதே.

ஸேவகன். ஆனால், இரு, கீழே விழ ஒரிடத்தை முதலிலேயே தேடிக்கொள்கின்றேன். ஸரி. [சண்டையை அபி

நயித்துக் கீழே விழுகிறவன் போல் படுத்துக்கொள்கிறான். வள்ளி வருகின்றாள்.]

வள்ளி. நாதா! என்ன இது? உம்முடைய வல்லமைக்கு இவர்கள் எவ்வளவு? இவர்களை எழுப்பி உமது காட்சியைத் தந்து அநுக்ரஹம் செய்து அனுப்பிவிடும்.

ஸுப்ரமண்யர். கண்ணே! அப்படியே. [மறைகின்றார்]

ஸேவகன். அடே, முதலில் என்னை எழுப்படா. [எழுந்து ஸுப்ரமண்யரைக்காணாது] தெரியும் அவனுக்கு, எழுந்தால் என்னை எதிர்க்முடியாதென்று. ஆகையால் தான் ஓடிப்போய் விட்டான். அம்மா, வள்ளீ! வாழைக்குத் தானீன்ற காய் கூற்றமாவது போல் தன்னுடைய அந்தியகாலத்துக்குத்தான் உன் தந்தை தவம் செய்து உன்னை மகளாய் அடையப்பெற்றார் போலும். நல்ல கீர்த்தியைத் தேடி வைத்தாய்!

ப்ரவேசம். ஸுப்ரமண்யர் நிஜரூபத்துடன்

வள்ளி. நாதா!

ஸுப்ரமண்யர். கண்ணே! இதோ எழுப்பி விட்டேன். நம்பீ எழுந்திரு. இதோ, உன் மந்திரி மைந்தர்களையும் எழுப்பினேன். நான் தான் முருகன்.

ஸேவகன். உமக்கு மருகன்.

நம்பிராஜன். அப்படியா? [கீழே விழுந்து நமஸ்கரிக்கின்றான்]

எழுகுநிறை நாபி அரிபிரமர் ஜோதி
இலகுமரன் மூவர் முதலானோர்
இறைவியெனு மாதி பரைமுலையி னூறி
எழுமமிர்த நாறு கனிவாயா

புழுகொழுகு காழி கவுணியரில் ஞான
  புனிதனென எடு  தமிழாலே
 புனலிலெதிர் ஏற சமணர்கழு வேற
  பொருதகவி வீர  குருநாதா
மழுவுழைக பால டமரகத்ரிசூல
  மணிகரவி நோத  ரருள்பாலா
 மலரயனை நீடு சிறைசெய்தவன் வேலே
  வளமைபெற வேசெய்  முருகோனே
கழுகுதொழு வேத கிரிசிகரி வீறு
  கதிருலவு வாசல்  நிறைவானோர்
 கடலொலிய தான மறைதமிழ்க ளோது
  கதலிவன மேவு  பெருமாளே.

அண்ணலே குமரேச வள்ளலே! எங்களுக்கு அறிவித்திருந்தால் உமக்கே உரியவளென்று வளர்த்து வரும் வள்ளியை நாங்களே உம்முடைய ஸந்நிதானத்திற் கொண்டுவந்து சேர்த்திருக்கமாட்டோமா? தாம் இவ்வளவு ச்ரமப்படவேண்டுமா? இந்நடுக்காட்டில் நாங்கள் தங்கள் விவாகத்தை எப்படி விமரிசையாய் நடத்திக் கொண்டாடுவோம்.

ப்ரவேசம். நாரதர்.

நாரதர். ஆஹா! என்ன கண்கொள்ளாச் சேவை!

நாவேறு பாமணத்த பாதார மேநினைத்து
  நாலாறு நாலுபற்று  வகையான
 நாலாரு மாகமத்தி னூலாய ஞானமுத்தி
  நாடோறு நானுரைத்த  நெறியாக
நீவேறெ னாதிருக்க நான்வேறெ னாதிருக்க
  நேராக வாழ்வதற்கு  னருள்கூர
 நீடார்ச டாதரத்தின் மீதேப ராபரத்தை
  நீகாணெ னாவனைச்சொல்  அருள்வாயே

சேவேறு மீசர்சுற்ற மாஞான போதபுத்தி
சீராக வேயுரைத்த குருநாதா
தேரார்கள் நாடுசுட்ட சூரார்கள் மாளவெட்டு
தீராகு காகுறத்தி மணவாளா
காவேரி நேர்வடக்கி லேவாவி பூமணத்த
காவார்சு வாமி வெற்பின் முருகோனே
கார்போலு மேனிபெற்ற மாகாளி வாலைசக்தி
காமாரி வாமிபெற்ற பெருமாளே.

வள்ளீ ! யாருடைய சபதம் நிறைவேறிற்று ?

வள்ளி. என்னுடைய சபதந்தான்.

ஸேவகன். இவ்வளவும் தங்களுடைய வேலைதானு ?

நாரதர். வள்ளீ ! அதெப்படி, உன் சபதம் நிறைவேறிற்று ?

வள்ளி. நான் என்ன சொன்னேன் ? நீரே நாரதரானல் அப்படிச் செய்யவேண்டும் என்று கூறினேன்.

நாரதர். வள்ளீ ! இப்பொழுது இப்படிச் சொல்லாவிட்டால் எப்படி ? புத்திசாலியாய்த் தப்பித்துக்கொண்டாய். நானே உனக்கு இப்படிச் சொல்ல சொல்லிக்கொடுக்க வேண்டு மேன்றிருந்தேன். அந்த மட்டும் நீயே தெரிந்துகொண்டாய்.

ஸேவகன். எல்லாம் அவ்விடத்து அனுக்ரஹம் தான்.

நாரதர். நம்பிராஜா ! இந்த ஸம்பவம் உனக்கு ஸந்தோஷகரமானது தானே ? வள்ளீ, இதோ, மணமாலை ! அவர் கழுத்திலிடு.

ஸேவகன். ஸ்வாமீ, புரோஹிதத்துக்கும் ஸித்தமாய் வந்துவிட்டாற் போலிருக்கின்றது ? ஸரி, நடக்கட்டும்.

[வள்ளியும் ஸுப்ரமண்யரும் ஒருவருக்கொருவர் மாலையிடுகின்றார்கள்.]

நம்பிராஜன். ஸ்வாமீ! எங்களை வந்தாட்கொண்டதற் கடையாளமாய் எங்கள் நாட்டுத் தேனையும் தினைமாவையும் தங்களுக்கினிய உணவாக நைவேத்யத்தில் அங்கீகரிக்க வேண்டும்.

ஸுப்ரமண்யர். அப்படியே.

ஸேவகன். ஸ்வாமீ, அவ்வாறே என்னை ஆட்கொண்டதற்கு அடையாளமாய் மாலினியை எனக்கு மணம் செய்து வைக்கவேண்டும்.

ஸுப்ரமண்யர். அப்படியே. நாரதா! எல்லாம் உன் இஷ்டப்படி நடந்ததல்லவா? இனி நான் போய்வரலாமா? நம்பீ! நான் போய் வருகின்றேன்.

எல்லோரும். எல்லாம் ஈச்வரானுக்ரஹம்!

நிராமய புராதன பராபர வராம்ருத
நிராகுல சிராதிகப் ப்ரபையாகி
நிராசசி வராஜத வராஜர்கள் பராவிய
நிராயுத புராரியச் சுதன்வேதா
சுராலய தராதல சராசர பிராணிகள்
சொரூபமி வராதியைக் குறியாமே
துரால்புகழ் பராதின கராவுள பராமுக
துரோகரை தராசையுற் றடைவேனோ
இராகவ இராமன்முன் இராவண இராவண
இராவண இராஜனுட் குடன்மாய்வென்
றிராகன்ம லராள்நிஜ புராணர்கு மராகலை
யிராஜசொ லவாரணர்க் ளையோனே
விராகவ சுராதிப பொராதுத விரதடு
விராயண பராயணச் செவ்வூரா
விராவிய குராவகில் பராரைமு திராவளர்
விராலிம லைராஜதப் பெருமாளே.

[எல்லோரும் செல்கின்றார்கள்]

---

## குறிப்பு.

37-ம் பக்கத்தில் 'நாதவிந்து கலாதீநமோநம' என்னும் திருப்புகழில் 'ஞானசம்பு'-'பூமியந்தரி'-'பார்சூரர்'-'தூபரம் பரைசீலா' என்னுமிடத்து முறையே 'நாமசம்பு'-'போக அந்தரி'-'பரசூரர்'-'தூய அம்பலலீலா' என்னும் பாடபேதங்களை அமைத்துக் கொள்ளவும்.